உ 1766

சிவமயம்.

திருக்கோவையார்.

சைவ சமயாசாரியராகிய

மாணிக்கவாசகசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது

மதுரையாசிரியர் பாரத்துவாசி

நச்சினார்க்கினியருரையோடு

இராமநாதபுர ஜமீந்தாரவர்களின்

மாதேஜராகிய ம-ா-ா-ி-ஸ்ரீ

பொன்னுச்சாமித்தேவரவர்கள்

கேட்டுக்கொண்டபடி,

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து,

சென்னபட்டணம்

முத்தமிழ்விளக்கவச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சௌத்திரிரூல் ஐப்பசிமீ
Registered Copyright.

சிவமயம்.

நம்பியாண்டார்நம்பி.

வருவாசகத்தினின்முற்றுணர்ந்தோனைவண்டிலைமல்லைத் *
திருவாதவூர்ச்சிவபாத்தியன்செய்திருச்சிற்றம்பலப் *
பொருளார்ந்தருதிருக்கோவைகண்டேயுமற்றப்பொருளைத் *
தெருளாதவுளத்தவர்கவிபாடிச்சிரிப்பிப்பரோ. *

அபிபுததர்.

உருவாருந் தமிழ்ச்சங்கத் தடம்பொய்கைத் தோன்றி *
யுயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான வொளிகையுடைத் தாகி *
மருவாருங் கிளவியிதழ் தாளுறுகி *
மதுப்பொருள்வாய் மதிப்புலவர் வண்டாயுண்ணத் *
தருவாரும் புலியூரி னுலகுய்யக் குனிப்போன் *
றடங்கருணை யெனுமிரவி தன்கதிரா லலருந் *
திருவாத வூராளி திருச்சிற்றம் பலவன் *
திருவழித்தா மரைச்சார்த்துந் திருவளர்தா மரையே. *

இலக்கணக்கொத்துரை.

" பல்காற் பழகினுந் தெரியா வுளவேற் *
றொல்காப் பியத்திரு வள்ளுவர் கோவையார் *
மூன்றினு முழங்கு மாண்டிரு மிலையேல் *
வடமொழி வெளிபெற வழங்கு மெங்க. *

திருவைக் கோவைக்குங் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற்சி வனேயென்பது திண்ணம். அன்றியும், அழகியதிருச்சிற்றம்பல முடையார் அவர் வாக்கிற் கலந்திருந்து அருமைத் திருக்கையா லெழுதினார். அப்பெருமையை நோக்காது, சிந்தாமணி, சிலப்ப திகாரம், மணிமேகலை, சங்கப்பாட்டு, கொங்குவேண்மாக்கதை மு தலியவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோடொன்றாக்குவர். அங்

[illegible]மமையாது, இலக்கணமாவது தொல்காப்பியமொன்று மே செய்யுளாவது திருவள்ளுவரொன்றுமே இவ்விரண்டும் நீங் களான இலக்கணவிலக்கியமெல்லாம் ஒன்றற்கொன்று பெருமை [illegible] [illegible] ஒன்றாகொள்வாரொன்பது தோன்ற, இம்முறை [illegible] அவரை யப் பொதுவாக்கினும் அவர் அதுமட்டோ, [illegible] இலக்கணங்களையும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், [illegible], சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், பட்டணத் [illegible] இலக்கியங்களையும் ஓர்பொருளா [illegible], [illegible], [illegible], அகப்பொருள், காரிகை, அல [illegible] இலக்கணங்களையும், பதிற்றுப்பாட்டு, எட்டுத்தொ [illegible] இலக்கணங்களை, [illegible], நளவெண்பாவை, அரிச்சந் [illegible] முதலான இலக்கியங்களையும் ஓர்பொருளாகவெண்ணி [illegible] கழிப்பர். இவைகளிருக்க [illegible] அவைகளை விரு [illegible] விருப்பானது வேறுபலவற்றை விரும்புதலைப்போல [illegible] ஏதுவாகுமென்க.

பிழைதிருத்தல்.

பக்கம்	வரி	பிழை	திருத்தல்
	௰	[illegible]	[illegible]
௨	௧	[illegible]	[illegible]
௪	௧௧	[illegible]	[illegible]
[illegible]	௧௧	[illegible]	[illegible]
[illegible]	௨	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	௨	[illegible]	[illegible]

முற்றிற்று.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

வேதாகம சித்தாந்த

சைவசமயாசாரிய பீடமாய் விளங்காநின்ற

திருவாவடுதுறையாதீனவித்துவான்

தாண்டவராயசுவாமிகள்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

நிலமகள் முகத்தி னிலவுறு மியாணர்த் *
திலகமென் றுணர்க்குந் தென்னா டதனிற் *
சீர்மலி புகலிச் சிவபிரா னருளா *
லேர்மலி சிவவயி னிணைமுலைப் பாலெனும் *
பரஞா னந்தனைப் பரிவொடும் பருகி *
யுரவுநீர் ஞால முணர்ந்திய தவத்தாற் *
றோடெழு வாயிற் றோன்றுபு துலங்கும் *
பீடிசால் பதிகப் பெயர்பெற வுமிழ்ந்த *
ஞானசம் பந்த நற்றமிழ்ப் பெருமா *
னீனசம் பந்த விருட்சமண் பொருட்டா *
லருடிருப் பாசுர வருந்தமிழ் மறையினைத் *
தெருள்படப் பயின்று தெய்வவை திகழுஞ் *
சைவமு முலகிற் றழைந்திட நிறுத்த *
வையையார் நதிசூழ் வாத ஆரின் *
மறையவர் குலத்திலா மாத்தியர் மரபி *
லிறையவ னருளென வெழில்பெறத் தோன்றி *
வளர்தாத் தாதையார் வாத ஆரனென் *
றுளமகிழ் சிறப்பா னுதவுமொண் பெயருமீ *

வேத மாகமம் வேறுமற் றுள்ள *
வோதுநூற் பகுதியு முளங்கொளக் கற்று *
வாழுநாட் கூடல் மன்னரி மருத்தனப் *
பூழியன் விளித்துப் புகன்மூத லமைச்சுந் *
தென்னவன் பிரம ராயனென் றிறப்பு *
மன்னபி தானமும் வழங்குறப் பெற்றவ் *
வண்ணலுக் கென்று மணிமனிக் கவசமுங் *
கண்ணுமென் றுரைப்பக் காரியம் புரிந்து *
வதியநா ளூடுறும் வளர்சிவ புண்ணியப் *
பொதியினுற் றாய்மை புந்தியிற் பொருந்த *
நிலைநிலை யாமையி னிலைமையை யளவிட் *
டலைவுறும் பிறவியி னருந்துயர்க் கஞ்சி *
வீடு பேற்றின் மிகவிருப் பினராய்க் *
கூடுமெய் யடியார் குழாத்தொடுங் குலாவிச் *
சிந்தையைச் சிவபிரான் திருவடிக் கமைத்துத் *
தந்தொழி லுங்கொடு சாரவோர் ஞான்று *
குணநிகைக் கலித்துறை குதிரைகள் குறுகலை *
மணப்விரி தண்டார் மன்னவன் றெரிந்தெதம் *
பொன்னனைய திறமது பொருள்பல கவர்ந்துபோய்க் *
கொன்பரி வாங்கக் கொணர்கெனக் கூறி *
விடைதரப் பொருளொடும் விமலனை வணங்கி *
நடைகொடு வருமிவர் நடைமுத லனைத்தும் *
பரசிவன் றிருவுளம் பற்றியோர் பனவக் *
குரவனுப்பெருந் துறைக குருந்தடி நீழலிற் *
பொரறிமா ணவர்குழாம் புடையுற நாப்பண் *
வீற்றிருந் தருளவவ் வியனக ரண்மி *
யாலயம் புகுந்தன் பால்வலம் வருவார் *
கோலமார் குருந்துறை குருமணி தன்னைக் *
கண்டுள முருகிக் கண்ணீர் பெருகித் *
தெண்டனிட் டெழுந்து சிவதே சிகனே *
யடிய னேனையு மாண்டருள் செய்கென *
முடிமிசை யஞ்சலி முகிழ்த்துநின் றிரப்ப *
வேதியர் மலபரி பாக விளைவினை *
யாதிதே சிகனறிந் தியாக்கையா ருயிர்பொருண் *
மூன்றையும் புனலொடு முளரியங் கரத்தா *
லேன்றருட் கண்ணு விருண்மல மகற்றிச் *

சென்னிமேற் செங்கரஞ் சேர்த்தினைந் தெழுத்தான்
மன்னிய பாச வலிகெடுத் தின்பப்
பூரண வடிவம் புரிந்தவப் போதுபே
ராரண மறியா வருட்டே சிகனை
மாணிக்க நிகர்க்கு மதுரவா சகத்தாற்
பேணிப் பரவப் பிரானனி மகிழ்ந்தவ்
வாசிலகா ரணத்தா லமலமா னிக்க
வாசக னெனப்பெயர் வழங்கினன் மறைதலும்
வியநதுபின் றெளிந்தவ் வீரிபொரு ளனைத்து
நயந்தர லுலய நற்பணி தனைக்கு
மணிவிழா வித்குமர்ச சனைக்குமங் கணன்கண்
மணிகொண்மெய் யடியார் மாண்பு சனைக்கு
மமைத்தரு டந்த வாரிய னடிக
டமைப்பணிந் தங்ஙனஞ் சார்ந்தன ரிருப்ப
வழுதியீ தறிந்து வரவழைத் தெம்பொருண்
மூழுதுமீ பலதுமா முறையினிற் கொணர்ந்தியென்
றண்டரு மஞ்ச வல்லலசெய் மல்லரைற்
றண்டனை செயவது சகிக்கில ருகிக்
கூடலங் கோனரி குறிகையாக் கியதிரு
வாடலா திகளா லரசனைத் தெருட்டடத்
தெருண்டவவ் வரசனிச் சிவனடி யாரை
மருண்டிடுண் மதியான் வருத்தினி னெனவவ்
வன்பரை யடைவுற் றடிகளிற் பணிநமக்
கென்பிழை பொறுத்தருள் வீரெல் நிரப்ப
வகமகிழ்ந் தன்பரவ் வரசனுக் கலகில
முகமனன் குரைத்து முளைமதி முடியோன்
சன்னிதி சார்ந்து தாழ்ந்துபின் புறம்போந்
தென்னிதி யேயென வெய்துபான் டியனை
நிற்கப் பணித்து நின்மல மாக்கிய
வற்களத் தையர் மேர்பெருந் துறையை
யடைந்து முன்போல வாரியற் கரனவுள்
ளுடைந்துநைந் துருகி யுலப்பில்பே ரன்பாற்
பற்பல விதமாப் பாமா லைகள்புனைந்
தற்புதன் சேவடிக் கணிந்தவ் வணிருப்பத்
தில்லையில் வருசெஞ்சொ லெய்பர வருளவு
மொல்லையி னிறைஞ்சி யகன்றனிக் கியாறு

செம்வழிச் சிற்சில சிவநகர் துதித்துப் *
பைம்வளம் படைத்த பரமா காய *
பலபல புரந்தனிற் பொருந்தி *
யலைபரிசம் பெருமா னருளடங் குப்பிட் *
டாரா கமமி னருட்டிரி யியற்றிச் *
சீரார் சிவயோ கினிதசிறந் திருப்ப *
மணிமதிற் கூடலெ வளர்தமிழ்ச் சங்கத் *
தணிமுனி வர்புலவரு யசர்தரும் பேரா *
கூறரு மின்பொருட் கூறிறந் திடுதலின் *
மாறனும் புலவரு மடங்குறு காலை *
யிறைவ னாரகப்பொரு ளெனப்படும் [illegible] *
முறைமையின் மொழிந்த முதிர்சிரு [illegible] *
லந்நினைக் கோவை யலங்கரித் [illegible] *
சுந்தரத் தமிழடவத் தோல்லலார் [illegible] *
கருணையை யுலகிக் கனகவெ [illegible] *
பொருணயந் தழுவிப் புனிதநல் வாக்கா *
திருக்கோவை யுள்ளிற் றேவரும் பரனை *
திருக்கோவை யாரினைச் செப்பின [illegible] *
யிருக்கினுஞ் சிறந்தா வேற்றிறம் பெருமான் *
றிருக்கரங் கொண்டெழு சீட்டிய [illegible] *
மழகிய திருச்சிற் றம்பல முடையா *
னெழுதிய தெனநெட் டெழுத்துமிட் டருளின *
னுதலா விந்நூ லரும்பொருட் பயனை *
யோதவுங் கேட்கவு மொருவரான் முடிமோ *
காமச் சுவையினைக் கட்டுரைத் திடுதலாற் *
காமுகா காமநூ லெனக்கவித் துரைப்பவு *
மிலக்கியக் கடனிங் கேறுதற் கீதோ *
ரிலக்கிய நூலெனக் கவிஞர்க ளிசைப்பவு *
மிலக்கண விதியெலா மெளிதினிற் பயில *
விலக்கண நூலென வியம்பவலோ ரியம்பவு *
மன்பினைப் பெருக்கி யானடி யளித்தலா *
லன்புநூ லெனமெய் யன்பின ரறையவும் *
வேதமெய்ப் பொருளின விளங்கவோ துதலால் *
வேதமே யெனவே தியர்வியந் துரைப்பவுஞ் *
சைவசித் தாந்தத் தனிப்பொரு ளுதலிற் *
சைவா கமமெனச் சைவர்கள் சாற்றவும் *

சிறப்புப்பாயிரம்

பலபட விங்ஙனம் பாருளோர் பணிந்து *
சொலநனி விளங்கித் தோன்று மிந்நூலிற் *
றூச்சிமேற் புலவர்கொ ளுபர்நூற் குலைகள்செய் *
நச்சிஞர்க் கினியார் நயந்துரை செய்வெணி *
மற்றைய பொருளெலா மனக்குமெட் டாமலையத் *
தெற்றென வுணர்ந்து சீர்சா லகப்பொரு *
ளுறலினு னுதலிய நுண்பொருட் கிணங்க *
வாலிதிற் றேர்ந்து வகுத்தபே ருரையினை *
யெளிதினிற் கற்றிவ் விருநிலத் தோருளங் *
கவிபெறும் பயனைக் கருத்திடை யுன்னிக் *
கரலிகு தங்களிற் காண்டுகள் களைந்தே *
யுரமொடு மச்சிட் டுதவுக வென்னு *
நதியணி சடில நம்பனோர் முனியுறை *
பொதியமென் றுரைக்கும் பொருவிலா மலையினை *
ஞானுயர் கொடியின னருளினாற் போதனிட் *
வானுளோர் களுங்புகழ் வையையா ராறினை *
ஞம்பினோர்க் கெல்லா நலங்களுங் கொடுத்துயர் *
செம்புகழ் படைத்த செம்பிதன் னட்டினன் *
விதுவையூர் மாடமு மேடையும் விளங்கும் *
பொதுவையுங் கொல்லொளிர் புதுவையா நகரால் *
கற்றவர் புனைபா மாலையி னுண்கவி *
னுற்றதண் டளவ வொன்பூ மாலையான் *
பண்பரி யிப்பரி யாகவுட் பதியவும் *
விண்பரித் திசைப்பவும் விளங்கும்வெ னிபரியான் *
நிகைக்களிற் றினமுஞ் சென்றெதிர் மலைந்திடிற் *
றீகைக்குமா நிகல்புரி சேமவெங் களிற்றினன் *
மாண்பமி மாற்றல ரன்றிமற் றையருங் *
காண்பரே லச்சுறுங் காவியங் கொடியினன் *
வம்மினென் றெவரையும் வரச்செயுங் கொடைமுதன் *
மும்மைகொண் டென்று முழங்குமும் முரசினன் *
பொங்கொளிக் கதிரோன் போற்றுலாம் புவியிட *
மெங்கணு நடாத்து மிசைச்செங் கோலின *
னெழுக்கமும் வாய்மையு முயர்குடிப் பிறப்பு *
மழுகலா வன்பு மடக்கமு மருளுங் *
கலவியுங் கொடையுங் கணக்கிலப் பாற்றலுஞ் *

சிறப்புப்பாயிரம்.

செல்வமு மியல்பாச் செவணுறச் சிறந்தோ *
னருந்தமி ழளக்கரை யறிவெனு மம்பியாற் *
றிருந்துறக் கடத்தலாற் சீர்பெறத் திகழ்வோன் *
சாந்த சமூத்திரத் தருமமா ணிக்கம் *
வாய்ந்தபொற் பேழை வரகுண மேரு *
சீரிய புலவர் திறந்தெரிந் தொண்பொருண் *
மாரியம் வெள்ளுற வழங்கிடும் வள்ளன் *
சேவுடைய யதிவாள் மேம்பா டுற்று *
யாவருள் ளத்து மரசுவீற் றிருப்போ *
னிராசாங் கதுவினை மீச்சாப் பியரும் *
பராவுறா செருக்கதும் பண்புகொள் பார்த்திவன் *
சேது பதிகடஞ் செங்கோற் சீமை *
நீதிப்பா டெல்லு நிலவுறச் செய்வோன் *
பூகவிகாளே ரம்பனாய்ப் பொருந்தயிற் புலியோர் *
மாககொண்மன் னிபமுக வானவ னெனவுந் *
தெய்வப் பிடியொடு சேர்தலிற் றேவர்கட் *
குய்வைத் தருவே னுத்தம னெனவு *
மின்னார் பசும்பாதர மேவலில் விண்மிளிர் *
பொன்னா டளிக்கும் புரந்தர னெனவு *
மம்புய மேவி யமர்தலி னுலகெலா *
மும்பரும் வியக்க வுதவுவோ னெனவு *
மீலக யுடையனு யிருத்தலிற் றிருவொடு *
மோகையுற் றுலறதரு முப்பேத்திர னெனவும் *
புலவர்கள் கவிகளாற் புனைந்தேத்தெ டுப்ப *
நலமலி வாழ்வினு னண்ணு நரேந்திரன் *
பரிதிகள் பலவெண் பாற்கட லுதித்தாங் *
கரிமுரல் செந்தா மரையலர்த் தொளிரும் *
பூம்புனற் பொய்கையும் புதுமணம் பரப்புந் *
தேம்பழச் சோலையுஞ் செறித்தசூழ்ந் திலங்கிப் *
புகழ்தரு பிராம நாதபூ பாரத்திற் *
றிகழ்தரு சேது பதியெனு மிராணி *
பாசசீர் பெற்றுயர் பருவத வர்த்தனி *
நாச்சியுரீக் கினிய நற்சகோ தரியு *
மவனா னுத்தமை யகற்றிநல் லறிவுகொள்.
திவனா னப்பெயர்த் தேவரும் புரிந்த
நற்றவப் பேற்றா னரலைசூழ் ஞாலத்

ஊற்றொளிர் கின்ற வுயர்குணத் துரவோ *
ஞேரிடத் தனக்கோ வுரியமா னேசரிப் *
பாரிடத் தனக்கெலாம் பகருமா னேசரென் *
றெம் மனோர் புகலவெண் செல்வமு மெய்திச் *
செம்மையி னேங்கிச் சிறந்திடும் சீமான் *
பொன்னுசா மிப்பெயாப் புரவலன் மகிழ்ந்து *
நன்னய மோடு தவின்றன ருக *
மூலமு முளாயு முறைமுறை நோக்கி *
யேலமே திருத்தி யெழுதா வெழுத்திற் *
பதிப்பித் தளித்ததனன் பரகிவ தலங்களுட் *
கதிர்ப்பொடு மிரண்மிதன் கண்ணுறக் காட்டு *
மீழநாட் டைச்சேரிந் நிலங்களு பல வளங்களுந் *
தாழ்விலா றுற்றுத் தயங்குப்பாழிப் பாணா *
நகர்தனி னல்லூர் நாமமார் புரத்திற் *
பகர்தரு சைவ பரம்பரைக் குலத்தும் *
றோன்றிய கந்தவே டொல்லையிற் செய்த *
வேன்றநற் றவத்தா லெழில்பெற வுதித்தோ *
னியற்றமிழ்ப் பகுதியி னியல்பெலாந் தெள்ளி *
நயத்தக வுணர்ந்த நற்றமிழ்க் குரிசி *
திருக்குற ளுரைமுதற் சிறந்தநா லுரைபெலாட் *
சுருக்கமின றறிந்த துகளிலபே ரறிவிறோன் *
கதிதரு சைவா கமங்களிற் கழறும் *
பதிமுதன் மூப்பொருட் பகுதியி னியல்பெலாட் *
சகிகளையொன் றின்றித் தவறிச்சு டதோ *
லங்கலையி னெல்லிபோ லனவிட் டறிந்தோ *
னானடி யருச்சனை யன்றிமற் றொன்றுந் *
திரமுறு பவநோய் தீர்த்திடா தெனவச் *
சம்பவின் பூசனை தன்னைநா டோறு *
நம்பிமெய் யன்பா னடாத்திடு நல்லோ *
னயிட்டிகப் பிரம சாரிதன் னிலையிற் *
றியக்கற நிற்குஞ் சீர்மைபெற் றுடையோன் *
சங்கர னடியவர் தமைச்சரண் பணிந்தே *
யிங்கியான் செப்பணி யென்னென வியற்றவோ *
சிவபிரான் மகிமையைச் சீவர்க டமக்குப் *
பவமறப் போதனை பண்ணுபாக் கியதோன் *
கிரிபயயான் ஞானங் கிடைக்கும தலறி *

புரியமெய்ம் முத்திக் குபாயமன் றென்றுஞ் *
சார்சே வலமுதற் சாற்றுமூ விடத்து *
மாருயிர் சிவனுக் கடிமையே யென்றும் *
பகருசிவா கமவாக் கியப்பொரு டன்னை *
யிகலறத் தேர்வுற் றிதயத் திருத்தினேன் *
கல்லியிற் காலங் கழித்தலீங் கிவன் கணென் *
றல்வில் குளத்தவ ராறைதா வமைந்தே *
யாறு முகனெனை வவனி *
க்கு மியற்பெயர் கொண்டநா வலனே. *

திரிசிரபுரம்,

ம-ா ா-ஸ்ரீ-மஹாவித்துவான்

மீனாட்சிசுந்தரப்பிள்ளை

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

திருவளர் மார்பத் துருவளர் கோவுந் *
தாமரை வாழ்க்கைத் தாமரு தேவு *
நண்ணுரற் கரிய கண்ணுதற் பெருமா *
னுமையொரு பாகத் துமைதர நாளும் *
பெற்றும் விகாரஞ் சற்று மிலாதவ *
னொருவா வைந்தொழின் மருவா தின்றுந் *
தொழிலொன் றில்லா வெழிலொன் றொருவன் *
மண்ணுரு வாதி யெண்ணுரு வெட்டு *
மேவுரு வத்து வாவுரு வாறுஞ் *
சாலவைந் தொழிற்கு மூல மாகிய *
வொன்பா னுருவு மன்பான் மருவியு *
முருவொன் றில்லான் கருவொன் றில்லான் *
றுனிடி மலரைக் காணிடி மலரென் *
றான்கு னுருவுற மூன்கு முதல்வன் *
முத்தி விரும்புதர் பத்திமை யென்னும் *
பொருணயத் தமருங் கருணையெம் பெருமான் *
செந்தளி ரீன்று பைந்துணர் சான்று *
கனிபல பழுத்து முனிவறப் பிளிற்று *
றறவுவட் டெடுத்துச் சுறவமக் கழி *

யோருவப் பெய்த நீருவர்ப் பகற்றி *
யுயிர்மல மகற்றுஞ் செயிரகல் குரவர் *
தன்மை தெரிக்கு நன்மையிற் பொலியுந் *
தேமாம் பொழிலுந் வாமாஞ் செறுவுந் *
பொற்ப வுதித்த கற்பமெண் ணிலெரி *
குருத்துறை தெய்வப் பெருத்துறை மேவித் *
திருவுரு வென்னுங் குருவுருக் காட்டி *
யருடா நன்று மருடப நீக்கு *
துரியங் கடந்து பிரியம் படர்ந்த *
பேரா னந்த மாரா நிற்ற *
வேதனு ரெனவு நாதனு ரெனவுந் *
போத னுரெனவு மோதனுர் சீர்க்கி *
வாதனு ரடிகள் வாய்மலர்ந் தருளிய *
திருக்கோவை யாரொனுந் தெய்வமா மறையைப் *
பழமறை தெரிந்த பாரத்து வாச *
நச்சினுர்க் கினியர் நவின்றபே ருரையொடு *
காவிகி தங்களிற் கான்பிழை யாற்றிச் *
சிரவிகி தம்போற் றிருத்துற வாற்றி *
யச்சிற் பதிப்பித் தமைகரத் தருளென் *
றிசைகம் புகழு மிராசரு ளாமணி *
நலந்தரு மிராம நாத புரத்தில் *
வலந்கரு செங்கோன் மாண்பி னடாத்தி *
யாசுவீற் றிருக்கு மண்ணனற் குணமே *
விரசுமா மேரு விமாறறுங் கமல *
மாதுபதி யென்று வானவர் துணிபுந் *
றேறுபதி பற்ப வுபிர்க்குறல் லருட்கடல் *
கோதுபதி யாத குலசித் தாமணி *
சேதுபதி ராணி திரைக்கடல் வரைப்பிற் *
றுன்னுமா ருயிர்க்கெலாந் தோன்றுதா யேயாய் *
மன்னுசீர்ப் பருப்பத வர்த்தனி நாச்சியார் *
தமக்கினி தாய சகோதரி யாரு *
நமகினி தாஞ்சிவ ஞானத் தேவரு *
மியற்றருத் தவத்தா லிருநில மகிழவு *
மயறறலை புகுத்தா வண்டமிழ் தழைபவுந் *
திகழ்தரு பற்பல சிவாலயம் விளங்கவும் *

சிறப்புப்பாயிரம்

புகழ்தரு தருமம் பொலிந்து முழங்கவு *
மறக்கடை யாவு மஞ்சியோட் டெடுக்கவும் *
பிறக்கடை ஞானப் பெருவிளை வேங்கவுங் *
கலிதரு நரகக் கடுங்கத வடைக்கவும் *
பொலிதரு மின்பப் புதவத் திறக்கவு *
மூணருந் திறத்தர்க் கொளியா மொருவன் *
புணருந திருவருள் பேரலவ தரித்தோ *
னற்புறத் தமிழோ டளாய்நறுஞ் சாந்தம் *
பொறபறக் கமழும் பொதியமால் வரையா *
னனிபல கொழிக்கு மருந்தமிழ்ச் சுவைதெரீஇ *
மணிபல கொழிக்கும் வையையமா நதியான் *
கன்னலுங் கமுகுங் கதலியும் பலவுஞ் *
செந்நெலும் பொலிபுஞ் செய்பிறன் ஞட்டான் *
றன்னெயி லெனமற் றலங்கொண முவக்கப் *
பொ ஃனெயி லோங்கும் பதுவைமா நகரா *
னினியெனல் பொய்மை யிதுவே மால்கொ *
டனியரு வெல்லு சாற்றுவரம் பரியா *
னுற்றுள வொருகோட் டொன்றனை வணங்கி *
மற்றுள வெவையும் வணக்குமால் கவிற்றான் *
கண்டுநிகர் மொழியார் கணவெறு காமர் *
வண்டுபடிந் துழக்கும் வாகைமா லிகையான் *
றண்டார் புனைந்து தடஞ்சிலை குனிக்கு *
மண்டார் நடுங்க வதிர்தரு முரசான் *
மயலுக் கொடியா வருந்தவே ளுயர்த்த *
கயலுக் கொடியாக் காவிக் கொடியான் *
ரூய்ப்புகு மான்றேர்த் தாணியொண் செங்கதிர் *
மேபாய்ப்புகு மிடமெலாம் பேய்ப்புகு மானையான் *
மேவிக் குடையான் விறல்கொடி தொடுக்குங் *
காவிக் குடையான் காவிக் குடையான் *
சேரார் மணிமுடி தேய்க்குந் தாளான் *
காரா ரிருதிதி காம தேனு *
கற்பகத் தையும்புறங் காணுங் கையான் *
பொற்பக மலர்ந்து பொலிதிரு மார்பா *
னொன்றல மேருவென் றுரைசெய்திண் டோளான் *
மன்றடறு வில்லா மதியெனு முகத்தா *
னருண்மடை திறந்தா லனையசெங் கண்ணான் *

பொருணயந் தெரிந்து புகக்கொளுஞ் செவியான்*
கனவினுங் கடுஞ்சொற் கரைதலில் வாயா *
னனவினுங் கனவினு நள்ளார் நடுங்க *
வியைதரும் படிசிறி தெழுங்குறு மூரலான் *
றயைகுடி யிருந்து தலைமகற் மனத்தான் *
வெள்ளிய நீறு விளங்குதிரு நுதலான் *
வள்ளிய வதற்கலால் வணங்கா முடியான் *
பயன்மர முள்ளூர்ப் பழுத்தற் றுணன் *
னயமுடை யான்க ணண்ணிய செல்வமென் *
றுன்றோ ருரைத்த வதற்கொரு சான்றாய்த் *
தோன்று நின்ற சுந்தரக் குரிசி *
லுளன்ற போகிப் புரிவிடை தட்பப் *
பதனறு புக்குத திறனன்று மொழியினும் *
வறிது பெயர்குற லல்லரிதின் மாட்டென் *
றறிதர முன்னு ளாண்டோ ருரைத்த *
திவன்செய லெனக்கி யெதிரது போற்றி *
யன்றே யென்றுபே ரறிஞ ருமாப்ப *
நன்றே நாரு நடாத்திவரு வள்ள *
லியலென்னு மெவ்வ மெனுந்திருக் குறட்குப் *
பலர்பல விதமாப் பகர்ந்தமை யுமையு *
ளிரப்பவ னிரக்கப் பரிவோ னுகை *
சுரக்குங் கொடையே சொல்லின் முதற்று *
லக்கொடை யிவன்பா லமைந்ததிய லேயென் *
றெக்கொடை வல்லரு மியம்பப் பொலிவோ *
னருந்தமி ழாகர வாரிய முழுதும் *
பெருந்தமி ழாமொழி பெயர்ப்பது குறித்தோ *
னிகழே யாரொடுத் தியம்புவ வெலாந்தன் *
புகழே யாக்கிய புண்ணிய மூர்த்தி *
யரியமா நேச ரதிகா ரத்தைத் *
தெரிய நடாத்தித் திகழ்புரு டோத்தமன் *
மன்னு சாமிநன் மாதவச் சாமி *
பொன்னு சாமிவேள் புகன்றன னுக *
வண்டமிழ்ச் செய்யுளு னூறும்வா யுமையுட *
னெண்பது மாதன னொருதலை கொண்டனன் *
னெழுத்தே யாமென் றியாவரு மகிழ *

வழுத்தே யச்சில் வயக்கி முடித்தனன்
மன்னுகோ ஞாலமாகே திச்சா
மென்னு மிரண்டு மிரண்டு கண்ணுகப்
பெற்றவி ழத்திற் பிறங்கும்யாழ்ப் பாணத்
துற்றபல் வளனுக் குறையிட னாகிச்
சொல்லூர் சமனி சூழ்தரக் கொண்டு
செல்லூர் பொழிலாற் சேணுல களந்து
வில்லூர் மாட மிகக்கொடு பொலியு
நல்லூர் வாழ்க்கை நயந்தரு வறிஞன்
கந்தவே டவத்திற் கருதான் பான்முன்
வந்தவே ளென்ன வந்தவ தரித்தோ
னீற்றொடு கண்மணி நிறையப் பூண்பார்ப்
போற்றொடு பொலியும் புண்ணிய புருட
னவறெறி யாய வனைத்துங் களைந்து
சிவநெறி வளர்க்குந் திப்பிய ஞானத்
தொழுத்துமுத லாக விடம்பிலக் கணமும்
வழுத்திலக் கியமும் வாம்புகண் டெழுந்தோன்
சமயம் விசேடந் தருதிரு வாணமென்
றமையுமுத் திக்கையு மடைவுறப் பெற்றோன்
சமங்கல விசேடச் சுருதியா மூலா
சமங்களின் மூப்பொருள் கருதுபே ரருளான்
யுத்தியி னமைத்துணர்ந் தோங்கனு பூதி
சித்தியுற் றமைந்த சிவசித் தாமணி
கற்றுணர் புலவருட் களிக்கு
மூற்றுண ராது முகநா வலனே.

உ

சிவமயம்.

திருச்சிராபுரம்,

ம-ா-ா-ஸ்ரீ-மஹாவித்துவான்

மீனாட்சிசுந்தரப்பிள்ளைமாணுக்கரும்

சிதம்பரச்செட்டியார் குமாரருமாகிய

தியாகராஜச்செட்டியார்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

பூமலி சந்தனப் பொழிலிடை யுலாவுந் *
சேமலி கருங்குழற் சிறுகுற மடவார் *
மீமிசைத் தொடுத்த விளமுறற விருலை *
யிருள்குழத் தெழுந்து மருவுதங் காதலர் *
வரவு தகைந்த மாமதி யெனநினைந் *
தந்தைக கவணுற மவிர்கதிர் மணியாற் *
றூக்குறச் சிதையா மீகளிர் புலமையோர் *
நனிவருத் துறார்க்கு நன்கு புரிந்தரங் *
கிழமென வொழுக்குஞ் செழுமனு வொழுக்கந் *
தம்முள மகலாத் தலைவர்தோ டழுவு *
மாவலொடு புரியுங் காவலி யோவ *
விளைவறீஇ யியற்றிய வுளைவுறு பகையெனப் *
பளிக்கறை வருத்த வொளிக்கறைக் குழிப்பெய் *
தடுகரி மருப்பி னதிர்வுற வலைத்த *
பைந்தினை யிடியிற் பாய்தரத் திரட்டிக் *
கடவுள ரமுதமுங் கைப்பவரிற் றுவக்கும் *
பொதியப் பொருப்பிற் பொலிந்தினி திருக்குந் *
தெய்வப் பெருமைச் சைவமா முனிவர *
னன்புளம் பெருக வின்புட னளித்த *
செந்தமிழ்க் கன்னியைச் செவிலிபோல் வளர்க்கு *
மங்கலப் பாண்டி வளநா டதனுள் *
விண்ணா சனிக்கும் பண்ணவர் பெருமான் *
றன்பகை மதையிடத் தந்தபகை நினைந்தென *
வளநெழ வளக்க ராரர்புனல் பருகி *
பூவர்கழித் திணிய வுதக மாக்கிப் *

பெருநிலஞ் செழிக்கப் பிழையறப் பெய்தென்
றுணையா றொழுகு மாணமை யொழிலையை
யேவுபே ருதவியை யினிதுளத் துன்னு
வெதிர்செயுங் ககம்மா நேய்ப்ப வன்புகூர்ந்
தன்னவ னமர்தரு மணிவசந் தத்தின்
மூன்னர் மேவி முகதனி மலர்ந்து
தலைவளைந் தின்கனி தளிர்க்கை தாங்குபு
தின்றுற விளங்குந் துன்றலர் பொதுளிய
தண்பொழி லுடுத்த வண்புனன் மருதம்
வளம்பொலிந் தொளிர்திரு வாத வூரிற்
காமாரி யன்றிக் கனவினுங் கருதா
வாமாத் தியரொன் றுமறைக் குலஞ்செய்
தொல்லைமா தவப்பயன் றோன்றிய தென்ன
வேத மாகழ லிளிர்தலை யெடுப்பப்
பாதகப் பிடகம் படுகுழி வீழ
மெய்யுறு சைவம் விளங்கிநனி செழிப்பப்
பொய்யுறு பௌத்தம் பேய்மாய்ந் தொளிப்ப
வுன்னுபே ரன்பா முருக்கொடு தோன்றிய
மன்னுபே ரருட்டிரு வாதவூ ரடிகள்
கதிர்மணி மாடங் கலுலொளி கரவு
மதுரை யாளரி மருத்தன பாண்டியன்
முதலமைச் சுரிமை யுதவுறப் பெற்று
வதிதரு நாளில் வரிகொள் வரனச்
செழிய னேவச் சென்றிடு காலைக்
கரும்பவ சாகரங் கடத்தினி தேறும்
பெருந்துறை யெனுந்திருப் பெருந்துறை யதனில்
வண்டுண் மதுப்பெய் மலர்க்குருந் தடியிற்
றழைதரு சத்துவந் தழீஇக்கொண் டென்னப்
புண்ணிய நீறு சண்ணித்த மேனியஞ்
சிரமு முரமுங் கரமுங் கரணங்
கண்டமும் பொலிதரு கண்டிகை யழகுங்
கொண்டொளி ரடியார் குழாங்கள் சூழ
நலிமலந் தெறுசிவ ஞான போதங்
கரமலர் பொருந்தக் கனிதிரு வுளத்தொடு
பக்குவ நோக்கிப் பதிம வடியார்க்

ஞானவுரு தன்றொழி லுலகையறி விக்கப்
பொருந்திய தென்னவிற் றிருந்தருள் பாலிவ
ஞான சற்குரு நாதனை முன்கண்
டெதிர்சென்று வணங்கி யிருகணீர் வார
நெஞ்சநெக் குருகி நீற்பவத் தேசிக
னுடல்பொரு ளாவிமூன் றுதகமொடு கவார
வருட்டிரு நோக்கா லம்பரி சத்தாற்
பொருட்டிரு வாக்காற் பொலிவுற வருளி
யறிவுரு வாக்க வானந்த வெள்ளப்
பெருக்கிடை மூழ்கிப் பேருலகு வாழத்
திருவாய் மலர்ந்து செப்பிய சிற்கலைத்
தேவையே பரவுந் திருச்சிற் றம்பலக்
கோவையா மென்னுங் குலவரு ணூலை
நச்சினார்க் கினியராய் நலம்பல பயகுந
நச்சினார்க் கினியர் நலையறச் செய்த
செறிசுவை யுரையொடு தேர்ந்துணர் வோர்க
ளாரண மூணர்பய னாகம முணர்பயன்
சீரண வியபல் செழுங்கலை யுணர்பயன்
பாவு மெளிதி னினிதுணர்ந் தடையப்
பாவுறு மச்சிற் பதித்துத் திருகெனப்
பளிங்கு படுத்த பன்மலர் வாவிஞயக்
கயவாய்ச் செங்கட் கவையடிக் கவரி
கன்றுள்ளிப் பொழிந்த துன்றுசுவைத் தீம்பால்
பாய்ந்து பெருகலிற் பயோதி யென்று
மதலிடை யாட வவாவிப் புக்குத்
தாமரை நாளத் தளைதர நிற்குங்
கறையடிப் புகர்முகக் கவுட்கடாக் களிற்றை
வாசுகி பிணித்த மந்தர மென்றும்
வெள்ளொளி விரிக்கும் வள்ளிதழ்க் கமலச்
செறிவினை யமுதத் திரள்வினை வென்றும்
பொற்றுகு பொதிந்த பொற்புடை மராளத்
தடமுலைச் சிற்றிடைத் தாக்கணங் கென்றுற்
றிரைபெறி மணியுஞ் செம்பொரு நிறைந்த
குடக்கூன் றிங்கையுங் கோகன தத்தையும்
பெருநிதி யளிக்கு மிருநிதி யென்றுற்

திறப்புப்பாயிரம்:

தேவருண் மதித்துச் சேர்தரப் பொலிந்து *
பம்புவளஞ் சாக்குஞ் செம்பிறன் ஞுடன் *
பீடுற வுயர்ந்த வாடகக் ஞுன்றம் *
புலவருக் கொண்டு நிலவிய தென்னச் *
சேயொளி விரிக்குஞ் செம்பொன் மாடத் *
தொளிர மிபகலின் மிளிர்தர மேவிக் *
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைப் பைந்தொடிக் *
ஞனிறுத னெடுங்கட் கொடுப்பிடைக் கோதையர் *
மிகுதிலங் குயிற்றிய தத்தொளி யம்மனை *
செந்தளிர்க் கரங்கொடு தெய்வதன் ஞட்டிக் *
கடவுள் வேழங் கவளமென் றுன்னித் *
துதிக்கை நீட்டத் துறைந்தினி தாடும் *
புனைவளஞ் செறியும் புதுவைமா நகரான் *
கனியினும் பாகினுங் கடினுந் தேனினு *
மிலிய தெள் ளமுதினு மினிக்குஞ் சுவைத்தமி *
ழெடெதி ரேற்ற பாடுறு நதியான் *
வீற்கொடி கயற்கொடி புற்கொடி யிவைகட் *
காவிக் கொடியெனுங் காவிக் கொடியா *
னல்லெழி லிராம நாத புரமெனும் *
பதியான் சேது பதிமகி ழிராணியார் *
தருமவா சமரமாப் பருவத வர்த்தனி *
நாச்சியா ருடன்வரு நற்சகோ தரியும் [ஞ்
பெறுபெரு நலனெலாம் பெயரொன்றின் விளக்கு *
சிவஞானத் தேவருஞ் செய்தமா தவத்திற் *
புண்ணிய மென்னும் பொலிபயிர் தழைப்பக் *
கண்ணுறு பாவக் கார்ஞ்சிறந் தருவிழச் *
செவ்வ மென்னுஞ் செழுங்கிரி வளர *
வல்ல மென்னு மார்கலி வதப்ப *
வேதமி றிரு ரெண்ணில ராக *
வாதுல ரவனியி லரிப ராகச் *
சாந்தங் கருணை சார்தரு மன்பு *
வாய்த்தநற் சீல மாண்புகழ் தேற்றம் *
வாய்மை யடக்க மலிதரு நீதி *
யின்னன குணமெலா மெழிலுறப் பாகக் *
கொடையொரு நல்லுருக் கொண்டு வந்ததென் *

நெப்புப்பாயிரம்

திரும்புவி வியப்புற் றிசைப்பத் தோன்றியோன் *
வளையாறி வாள்வில் வயங்குகரஞ் சுமந்து *
தளைசீர் கொள்வனந் தகைதொடை தாங்கி *
மாயக் கலைபொழிந் தேய்பொற் கலைதழீஇத் *
தாணுவை யேந்தித் தளர்பசு விடைமிசைக் *
காண முவந்து கலிநுற வாய்ந்து *
வாணாறு புலவர் வழுத்தப் பெற்று *
மிளிர்தலின் வனச மெண்மலர் வதியும் *
பொன்னுச் சாமியே யெனப்புல வோர்சொலப் *
பொன்னுச் சாமிப் பூம்பெயர் புனைந்த *
பூபதி யினிது புகல்தன லுற *
நன்றுநன் றென்று நவிழ்புள மகிழ்ந்தே *
புயமிசை ணவப்பொரு ளொருதா னென்றே *
நலந்றி வுறுத்தக் கொன்றைமலர் முடித்த *
புராதனப் பெருமான் பொலிந்தினி தமரு *
மருகைகொள்பூஞ் சோலைத் திருக்கோ ணாதலங் *
கருக்கோ தகற்றுந் திருக்கே தீச்சுர *
மென்னுமித் தலங்களைத் தன்னகத் தடக்கிய *
தென்னீழ நாடடின் மன்னுயாழ்ப் பாணத்துப் *
பல்லூர் புகழு நல்லூர் வாணன் *
சந்தகமுஞ்சிவ சிந்தனை யகலாக் *
கந்தவே டவசினிக் கந்தவ தரிந்தோன் *
றொல்காப் பியமுத னவிலக் கணமிசை *
மொல்காப் பயன்றரு பல்காப் பியங்களுந் *
தவறெறி காட்டுஞ் சிவபுரா ணங்களுந் *
பதிபசு பாசப் பருப்பினி துணர்தருந் *
செய்தவர்க் கேயுறுஞ் சைவசாத் திரங்களு *
மையந் திரிபற வெறிந்து தெளிந்து *
பெயரா வறிவிற் பெரியோ னாகி *
வீறுகொண் டியர்ந்த வாறுமுக நாவலன் *
காலிகி தங்களாற் காணுறு வழுக்களைந்து *
தானடி யவர்க்கின் பரும்பப் *
பாவுறு மச்சிற் பதிப்பித் தனனே. *

சிவமயம்

மகாமகா-ஸ்ரீ, மஹாவித்துவான்

மீனாட்சிசுந்தரப்பிள்ளைமாணக்கராகிய

சோடசாவதானம்

சுப்பராயச்செட்டியார்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

மணிநிகழ் பஃறலை வாளரா வனந்த *
ணணிநிகழ் செஞ்சூட் டதன்மிசைக் கிடக்குங் *
கடல்விளிம் புடுத்த நெடுநிலப் பரப்பின் *
மீமிசைப் போர்த்த விரியிருட் குப்பை *
பாம மார்கடற் பனிநிலா முகட்டெழீஇக் *
கதிர்வா ளோச்சுங் கனலொளிப் பரிதிக் *
கதிர்வகத் தடைதற் றடைக்கலம் புக்கெனத் *
துணங்கற னிவந்த மணங்கமழ் பொதும்பர் *
புடைதழீஇ யாண்டுப் பொருவின் றூட்டிற் *
கடையுகத் தெழுந்த கார்க்குல மென்ன *
மகத்தெழு புகைகுவால் வாய்முகிழ் துவன்றி *
யிகப்பருஞ் சீற்றத் தெறுவலி யொருத்தல் *
கனலொப் புளிக றூங் கண்கரும் புளிப்பப் *
பனலுறற் றிவலெனாறும் படர்ந்து பேரிப்பப் *
புரிநூல் கிடந்து புரளு மார்பினர் *
திரிபிலெய் மொழிஅது சிருக்குழி வாக்குஞ் *
சீர்சால் வாதவூர் செய்தவப் பேற்றுற் *
பேர்சா னன்மறைப் பிணக்கற வந்த *
மாதவர் குழாம்புகழ் வாதவூ ரடிக *
விருவகைப் பற்றத் திரையினு லெற்றுண் *
டலலரும் போதத் தடஞ்சுழி வாய்ப்பட் *
டொடிவில்வெம் பிறவிக் கடலிற் றுளைந்துளோ *
ரொன்றிரண் டிகந்த பொன்றலின் முத்தி *
வியன்கரை காணுபு நயன்றரு மின்பிற் *
றெற்றெனத் திளைத்துத் தேக்கெறிந் துவப்பக் *
குற்றமின் மதலையைக் கொடுத்தவித் தென்னப் *

பிறாருவா சகவிருட் புணரிப்பினை யிரித்துற் *
திருவா சகமருள் செழுந்தவ மாமணி *
செய்வதுந் தீர்வதும் பெறுவது முறுவது *
முய்வது மாய வொருநாள் கிவறு *
ஞறுவகே யேரின் பறுகலா மெனன *
மாயிரு ஞால மேயமன் பலதக *
ளகத்தடைத் துய்கரப் பருத்துயத் தருளியு *
திருசிற் றம்பலத் திருநடக் கொலையா *
ரரும்பொரு ளொருநிகும் பெருட்புவி மீது *
கைத்தலத் தமர்தரு கழுமணி கமழு *
வித்தக ருளத்தெளி விடித்துக விட்டுப்பக் *
கள்ளரும் புலமைத் தலைமைகால் சிறப்பி *
னைசிறாக் காணிகர் தம்சிறாக கினிய *
ரிலக்கண நெறியின் லலக்கணக் குவிளக்கு *
திருவுளம் பற்றிய பொருளினை யுணரியின *
யறுகாற் புளினை மறுகா [illegible] *
பயிற்றுக் பலைத்துக [illegible] டழியெறி [illegible] *
புரிமுறக் கவிபுரிந் துறமது வாக *
மம்பொ ருகவயல வெம்பொ ருகதக *
வனங்கவே டுறுது மனங்கவ றுறுதலும் *
பாச றுதிகர்ப்பப் பாசலடக் கிகாஷ் டாய் *
ழிழைகரு மிக்கலைக் கரதலை வலைகரும் *
பம்பிய வளஞ்சேர் செம்பிறலா ருடன் *
கரையொடு பொருதுந் திரைவையி சமரிப்ப *
வதுவையின் முழக்கார் புதுவயதக ராவி *
புங்கவர் குடைவான் கங்கையிற் றிடாபடத் *
தேத்துகள் கொட்டிம் பூத்துணா பொருவிய *
சேருறு வால் சினைச் செஞ்சாற்று செறிந்த *
பேருகுயர் சுமிமிப் பொதியப் பொருப்பன *
சுரிமுகச சங்கினஞ் சூழுரைத் துயர்ந்த *
விரிநில வெறிக்கும் வெண்மணிக் குவையின *
யிருகையுஞ் சிந்தி யெக்க ராக்கும் *
பெருநதி வையைப் பிரிவெரு ளுகறவ *
னன்றின ருவத்துக் துன்றுமன சுறத்த *
மேவிக் கதிர்க்கருங் காவிக் கொடியினான் *

கலியருப் பகத்திக் கருதுதல் துயிர்கட் *
கோவற நிமற்றுங் காவிக் கவிகையன் *
நடமருப் பிருங்கவுட் கடவுள் யானை *
விளைபயுமின் பிடிவெனப் புழைக்கை நீட்டி *
மூழுமணி யினங்கண் முகிழ்க்குறும் பித்திகை *
செழுமிய மாடமீக் கிளர்தரு மாமியத் *
திர்துதொத் துயிர்த்த பைந்தா ளம்போன் *
மறுவில்வான் மூகத்திற் குறுவெயர் வரும்பச் *
சிவலிச் சிலம்பொலி யொல்லென வொலிப்பச் *
சிறகிடை மறுகச் செறிகுழுன் படலியர் *
திக்கெலாங் கமழ்கின்ற பொற்கழுங் குத்தும் *
பாரமிய சீகர விராம நாத *
பரத்திடம் வுறவருள் சுரத்து புரக்குஞ் *
சேது பதியமிற் சேது பதிக *
னில்லறக் கிழமை பூண்டலலலை மழுக்கு *
மருர்துதிக் கற்பிற் பெருத்துதி யிராணி *
நங்கையொடு வந்த வங்கனை தம்பாற் *
பலஞான நந்தெறு பான்மையிற் பகுந்த *
சிவஞான தேவர் செம்தவச் சிறப்பான் *
வலம்புரி பயந்த நலம்புரி முத்தின் *
வந்தநன் புலவரைச் செந்தமிழ்க் குரிசி *
லைவகைப் பகையு மெய்வகை யுயிர்கட் *
கணுகா வண்ண நணுகா வளிக்கும் *
புரவு பூண்ட வுரவதி காரன் *
றெட்டுமுனை யடுபோர்ச் சீற்றத் துப்பின் *
வெம்முனை யவுணர் வெரின்கொடுத் திரியத் *
திரிமருப் பிரலை செருமுகத் துகைக்குங் *
கொற்றவைக் கரங்கரங் கொற்றப் புயத்தினன் *
கோந்திரை மிசைவேர் வீழ்த்தெழுந் தகன்ற *
நிலைதொறும் படர்ந்து செல்லிட மின்றிப் *
புகைநீறத் தங்கட் புட்கரம் போர்த்துக் *
கண்ணகன் ஞாலத் தண்ணிய கலியிரு *
மின்னென வொளிப்ப வெண்ணில வெறிக்கும் *
பகழ்ப்படாம் போர்த்த தகைப்பெருஞ் செம்ம *
நன்பா லேற்குநர் தம்பா லேற்ப *

வுரையாது கொடுக்கும் வள்ளன்மை கற்றோ *
னுரைசால் கலைபயி லுணர்ச்சியின் மிக்கோன் *
றுன்னுறு பல்லறத் துறையிற் றீறம்பாப் *
பொன்னுச் சாமிப் புலைகழ னரேந்திரன் *
பெருகிய லச்சிற் றருகென வுரைப்பத் *
தோன்றிய பலரும் வேண்டிய வாறே *
வரைதலின் வலவரும் வல்லா ராகி *
நிறைதளர்ந் தயிர்த்து நெட்டுயிர்ப் பெறிய *
மிக்குங் குறைந்து முறழ்ந்தும் பிறழ்ந்துந் *
தொக்கபல் பிரதியின் றுரிசொருங் கறத்தி *
யெளியரு மினிதுணர்ந் துளநனி வியப்பக் *
கனிவகத் தரும்பி நனிபெறப் பதித்தனன் *
மூழுமணி குயின்றபொன் மோலிக ளுரிஞ்சிப் *
பழுதற பொற்றகட் புழுதி படுப்ப *
நறுமணங் கமழுந் துறுமலர் சொரிந்து *
விண்ணவ ருச்சியி லண்ணிய கரங்கூப்பி *
கெழுமிய நிகேதனக் கேதிச் சுரமுந் *
தொழுதகை யடியவர் தொல்பவத் தொடக்கைக் *
கானு வகைசெய் கோனு சலமுந் *
தன்னிடை தழுவ மன்னிய சிறப்பாற் *
[redacted]பழமறை மூவர்சொல் புனைந்த *
காழிநற் பொழில்சூ ழீழநன் னாட்டின் *
முகிறழா மிலாங்கலி நகுமிட றுமிழ்ந்த *
முற்றிய முப்புடை நெற்றிளங் கமுகின் *
படுகுலை சாய்த்துத் துடுமென வீழ்தலின் *
வானயாற் றகவயின் மீனின மொளிப்பக் *
கானிமிர்த் திளவரால் கடிதுதாய்த் திருமூ *
நீர்கால் பாத்த சீர்சால் படப்பை *
புறந்தழீஇ யோங்கிச் சிறந்தறல் னான் *
சூர்முத நடிந்த கூர்துறு வேற்கைக் *
கந்தவேட் கன்பார் கந்தவேட் பெயரியோன் *
சொல்வியன் றவத்தாற் கல்வியக் குரித்தெனு *
விடலரும் பல்லுயிர் மிடனற வற்றோ *
னிலக்கண விலக்கிய நிருக்கவே தாந்தப் *
பெருக்கமுற் றுணர்ந்த பிறிறு பெரியோன் *

பதிபசு பாசப் பகுப்பிற் றாமெனப்
பொதிவுறத் தெரித்துப் பொருவிலின் புறத்துஞ்
சைவசித் தாந்த மெய்வரு பனுவன்
முற்றொருங் குணர்ந்தருள் பொத்திய வசத்தாற்
சிவமே பொருளெனத் தேர்ந்த புந்தியோ
னவநிதி சமழ்ப்ப நல்கருட் கொடையினோன்
கதுவிய புல்லமைக் கதிர்ப்பின்
முதுபுக ழாறு முகநா வலனே.

திரிசிரபுரம்,

முத்துச்சாமிப்பிள்ளைகுமாரர்

முருகையப்பிள்ளை

இயற்றிய

ஆசிரியவிருத்தம்.

மருவளர் மலர்க்கணையன் மாற்கரிய திருமுடியு மலரடியும் வையை நதியின்
வான்கரைமா ணெளிதுணர மலிய 'பு வாய்ந்ததிரு வாதவூ ரடிக ளருள்செய்
திருவளா திரு கோவை யூர்நசிவி ஞ் கல்லியர் செய்தவுளாசேர்த்தெழுதவுஞ்
சிற்றமப லந்தந்தை நினையினவ கரமலர் சிவக்குமென் [illegible]கவே
ஞருவளரு மோருரு வெடுத்துள முவத்தத் குரியதிரு நாம [illegible]ரான் [ய்வத்
டுயாக ஊர் தனிலவந்த தெனவாறு முகனென்னு மொன்பெயர் சுமந்துதெ
ருவளா கரத்தினு ளருளன்பு முதலாய சற்குணஞ் சார்ந்த பொன்னுக
சாமிவேள் கொண்டாட வடியர்கட் கின்பத் தழைப்பவச் சிட்டனனரோ.

சூசிபத்திரம்.

	இளவிக்கொத்து.	பக்கம்.
க	இயற்கைப்புணர்ச்சி.	உ
உ	பாங்கற்கூட்டம்.	உசு
ங	இடந்தலைப்பாடு.	ரும
ச	மதியுடம்படுத்தல்.	ருக
ரு	இருவருமுளவழியவன்வரவுணர்தல்.	ருகூ
சு	முன்னுறவுணர்தல்.	சுக
எ	குறையறவுணர்தல்.	சுசு
அ	நாணநாட்டம்.	ஙஎ
கூ	நடுங்கநாட்டம்.	எஉ
ய	மடற்றுறை.	எசு
யக	குறைநயப்பித்தல்.	அஙூ
யஉ	சேட்படை.	அகூ
யங	பகற்குறி.	ஙயக
யச	இரவுக்குறி.	ஙசஙூ
யரு	ஒருவழித்தணத்தல்.	ஙகூஎ
யசு	உடன்போக்கு.	ஙஎஅ
யஎ	வரைவுமுடுக்கம்.	உஉஉ
யஅ	வரைபொருட்பிரிதல்.	உஙசு
யகூ	மணஞ்சிறப்புரைத்தல்.	உசுரு
உய	ஓதற்பிரிவு.	உஎஉ
உக	காவற்பிரிவு.	உஎசு
உஉ	பகைதணிவினைப்பிரிவு.	உஎஅ
உங	வேந்தற்குற்றமுற்பிரிவு.	உஅய
உச	பொருள்வயிற்பிரிவு.	உகஉ
உரு	பாத்தையிற்பிரிவு.	ஙஙஎ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கோவையார்

என்கின்ற

திருச்சிற்றம்பலக்கோவையார்

மூலமும் உரையும்.

விநாயகவணக்கம்.

எண்ணிறைந்ததில்லை யெழுகோபுரத்திகழுங்
கண்ணிறைந்துநின்றருளுங் கற்பகமே-நண்ணியசீர்த்
தேனூறுசெஞ்சொற் றிருக்கோவையென்கின்ற
நானூறுமென்மனத்தே நல்கு. *

நூற்சிறப்பு.

ஆரணங்காணென்பரந்தணர்யோகியாகமத்தின் *
காரணங்காணென்பர்காமநூல்காமநன்னூலதென்ப *
சீரணங்காணென்பரெண்ண * செழுத்தென்பரின்புலவோர் *
சீரணங்காயசிற்றம்பலக்கோவையைச்செப்பிடினே. *

இவ்விரண்டு செய்யுளும்
பிற்காலத்தால்ஓராற் செய்யப்பட்டன.

அதிகாரவரலாறு.

இயற்கைபரங்க னிடத்தலைமதியுட, னிருவருமுளவழி யவன் வரவுணர்தல், மூன்றுறவுணர்தல் ஞறையுறவுணர்த, லன்னிலைதான நடுங்கதாடன், மடல்ஞறைநயப்பு வழிச்சேட்படுத்த, லிடயிருபகற்ஞறி யிரவுக்ஞறியோ,டொருவழித்தணத்த லுடன்கொண்

---

* எண்ணென்பது தருக்கநூலுக்கும், எழுத்தென்பது இலக்கணநூலுக்கும்பெயர். அது "எண்ணுமெழுத் திங்கண னிலையாய்த்திக நூற்பயனைக்-கண்ணுக்கானா பார்நற் கதி. காண்டலனு மானங் கதையருந்தா பத்தியிலை-யீனடிகை நத வெண்ணெனவே யெண். எழுப்பதத்தை வாக்கினுக்கு மாற்றிவகு மாக்கு-மெழுததெழுவா யைந்து மெழுத்த.,, என்னும் பரமத தியிரபாலுத் திருகுறள்வானானுனர்க. ஏரணமெனினும் எண்ணெனினும் அளவையெனினும் தருக்கமெனினும் நியாயமெனினுமொக்கும். வடநூலாரும தருக்கம லியாகரணமெனனும இரணடையுமே மக்கட்கிருகண்ணெனக்கூறுமரபுகேட்டுணர்க.

டேகல், வரைவுமுடுக்கம் வரைபொருட்பிரிதல், மணஞ்சிறப்போ தல் வரர்புவிகாவ, விணங்கலர்ப்பொருத்தல் வேற்றற்குற்றழி, பொருள்வயிற்பிரிதல் பரத்தையிற்பிரிதலென், றருள்வயிற்பிறந் த வகத்திணைமருங்கி, னிருளறுநிகழ்ச்சி யிவையெனமொழிப.

இதன்பொருள்.

இயற்கைப்புணர்ச்சி- பாங்கற்கூட்டம்- இடந்தலைப்பாடு- மதி யுடன்படுத்தல்- இருவருமுளவழி யவன்வரவுணர்தல்- மூன்றுறவு ணர்தல்-குறையுறவுணர்தல்-நாணநாட்டம்-நடுங்கநாட்டம்-மடல்- குறைறயப்பித்தல்-சேட்படை-பகற்குறி-இரவுக்குறி-ஒருவழித்த ணத்தல்-உடன்போக்கு- வரைவுமுடுக்கம்- வரைபொருட்பிரிதல்- மணஞ்சிறப்பரைத்தல்- ஓதற்பிரிதல்- காவற்பிரிதல்- பகைதணிவி னைப்பிரிதல்-வேற்றற்குற்றழிப்பிரிதல்-பொருள்வயிற்பிரிதல்-ப ரத்தையிற்பிரிதல் எனவிவ்விருபத்தைந்தும் இற்றூற்றுக் கிளவி க் கொத்தெனப்படுமதிகாரங்களாமென்றுகூறுவா அகத்திணையி லக்கணமுணர்ந்தோரொன்றவாறு. அவற்றுள்,—

இயற்கைப்புணர்ச்சி.

இயற்கைப்புணர்ச்சியென்பது-பொருளதிகாரத்திற் கூறப்பட்ட தலைமகனும், தலைமகளும், அவ்வாறொரு பொழிலிடத்தெதிர்ப்பட்டுத் தெய்வமிடைநிற்பப் பான்மை வழியோடி ஓராவிற் கிருகோடுதோன்றினாற்போலத் தம்முளொத்தவன்பினராய் அவ்விருவரொத்தார் தம்முட்டாமே கூடுங்கூட்டம்.

அது நிகழுமாறு- காட்சியையந் தெளிதலையட்பேயுட்கோடெய்வத் துணிதல்கைகிளையொடு,கலவியுணர்த்த லிருவயினொத்தல், கிளவிவேட்ட னலம்புனைந்துரைத்தல்,பிரிவுணர்த்தல்லொடு பருவரலறிதல்,லருட்குணமுணர்த்த லணிமைகூற, லாடிடத்துய்த்த லருமையறிதல்,பாங்கிலையறிதலெனவிரொன்பா,லீங்காவியற் கை நெறியெனமொழிப.

(இ-ள்.) காட்சி-ஐயம்- தெளிதல்-நயப்பு- உட்கோள்- தெய்வத் தைமகிழ்தல்-புணர்ச்சி துணிதல்- கலவியுணர்த்தல்- இருவயினொத் தல்-கிளவிவேட்டல்-நலம்புனைந்துரைத்தல்- பிரிவுணர்த்தல்-பரு வரலறிதல்-அருட்குணமுணர்த்தல்- இடமணித்துக்கூறிவற்புறுத் தல்-ஆடிடத்துய்த்தல்-அருமையறிதல்-பாங்கிலையறிதல் என வி வைபதினெட்டும் இயற்கைப்புணர்ச்சியாம். எ-று. அவற்றுள்,—

காட்சி.

காட்சியென்பது-தலைமகளைத் தலைமகன்கண்ணுற்று இஃதொரு வியப்பென்னென்றல். அதற்குச்செய்யுள்.

திருவளர்தாமரைசீர்வளர்காவிகளீர்சர்தில்லைக் *
குருவளர்பூங்குமிழ்கோக்குடைங்காந்தள்கொண்டோர்குதெய்வ
மருவளர்மாலையோர்வல்லியினொல்கியனடைவாய்ந் *
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே(௧)

மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர்வேலவன் கண்ணுற்ற து.

திருவாதவூரடிகள் இத்திருக்கோவை யை
என்னுதலுமெடுத்துக்கொண்டாரோவெனில்,

அறிவோனறிவில தெனவிரண்டாகு *
தெறியினிற்றொகைபெற்று நிரல்படவிரிந்த *
மண்புனலனல்வளி மாவிசும்பெனுஅ *
வெண்மதிசெஞ்சுடர் வேட்போனெனுஅ *
வெண்வகைநிலைஇய வெவ்வகைப்பொருளுந் *
தோற்றநிலையிறுதி கட்டுவீடென்னு *
மாற்றருஞ்செயல்வழி மாறுதுசெயப்பட்டு *
வெருவாவுள்ளத்து வேட்போன்றுன்செய் *
யிருவினைப்பயன்றுய்த்து மும்மலனொரீஇப் *
பொருவறுசிவகதி பொற்பினிதுபொருந்தவு *
மேனையனதத்தங் குணநிலைபுணரவு *
நிலைஇயவ்வயி னிமித்தமாகி *
யலகுதவிர்த்த பலவகையண்டமு *
மின்னுமழைவெயிலின் றுன்னனுப்புணர்த்து *
தன்னுளடங்கவுந் தானவற்றுள்ளு *
நுன்னுணர்வாயு நோக்கருநுழையிற் *
சிறுமைபெருமைக் கிருவரம்பெய்திப் *
போக்கும்வரவும் புணர்வுமின்றி *
யாக்கமுங்கேடு மாதியுமந்தமு *
நடுவுமிகந்து ஞானத்திராளா *
யடியுமுடியு மளவாதயர்ந்து *
தெடியோனுன்முக னுன்மறைபோற்ற *
வெரிசுடர்க்கனலியி னீங்கரனுவிரிசுடர் *

வெப்பமும்விளக்கமு மொப்பவோர்பொழுதினிற் *
றுப்புறவியற்றுவ தெனவெப்பொருளுங் *
காண்டறுமியற்றலு மியல்பாமாண்டுடன் *
றன்னினி · காது தானவின்றுவிளங்கிய *
வெண்ணவுணர்வுகலையுஞ் சிலம்புஞ்சிலம்படிப் *
பண்ணமைத்தமொழிப் பார்ப்பதிகாண *
வையாறதன்மிசை பெட்டுத்தலையிட்ட *
மையிலவான்கலை மெய்யுடன்பொருந்தித் *
தில்லைமூதூர்ப் பொதுவினிற்றோன்றி *
யெல்லையிலானந்த நடம்புரிகின்ற *
பரமகாரணன் றிருவருளதனாற் *
றிருவாதவூர்மகிழ் செழுமறைமுனிவர் *
ஐம்பொறிகளையிகந்தறிவாயறியாச் *
செம்புலச்செல்வ ராயினரதனி *
னறிவனாற்பொருளு முலகநூல்வழக்குமென *
விருபொருளுறுதலி னெடுத்துக்கொண்டனர் *

ஆங்கவ் விரண்டனுள்

ஆகமநூல்வழியி னுதலியபொருளை *
யோகதுன்பொருளினை யுணர்த்துதற்சாரி *
லுலகநூல்வழியி னுதலியபொருளெனு *
மலகிறீம்பாற் பாவைக்கண்ணெம் *
புலனெனுங்கொள்கலன் முகந்தவகைகிறி *
னுலையாமரபி னுணர்க்கற்பாற்று. *

அஃதியாதோவெனின், எழுவாய்க்கிடந்தபாட்டின்பொருளு ணர்க்கவிளங்கும். அஃதேனெ, இப்பாட்டென்னுதலிற்றோவெனின், அறம் பொருள் இன்பம் வீடென்னு நான்குபொருளினும், இன்பத்தை நுதலி இத்திருக்கோவையின்கணுணர்க்கின்ற களவியற் பொருளினது பொழிப்பிலக்கணத்தையும், அதற்குறுப்பாகிய கைக்கிளைத்திணையின்கண் முதற்கிடந்த காட்சியென்னும் ஒருதலைக்காமத்தினையும், உடனிலைச்சிலேடையாக வுணர்த்துதலுதலுற்று.

திருவளர்தாமரை—போன்றொளிர்கின்றதே.

மதிவாணுதல்—கண்ணுற்றது.

இன்பொருள் திருவளருந் தாமரைப்பூவினையும், அழகுவள ருநீலப்பூக்களையும், ஈசர் தில்லைவரைப்பின்கணுண்டாகிய பூங்கு ழிலினதுநிறம்வளருப் பூவினையும், கோங்கரும்புகளையும், செவ் விகளார்கடபூக்களையும் உறுப்பாகக்கொண்டு, மேம்பட்ட செய் வமணம்வளரும்மாலை ஒருவலவிபோலநடங்கி, அன்னத்தினடை போலநடைவாய்த்து, வடிவுவளருங்காமனது வெற்றிக்கொடி போனறு விளங்காநின்றது, என்னவியப்பே! என்றவாறு.

திருவென்பது-கண்டாரால் விரும்பப்படுந் தன்மைநோக்கம். ஈ-று திருமகடங்குந் தாமரையெனினுமமையும் பூங்குழிலென் பது முதலாகிய தன்பொருட்சேற்ற அடையாய்த் தனிநறுமோர ருபெயர ஈசர்தில்லையென்பதனை எல்லாவற்றோடுங்கூட்டுக, பல நிலங்கட்குமுரிய பூக்களைக்கூறியவதனால், நிலையக்கங்கூறியவா றாயிற்று ஆகலான, பலநிலங்களினுஞ்சென்று துய்க்குமின்பமெ லலாந்தில்லையிலவாநின்றவாறு. ஆண்டிருந்தே துய்ப்பலெனபது போ தரும். போதர, நும்மையின்பதிற்குத் தில்லையேகாரணமென் பது கூறியவாறாயிற்று ஆகலான, ஈசர்தில்லையென்றதனால், மறு மையினபதிற்கு ஈங்காரணமாதல் சொல்லாமையினாலுங்கூறிய வாறாதலாற் செவ்வெணணின்றொகைதொக்கதில்லது. ஓங்கு மா லையெனவிரைபம் செய்வமருவளர்மாலையெனறதனாலுந், தாமரை முதலியவறறனியன்றபிற மாலையோடு இதற்குவேற்றுமைகூ றியவாறு. வாய்ந்தெனபது நடையினவினையாலணாகிய பெயர்ப்பட்டு முதலினையேயாமுடிந்தது. உருவளர்வாமன்றன் வெனறிக்கொடியன்றது. நுவலவிழிகளுதிர்தாற்று உருவிழப்ப தனாழ்ந்மடியாவாணபயர் நிற்றுயர்தகொடிமட. அனறனட வாய்ந்தென்பதற்கு அவ்வவ்வியலபுவாய்ப்பப் பெற்றெனினுமை யும்.

திருவென்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மைநோக்க மென்றது அழக. நீம்தென்சொல்லியவாறேயெனின், யாவனொ ருவன் யாதொருபொருளைக்கண்டாலோ அக்கண்டவனுக்கு அப் பொருண்மேற்செற்ற விருப்பத்தோடேகூடியவழகு. அதன் மேலவற்கு விருப்பஞ்சேறல் அதனிற்சிறந்தவுருவும் நலனும் ஒ ளிபுமெய்வலைகயாலும் பிறிதொன்றற்கில்லாமையால். திருவென்ற து அழகுகேபெயராயிற்று அங்ஙனமாயின் இதுசெய்யுளினெ ழிய வழக்கினுமிவருவதுண்டோவெனின், உண்டு, கோயிலைத்திரு க்கோயிலெனறும், கோயிலவாயிலைத்திருவாயிலென்றும், அலைக

தித்திருவலகென்றும், பாதுகையைத்திருவடிநிலையென்றும், வழங்கும் இத்தொடக்கத்தன வெல்லாந் திருமகளைநோக்கியெழுந்தனவல்ல. அது கண்டவனுடைய விருப்பத்தானேயெழுந்தது. ஆதலானுந் திருவென்பது அழகென்றேயறிக. அதனாற்றிருவென்பது கண்டாரால் விரும்பப்படுதற் தன்மைநோக்கமே. அல்லதுஉந்தான்கண்டவடிவின் பெருமையைப்பாராட்டுவானாதலான், ஒருத்தியிருந்த தவிசை இவளுக்குமுகமாகக்கூறுதல்வழுவாம். ஆதலாற்றான்கண்டவடிவினுயாசியையே கூறினனுமெனக்கொள்க.

வளரென்பதற்கு வளருமென்றும்மைகொடுத்து உரைவாய்பாகோட்டியதெற்றோ மேலாலோ வளரக்கடவதென்பது கடா. அதற்குவிடை- வளர்ந்ததாமரை வளராநின்ற தாமரையென்றுகழிகாலத்தையும் நிகழ்காலத்தையுங்கூறாது, மேல்வருங்காலத்தைக் கூறவேண்டியது. கழிகாலத்தைக்கூறினுற் கழிந்ததனைக்கூறிற்றாம். நிகழ்காலத்தைக்கூறினுல் முன்னும்பின்னுமில்லி இப்பொழுதுள்ளதனைக்கூறிற்றாம். ஆதலான் வளருமென்று வருங்காலங்கூறிய வாறன்று. மூன்றுகாலத்திற்கும் பொதுவாகிய சொற்றோன்ற வேகூறினுர். ஆயின் உம்மைச்சொன் மூன்றுகாலத்திற்கும்பொதுவாகிவந்தவாறெங்னே?- இது செய்யுட்சொல்லாதலால்வந்தது. செய்யுளினெழிய வழக்கினும் வருவதுண்டோவெனின், உண்டு. அது ஞாயிறு திங்களியங்கும் -யாறெழுகும்- மலைநிற்கும் என்றற்றொடக்கத்தனவற்றுனறிக. அன்றியும், "முந்நிலைக் காலமுந்தோன்று மியற்கை- பெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து- மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்,, என்றாராகலின், உம்மைச்சொல் வருங்காலத்தையே காட்டாது மூன்றுகாலத்திற்கும் பொதுவாய்நிற்குமென்றேயறிக.

இனித்திருமகடங்குந் தாமரையெனினுமமையுமென்று அமைவுரைத்ததென்னை இதனையுவமையாக்கக்குறையென்னையெனின், திருமகளாலே தாமரையுயர்ந்ததாம். தாமரையினது சிறப்புக்கூறிற்றில்லையாம். என்னை, எல்லாராலும்விரும்பப்பட்ட அழகுஅவட்குண்டாகையாலே திருமகளென்று பெயராயிற்று. அங்ஙனம் பெருமையுடையவளும் இதன்சிறப்புநோக்கியேயிதனிலிருந்தாளல்லது தன்னுலேயிதற்குச் சிறப்புப்பெறவேண்டியிருந்தாளல்லள், ஆதலாற் றாமரைக்கொத்ததும் மிக்கதுமில்லை. அங்ஙனம் பெருமையுடையவளாலும்விரும்பப்பட்டதாதலால், திருவென்

பது கண்டாரால்விரும்பப்படுந்தன்மை நோக்கமென்பது பெற்றாம்.

இனித்திருவளர்தாமரை சீர்வளர்காவியென்றனபோல இதனை யுங் குருவளர் குமிழென்னாது பூங்குமிழென்றதெற்றிற்கெனின், மூன்றும்பின்னும் வருகின்ற எண்ணிற் பூவைநோக்கியன்று, எண்ணிச்செய்யுளின்பத்தைநோக்கியும் இதற்காருபெயரை நோக்கியு மெனவறிக. அஃதென்போலவெனின், "தளிபெறு தண்புலத்து த் தலைப்பெயற் கரும்பின்று-முளிமுதற் பொதுளிய மூட்புறப் பிடவமும்,, என்பதுபோல. கோங்கெங இதனையொழிந்த நான் கிற்கு மடைகொடுத்து இதற்கடைகொடாதது பாலைநிலஞ் சொல்லுதலேக்கி, என்னை, பாலைக்குநிலமின்றுதலான். ஆயின் மற்றை யநிலம்போலப் பாலைக்கு நிலமின்மையாற் கூறினாரிலர் மகளிர்க்குறுப்பிற்சிறந்தவுறுப்பாகிய முலைக்குவமையாகப் புணர்க்கப்பட்ட கோங்கிற்கு அடைகொடுக்கக்கடவதன்றேவெனின், அடைகொடுப்பிற் பிறவுறுப்புக்களுடன் இதனையுமொப்பித்ததாம். ஆதலான் இதற்கடைகொடாமையே முலைக்கேற்றத்தை விளக்கிநின்றது. அஃது முற்கூறியவகையில் திருக்கோயில் திருவாயில் திருவலகு என்றவற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் திருநாயனாரென்னாதது போலவெனக்கொள்க.

இனியுட்டனிலைச் சிலேடையாவது ஒருபாட்டிரண்டுவகையாற் பொருள்கொண்டுநிற்பது. அவ்விரண்டனுள்ளும் இத்திருக்கோவையின்கணுரைக்கின்றவிடபாருவாவது தாமனாரு வென்றிக்கொடி போன்றுவிளங்கி அன்னநடைத்தாய்த் தாமரையே நெய்தலே குமிழே கோங்கே காந்தளே யென்றிப்பூக்களாற் றொடுக்கப்பட்டோங்குந் தெய்வமருவளர்மாலையின் வரலாறு விரித்துரைக்கப்படுகின்றதென்பது. என்றது என்சொல்லிபவாறேவெனின், தாமரை மருதநிலத்துப்பூவாதலான் மருதமும், நெய்தல் நெய்தனிலத்துப்பூவாதலான் நெய்தலும், குமிழ் முல்லைநிலத்துப்பூவாதலான் முல்லையும், கோங்கு பாலைநிலத்துப் பூவாதலாற் பாலையும், காந்தள் குறிஞ்சிநிலத்துப்பூவாதலாற் குறிஞ்சியுமென இவ்வைந்துபூவினாலும் ஐந்துநிலனையுஞ் சுட்டினார். ஆதலாற் றாமெடுத்துக்கொண்ட அகத்தமிழின்பெருமைகூறுதற்கில்லாநகரின்பெருமைகூறினார், நிலமயக்கங்கூறுதலான். அற்றன்று அஃதேகூறினார். என்னை, சொலவிற் முடிவினப்பொருண்முடித்தலென்னுந் தந்திரவுத்தியாற் புணர்தலும் புணர்தனியிற்றமுமாகிய குறிஞ்சியேகூறினார். என்

லை, பைங்காந்தளென்று குறிஞ்சிக்குரிய பூவிலே முடித்தலான். அன்றியும் பூவினாலே நிலமுணர்த்திய வாறு இத்திருக்கோவையின் கண்ணும் "நறப்பாவைநின் றுழுவேந்தையைப் போகொடி கோங்கம்விராய், என்னும்பாட்டினுட்கண்டு கொள்க அல்லதூஉ ஞ்சிணையக்கூறு மூலறிகிளவியென்று மாறுபெயராதுமாம். ஆயினுங்குறிஞ்சியே கூறவமையாதோ நிலமயக்கங்கூறவேண்டிய தெற்றிற்கெனின், ஓரிடத்தொரு கலியாணமுண்டானால் எல்லாரிடத்து முண்டாகிய ஆபரணங்களெல்லாம் அவ்விடத்து கூடி அந்த ஆபரணத்தைச் சிறப்பித்தாற்போலப் பலநிலங்களும் இக்குறிஞ்சியையே சிறப்பித்து நின்றன உருவளர்காமன்றன்வெல்லிக்கொடியென்றமையின், அன்பினாலே நிழற்றகாமப் பொருளைச் சுட்டினார் யாருங்கேட்போரின்றி தன்னெஞ்சிற்குச் சொன்னமையின், கந்தருவமொழுக்கத்தையேயொத்த களவொழுக்கத்தையேசுட்டினார் ஈசர்தில்லையென்றமையின், வீடுபேற்றின் பயத்தினையுஞ் சுட்டினார்.

களவொழுக்கமென்னும் பெயர்பெற்று வீடுபேற்றின் பயத்தினாய் அன்பினாலெழுந்த காமப்பொருளுதலிக் கந்தருவமொழுக்கத்தோடொத்துக் காமமானதுவென்றிக்கொடிபோன்று ஐந்திணையின்கண்ணுந் வென்று எனைநாளிருந்த கடிமலர்மாலையின்வரலாறு இக்திருக்கோவையின்கணுளாகக்பக்கின்றதென்றுவாறு. களவொழுக்கத்தினை ஓர் மாலையாகவுட்கொண்டு உருவகவாய்பாட்டானுணர்த்தினாரென்பது. இன்பத்தை நுகலியதென்றாராயினும், இன்பநுதலிக்கிடாக அறம் பொருள் இன்பம் வீடென நான்குபொருளையுநுகலிற்று. அவற்றுள், வீடுநுகலியவாறு மேலே சொல்லிப்போந்தாம். ஒழிந்தமூன்றையும் நுகலியவாறென்னையெனின், ஈண்டுத்தலைமகனுந் தலைமகளுமென்றுநாட்டினார். இவனுக்கு ஆண்குழவினாலுண்டாகிக்காருமெப்பாருமியலிழிந்தாரல்லது இவளுமன்னாள். இவர் ஒருவர்கண்ணொருவர் இன்னியமையாத அன்புடையராதலான், இவர்கண்ணே அம்மூன்றுமுளவாம். இவ்வொழுக்கத்தினது கலவையினாலே வீடுபேறு விளைவுவிடுத்தவிழுமியமாருள்ளமும் விழுமிக்கட்டாழுமாதலின், காமனதுவென்றிக்கொடியெனவே வென்றிகொள்ளாநின்றதென்றானென்பது. முதற்கட்கிடந்த இப்பாட்டிக்காட்சியிற்மேற்று இப்பாட்டால் வேட்கை இவர்க்கு ஒன்றாயவாறெங்னெனெனமாறெனின், உருவளர் காமன்றன்வெல்லிக்கொடியென்றமையிற் பெற்றாம்.

உவமமிருதியாற் சொன்னாருமுளர், இப்பாட்டிற்கு மெய்ப்பாடு-உவகை. உவகையாவது சிறுங்காரம், அது காமப்பொருண்மூதலாயவின்பத்தின்மேற்று உவகையென்பது காரணக்குறி, உவப்பித்தலினுவகையாயிற்று. உவந்தநெஞ்சினனாய் அவளைப்பேர் தெய்வப் பூ மாலையாகவு நவகாகொண்டு வலமாது வெல்லிடுகொடியோடுவமித்துச்சொன்னானென்பது. என்னோமாலையாமாறு, "பூப்புனை மாலையு மாலையுனை மாதரும், மேரு தடவின் வின்றுன் டொடர்கைக் கட்டியுங், கோச்சோன் பொருங் கோலதமென் றுகு ம்,, என்பதனாற் பெண்ணுக்கு மாலையெ லாமுபடையாயிறு. ஆயின் யாரொருவரையுங் கேசாதிபாதமாதலு பாதாதிகேசமாதலு வருணிக்கவேண்டும். அவற்றுள், இது கேசாதிபாதமாக வருணிக்கப்பட்டது. என்னை, திருவளர் தாமரையென்று மு முதலாகவுள்ளித்துக்கொண்டு அன்னநடையென்றுபாதத்திலேமுடிந்ததாலன். ஆயின், இறில்நடைகண்டானாயின் மேல் ஐயநிலையுணர்த்தல் வருவாமெனின், இவன் நடைகண்டானல்லன், இம்மாலை நடக்குமாயின் அன்னநடையை யொக்குமென்றான். வாய்ந்தென்பது நடையின் வினையாகலிற் சினைவினைப்பாற்பட்டு முதல்வினையோடு முடிந்ததென்றது-அன்னத்திற்குச்சினை காலி, காலிற்குச்சினை நடை, ஆகையால் முதலெல்லாறது அன்னத்தை.

அங்ஙனமுவமித்துச் சொன்னதனாற்பயன் மகிழ்தல். என்னை, "சொல்லெதிர் பெறாஅன் சொல்லியின் புறுதல், புல்லித்தோள் ஞாங் கைக்கிளைக் குரிப்பே,, என்று அகத்திணையியற் சூத்திரத்திற்சொன்னாராகலினென்பது. அஃதேல உவகையென்னாமெய்ப்பாட்டானே மகிழ்ச்சிபெற்றாம். இனியிக்கூற்றுப்பன்னிரோடு மகிழ்வித்தவாறென்னையெனின், பெருஞ்சிறப்பினாறு வாய்வெளிந்து தான்வேட்டபொருள்வயிற் றன்குறிப்பன்றிக்கேயாஞ் சொன்னிகழும். நிகழுந்தோறு மகிழ்ச்சிதான்றுமென்பது, என்போலவெனின், ஒருவன் தான்வழிபடுதெய்வத்தைப்பரவிய செம்புட்களைபோய்ப்பணர்ந்திருந்தாரைனெனினும், அவற்றுள் அத்தெய்வத்தை வழிபடும்பொழுது கண்ணீர்வாரீர்தலுமெய்ம்மயிர் சிலிர்ப்பக்காண்டும், அல்லதாஉஞ் எற்றத்தாரது சாக்காடுமுற்றவுணர்ந்தாரேயெனினுஞ் செத்தாரிடைஞ்ச உரையாடலுமொழுது துன்பமிகாரக் கலுழக்காண்டும், இவைபோலவென்பது. ஆகவின் திணைப்பின்வழிய துரையாயினும் திணைப்பின் உலகியலாய விடத்தடமு

டைக்கேதன்பது நெஞ்சின்மிக்கது வாய்சோர்ந்து சொன்னிகழு மென்பதனை இக்கோவையின் என்வகைமெய்ப்பாட்டிலுங்கண்டு ஊன்கர்ஊரைக்கொள்க. பயனென்பது நெஞ்சினடுத்ததோர் மெய்ப்பாடுபாரணமாகத் தன்வயினிகழ்ந்த சொல்லாலெய்துவது மெய்ப்பாடென்பது பறந்துக்கண்டதோர்பொருள் காரணமாக நெஞ்சின்கட்டோன்றிய விகாரத்தின்விளைவு எழுவாய்க்கிடந்த இப்பாட்டுநுதலியபொருள் பொழிப்பினுலுணரத்தரம், நுண்ணிதாக வுரைப்பான்புகின் வரம்பின்றிப்பெருகுமென்பது. (க)

ஐயம்.

ஐயமென்பது- கண்ணுற்றபின்னர் இங்ஙனந் தோன்றுநின்ற இம்மாது திருமகள்முதலாகிய தெய்வமோ அன்றி மக்களுள்ளாள் கொல்லோவென் றையுறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

போதோவிசும்போபுனலோபனிகளதுபதியோ *
பாதோவதிருவதேதுமரிதியமன்விடுத்த *
தூதோவனகன்றுணையோவிணையிலிதொல்லைத்தில்லை *
மாதோமடமயிலோவெனநின்றவர்வாழ்பதியே. (உ)

தெரியவரியதோர் தெய்வமென்
அருவரைநாட னையுற்ற

(இ-ள்.) யமனுல்விடுக்கப்பட்டதூதோ, வசித்தற்கரியாரை வசித்தற்கு அனங்கற்குண்டாயிற்றோர்துணையோ, ஒப்பில்லாதானது பழையபதியாகிய இத்தில்லைக்கண் வாழ்வாரோர்மாதரோ, மடப்பத்தையுடைய மயிலோவென்று சொல்லும்வண்ணம்நின்றவரது வாழ்பதி தாமரைப்பூவோ, ஆகாயமோ, நீரோ, பாம்புகளதுபதியாகிய நாகருலகமோ, யாதோ சிறிதுந் துணிதலரிது எ-று.

யமனூதும், அனங்கன்றுணையும், மடமயிலும், ஐயநிலை யுவுமைக்கணுவமையாய்நின்றன. தில்லைமாது உவுமிகைப்படும்பொருள். ஐயநிகழ்ந்தது திருமகள்முதலாகிய தெய்வமோ மக்களுள்ளாளோவென்றெண்க. மக்களுள்ளாளாதல் சிறுபான்மையாதலிற் கூறிற்றிலர்.

தில்லைமாதோ வென்பதற்குத் தில்லைக்கண் வாழ்வாரோர் மாதுடைமாதரோவென் றுரைப்பாருமுளர். தில்லைமாதுடைமாது மகளிர்க்குவமையாகப் புணர்க்கப்படுவனவற்றி னொன்றன்மையால் உவமையாகாது உவமிக்கப்படும் பொருளெனின், ஐயமின்றித்

துணிவாம். அதனால் நில்லைமா தோவென்பது மானுடம் தெய்வமென்றும் வேறுபாடுகருதாது மகளிரென்னும் பொதுமையுற்றிருக்கிறது நில்லைநிறவுமெனக் கூட்டிறுபமையும்.

தெய்வமென்ன- தெய்வமோ அல்லளோவென. மெய்ப்பாடு- உவகைவயச்சார்ந்தமருட்கை. எங்கே, "பெருமை பெருமை சிறுமை யாக்கமொடு,மலிமை சாலா மருட்கை நான்கே.,,என்றாராகலின். நண்பு வனப்பினதுபெருமையை விறந்தசாலெனினது அவ்வியப்பு மருட்கைப்பாறபடும பயன்-ஐயந்தீர்தல். (௨)

தெளிதல்.

தெளிதலென்பது- ஐயுற்றபின்னர் அவயவாதியங்கக்கண்டு இவள் தெய்வமல்லளென்று தெளியாநிற்றல். அதற்குச் செய்யுள்.

பாயும்விடையான்நிலைவயக்னுள்படைகவன்னிமைக்கும் *
தோயுநிலத்தடிதாமலர்வாடாநிற்றுயரமெய்து *
யாயுமனனேயணங்கல்லளெம்மாழுவிடைபற்று *
தேயுமருங்குற்பெரும்பணைத்தோளிச்சிறுதாதலே. (௩)

அணங்கலென்றாயினல்லவை ன்
ஞணங்களைறேயக்கை ருதிதுணைத்த து.

(இ-ள்) பாய்ந்துசெலுமம் விடையையுடைய அரனது நிலைமையையொப்பாருடைய படைபோலுங்கண்கள் இமையாநின்றன. நிலத்தின்கண் அடிதின்டாநின்றன. தாயமலர்கள் வாடாநின்றன, ஆதலின், துயரத்தையெய்தி ஆராயுமனனே, அழகியபெரியவாகிய முலைகளைச்சுமந்து தேயாநின்ற மருங்குலையும் பணைபோலும் பெரியதோள்களையுமுடைய இச்சிறுதாதல் தெய்வமல்லளோ.எ-று.

துயரமெய்தியாயுமனனே யென்றதனால், தெளிவல்கூறப்பட்டதாம். மெய்ப்பாடு - மருட்கையினிம்பெருமிதம். எங்கே, "கல்வி தறுகணிசைமை கொடையெனச், சொல்லப் பட்ட பெருமித நான்கே.,,என்றாராகலின். தெளிதலுங் கல்வியின்பாற்படும். பயன்-தெளிதல்.

அவ்வகை தெய்வங்கொல்லோவென் றறைபற்றுநின்றான் இவ்வுகை குறிகண்டு தெய்வமல்லள் மக்களுள்ளாளெனத்துணிந்தானென்பது. எனவே தெய்வமல்லளாதற்குக்காரணம் இவையுமனகுறியே வேற்றுமை யில்லையென்பது துணிவு.

நயப்பு.

நயப்பென்பது-தெய்வமல்லளென்று தெளிந்தபின்னர் மக்களு

ள்ளாளென்று நயந்து இடையில்லைகொலென்ற நெஞ்சிற்கு அல்குலும் முலையுங்காட்டி இடையுண்டென்று சென்றெய்த தினையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அகல்கின்றவல்குற்றடமதுகொங்கையவையவதீ *
புகல்கின்றதென்னைநெஞ்சுன்டேயிலடையடையார்புரங்க *
விகலகுன்றவில்லிற்செற்றோன்றில்லையிகனெம்மானெதிர்ந்த *
பகல்குன்றப்பல்லுருக்கிதோன்பழனம்மன்னபல்வளைக்கே. (ரு)

வண்டமர்புரிகுழ லொண்டொடிமடந்தையை
நயந்துவேண்டல் வியந்துள்ளிய ரு.

(இ-ள்) அகலாநின்ற வல்குலாகிய தடம் அது, முலை அவை, நெஞ்சே, வாணமிகுந்தி நீ சொல்லுகிறதென்! அடையாதார் புரங்களை ஒருகிலைக் குன்றமாகிய வில்லாற்செற்றவன், தில்லைக்கணுளனாகிய ஸ்ரீசல், எம்முடையவிறைவன், மாறுபட்ட ஆநிரைகளுடைப்பெருமை குன்றப் பல்லையுருத்தோன், அவனது திருப்பழனத்தையொக்கும் பலவளைக்கு இடையுண்டு. எ-று.

தடம்-உயர்ந்தவிடம். அல்குற்றடமது கொங்கையவை என்பது அல்குற்பெருமையானும் முலைப்பெருமையானும் இடையுண்டு என்றவாறாம், அல்குலும்முலையுமுண்மையான் இடையுண்டு என்றவாறு. அல்குற்றடமதுவென்றும் முலையவையென்றும் பெருமைகூறியது அவை விளங்கித் தோன்றுதலுறுதி. இகல்குன்ற வில்லிற் செற்றோனென்பதற்கு இகல்குலைய வில்லாற்செற்றோனெனினும் அமையும். நயந்தவண்ணல்- மக்களுள்ளாளென்று துணிதலால் நயந்தவண்ணல். உள்ளியது - கூட்டத்தை நினைந்தது. மெய்ப்பாடு- உவகையைச்சார்ந்த மருட்கை, வியந்துளாத்தலின். பயன் ஐயந்தீர்ந்துமகிழ்தல்.

இந்நான்குபாட்டும் ஒருவருள்ளக்கருத்தை யொருவரறியாது வொருதலைக்காமமாதலிற் கைக்கிளைப்பால். அதத்திணையின்கட் கைக்கிளைவருதல் திணைமயக்காம் பிறவெனின், கைக்கிளைமுதற் பெருந்திணை யிறுவாயெழுதிணையினுள்ளுங் கைக்கிளையும் பெருந்திணையும் அகத்தைச்சார்ந்த புறமாயினும், கிளவிக்கோவையின் எடுத்துக்கோடற்கட் காட்சிமுதலாயின சொல்லுதல் வனப்புடை மைநோக்கிக் கைக்கிளைதழீஇயினார். பெருந்திணைதழுவுதல் சிறப்பிலமையிலீகின்றார். இது நலம்பாராட்டல். (ச)

உட்கோள்.

உட்கோளென்பது-மக்களுள்ளாளென்று நயந்துசென்றெய்த நினைவாதின்றவன் தன்னிடத்து அவளுக்குண்டாகிய காதல் அவள் கண்ணிற்கண்டு தன்னுட்கொள்ளாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அணியுமமிழ்தமென்னாவியு மாயவன் றிலைச்சிற்றா *
மணியும்பராரதியாமலரேயான வுயாருந்தலைசிற் *
பிணியுமகற்குமருந்தும்பிறழப்பிறழ்வு மன்றெம் *
பணியும்புலைமருங்குற்பெருந்கோளிபடைகளன்களே. (௫)

இறைதிருக்கரத்துமறிமான்கருங்கி
யள்ளக்கருத்து வள்ளலிடுக. ௪.

(ப.ரை.) மின்னையும் பாமரையையுமொக்கு மிடையிலுமிடையும் பெருந்கோளினையுமுடையாளது படைபோலுமகன்கண் பிறழ்வோரும் பிறழாதோரும் பொருந்தாக்கதுமாறு பிணியும், உளைக்கருத்து வெளிப்படுக்கு தாணோக்கூடிய தோக்கதால் அதற்கு மருந்துமாகாதின்றன. எ-று எல்லாப்பரணமும் அமிழ்தும் என்னு யிருமாயவன், திருவிலைக்கட்டிந் தாமமணிம்போல அணிபரிக்கு [illegible] வைகொடிப்போல், அம்பரமலாதசேவிசளதியாதவுந் [illegible] னுடையதிருவடிகளை வழுத்தாதவரைப்போல உடம்பணியுமிடைக்கூட்டிக.

அணியென்றார் அழகுசெய்தலான் [illegible] ஞ்சுவையோ டுறுதிபயக்கலு டைமையான். [illegible] விக்கப்படும் பொருள்களெல்லாவற்றினு [illegible] றந்தமையான். [illegible] லின்பம்பயக்கு மிறைவனோடொக்கார்க்கு அணியும் அமிழ்தும் ஆவியும் இறப்ப விழிந்தனவேயாயினவே, "பொருளாது புலைவேடு ணர்ப்பேபான் குறிப்பின், [illegible] மரபிற் [illegible]" என்பதனான் நுண்டிச்சொல்லுவாரது [illegible] யாதலு, உலகத்துப்பொருள்களுள் அவற்றி [illegible] கணவிற்கியையாதலுமுயர்ந்தனவாயுவமையாயின. உம்பரலென்பது பாடமாயின், உம்பரானறிபப்படாதவெனவுரைக்க. பிறழப்பிறழ்வுமென்பது பாடமாயின், பிணியுமகற்றும் மாதிமாதியரப் பலடக்கன்கள் பிறழ்வுமெனவுரைக்க. இஃதுட்கோள் இவ்வையத்துங்கைக்கிள.

திணை-குறிஞ்சி. ஊகிகோள் - களவு கூற்று - தலைமகள்கூற்று. கேடபது-தெஞ்சுதெஞ்சென்பது பாடமாகண் இல்லையாலோ

வெனின் எஞ்சிற்றென்பதாம், வழிநேர்கூறினனெனினு மமையும். இடம்-முன்னிலை. காலம்-நிகழ்காலம். எச்சம்-இப்பெருந்தோளி பனைக்கண்களென்பழி இவ்வென்னுஞ் சுட்டுச் சொலவெஞ்சிற்று. மெய்ப்பாடு-உவகையைச்சார்ந்தபெருமிதம். கண்டு மெய்ப்பாட்டுப்பொருள்கோள் - கண்ணினாற் யாப்புறவறிதல். என்னை, "கண்ணினானுஞ் செவியினுந் திண்ணிதி னுணருமுணர்வுடை மரந்தரக் கல்லது தெரியி,னன்னயப் பொருள்மேர மெனவனருங் குரைத்தே,, என்றாராகலின். பயன்-தலைமகளது ஒறிப்பறிந்துமகிழ்தல். பிணியுமதற்கு மருந்துமாம் பெருந்தோளி பனைக்கண்களென்றலமையின், அவளுடம்பாட்டிகழ்ந்ததிப்பு அவள் நாட்டத்தானுணர்ந்தானென்பது. எனவே, "நாட்ட மிரண்டு மறிவுடம் படுத்தற்குக, கூட்டி யுணர்க்குங் குறிப்புணையாரும்,, என்றாராகலின்.

தெய்வத்தையகிழ்தல்.

அவ்வவனாற நீயிர் வருந்தாதொழிதுமெனத் தாளுடம்படாது வி
லக்கலாறு ஈசற்றுச் செய்யுள்.

ஊரானையை பழியாயுயபெண்ணை: நின்மடலினிருப்புச் *
சீரவாய்விலபடுநுதலிருந்திலமீசாடுவிலக் *
வாரவாய்ஞ்மெனுமனறுவேலொடுகொலைறுத்துகலைடா *
வாரவாய்தாரினறிவாயிலவாசசெய்கவறிதலவிலை. (அம்)

அறிவுமடமையண்ணலறிதுமவொழிகெ ன
மடநடைத்தேரூரி மடலவிலமிய து.

(இ-ள்) உயர்ந்தபெண்ணையினது நின்னணியமடலையூர்வாய், அ
ன்றியொழியாய், அழகு வாய்ந்தது சில மலையமடையாய, நின்கருத்
தை யாற்றிருத்தி விருத்தமல்லைக்கொடாது நிலையை ஆனாரு ஐய
கருமைவாய்ந்த ஏழுதுவிருப்பமுடையாட்கு உ ஏறு விருப்பமுடைகவொல
வி, இதற்கு அவளுடம்படாமலவனனறு நிலைக்கு நகைபிரதுப்பா
ரிகளால, இடந்தருமாயினும் யாரறிவார! இடந்தாராவாயிற் பின்
நீயறிந்தவற்றைச் செய்வாயாக. எ-று.

காரிபோலுங் சூழலெனினு மமையும். வாய்ச்சரிலெனின்பதற்கு
வாய்ப்பினெனினுமமையுட. பின்னாசசெய்கவென்றது- நீருறிந்த
து செய்வாயாயினும் என்றுறிப்பிதுவென்றவாறு. (அம்)

உடம்பட்டுவிலக்கல்.

உடம்பட்டுவிலக்கலென்பது உடம்படாது முன் பொதுப்பட
விலக்கி முகங்கொண்டு, பின்னர்த் தன்னோடு அவளிடை வேற்று
மையின்மைகூறி, யான் நின்குறைமுடித்துத் தருவேன் நீவருந்த

வேண்டாவெனத் தோழி தானுடம்பட்டுவில்க்காநிற்றல். அதற்கு ச்செய்யுள்.

பைந்நாணரவன்பிகடன்வாய்ப்படுநஞ்சமுதா *
மைந்நாணமணிகண்டன்மன்னும்புலியூர்மணந்தபொன்னிம் *
பொய்ந்நாண்முதுநிரைவாயானமுந்தினுமென்னின்முன்னு *
மிழுந்நிலிமதுவார்சுழலாட்கெல்கணின்னருளே. (அ௧)

அவருறுன்னிடைக் குரவருகூந்தலென்
னுயிர்க்கருத்து விள்ளாளென்ற து.

(இ-ள். பையையுடைய அரவாகிய நாணையுடையான், ஒலிக்கு ங்கடலில் உதிப்பட்ட நஞ்சம்அமுதாகும்மைந்நாணு நீலமணிகண்டா னுங் கண்டத்தையுடையான், அவன் மன்னும் புலியூராப்பொருந்திய பொன்போலவள், நாட்காலத்தாரும் பெருமையையுடைய இம்மதியகடற்கண் யானமுந்தினேனாயினும் தான் என்னின்முற்பட்டழுந்தும் தேனையுடைய நெடிய குழலாடாகு என்னுண்டாகிய இனிய அருள் இப்பொழுதித்தன்மைத்தாயிராநிற்கு து.எ-று.

அமுதாமென்னும் பெயரெச்சம் கண்டமென்னு நிலைப்பெயரெண்டாம். மைந்நாணுங் கண்டமெனவியையும் மணிகண்டமெனவியைதலு மடமொழிபிலக்கணத்தாற்றொக்குப் பின்றிரிந்துநிற்றலு மொய்- வலி, ஈண்டுப் பெருமையெனின்றது. குற்றேவலஞ்செய்வார்க்குப் பெரியோர்செய்யும் அருள் எக்காலத்துமொருதன்மைத்தாய் நிகழாதென்னுங்கருத்தான் இற்றாளிதுவென்றாள். எனவே தலைமகளதுபெருமையுந் தன்முயற்சியது அருமையுங் கூறியவாறாயிற்று. நாரா குரா மென்பன குறுகிநின்றன. வருமென்பது, மரபொல. இவையிரண்டற்கும் மெய்ப்படு- பெருமிதம். பயன்- தலைமகன்வயாற்றுவித்தல். (அ௬)

மடன்றிறம் முற்றிற்று.

குறைநயப்புக்கூறல்.

குறைநயப்புக்கூறலென்பது- தலைமகனை மடல்விலக்கிக் குறைநேர்ந்தமைந்த தோழி தலைமகளைக் குறைநயப்பிக்க அவன் குறைகூறு நிற்றல.

அதுவருமாறு, -சூத்திரம். குறிப்பறிதலோடு மென்மொழி கூறல், விரவிக கூறலறியாள் போறல், வஞ்சித் துரைத்தல் புலந்து கூறல், வன்மொழி கூறல் மனத்தொடு நேர்தல, சொன்ன விரு நான்குந் துறைகுறை நயப்பென, மன்னிய பொருளில் வகுத்துரைப்பேம்.

(இ-ள்.) குறிப்பறிதல்-மென்மொழிபாற்கூறல்- வீரவிக்கூறல்- அறிபாவ்போறல்- வஞ்சித்துரைத்தல்-புலந்துகூறல்- வன்மொழி பாற்கூறல்- மனத்தொடுநேர்தல் என விவ்வெட்டுங் குறைநயப் பித்தலாம். எ-று. அவற்றுள்,—

குறிப்பறிதல்.

குறிப்பறிதலென்பது- தலைமகனது குறிப்பறிந்து அணியாதி ஏற மேழி கொடுறெனக் கூறுவேனாயின் இவள் இதனை மறுக்கவுங் கூடு மென்னாடுகொண்டு, நாம் பனைதிரிக்கட் சேரினது வழி வயலுடை யராய்ச் சிலர் விளையாடுகின்ற ஒருவர் பலகாலுமவரோடு நின்றுவிட்டு ஒன்றுமொன்றுசொல்லுவதுஞ்செய்கின்றிலர் அவர்கடமது யாழ் கொண்டு வருகவெனாத் தான அவியாத விளக்கு ஏலாக தலைமகளாரி உரைத்து, அவனினவறியாநிற்றல். எ-கா, "நாங் ரணை [illegible] கிழக்கீவர் மேடதுக, தான்குவறு யுறுத மேழிக் கிலம்ல, எ-வெயா கலிம். அதற்குச்செய்யுள்.

நீகேள்மலாகருஞ்சிறுவ சிறைவண்டுகன்றேன்பறுகித் *
தேம்தேயெனுந்நிலைபோ லவிக்செயனகசினவேலொருவர் *
மாமதுபுனத்திடைவாளாவருவிப்பநிரியாதுஞ்செல்லுமா *
யாம்தெசெயதுக்கனுமதுவார்குழலிந்நிலைமழையே. (அ௨)

நறைவளரிகோதையைக் குறைநயப்பித்த ற்
குள்ளறிகுற்ற வொள்ளரிழைபுனாத்த ன.

(இ-ள்) மாதே, தாதுபொருந்திய மலரையுடைய [illegible] வண்டுகள் கண்ணழகிய சிறகையுடைய வண்டினங்கள் தன்னேடுபட்டுவிட்டு தேம்தேயெனப்பாடிந் திலைமையையுடையாரனுடைய புதுவ [illegible] முருகனேயென்றே சொல்லும்வண்ணம் சினவேலையுடையாரொ ருவர் நம்புனத்தின்கண வாளா பலகாலும் [illegible], [illegible] னறு ஒன்றுமுரையாடார், மதுவார்ந்த [illegible] மழையே, அவரிடத்து நாஞ்செய்த [illegible] யாதெனறறிகிலமாயேன் எ-று.

குஞ்சி-தில்லைவாழ்வார் குஞ்சி, மலரினது குஞ்சியெனவிரிதலு, அலலியென்றுரைப்பினுமமையும். சேயோடொகுதல்- பனிபு வடவு முதலாயினவும், சினவேலோதி வரையிடத்து வருதலுமாம். வேடைமுதலாகிய பயன்கருதாது வருவரொனபாள, எனவாவது வலின்றாம். முகம்புகுதி [illegible]தலின், பினனும் எந்நினைமழையே யெனறாள். சேயன்புழி எண்ணேகாரந்தொகுதிறாது, என

ணை, மேலே "புரிசேர்சடையோன்புதல்வன்கொல் பூங்கணைவேள் கொல்,, எனவருதலான். பாதேயெக்னுமேகாரம் விரி. பாதே ஏ ந்திழையே என்டழி ஏகாரம் விளியுருபு. அறிகற்றலென்பது அறியவேண்டியவென்னும்பொருட்கண்வந்த ஒருமொழிமுடிபு.

மென்மொழியாற்கூறல்.

மென்மொழியாற்கூறலென்பது-நினைவறிந்து முகங்கண்டு, அது வழிபாகநின்று, ஒருபெரியோன் வாடிய மேனியனும் வாடாத தழையனுமாய் நமபுனத்தை விட்டுப் பேர்வதுஞ் செய்கின்றிலன் தன்னுள்ள இன்னதென்று வெளிப்படச்சொல்லுவதுஞ்செய்கின்றிலன் இஃதென்னமாயங்கொல்லோ அறிகின்றில்லேனாத தோழிதான அதற்கு நொந்து கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

வரிசேர்தடங்கண்ணிமம்மர்கைம்மிகவென்னமாயங்கொலோ *
வெரிசேர்தளிரன்னமேனியனீர்ந்தழையன்புலியூர்ப் *
புரிசேர்சடையோன்புதலவன் கொல் பூங்கணைவேள்கொலென்னத்
தெரியேமுரையான்பிரியானொருவனித்தேம்புனமே. (அசு)

ஒளிருறுவேலவன் றளர்வுறுகின்ற மை
இன்மொழியவட்கு மென்மொழிமொழிந்தது.

(இ-ள்.) வரிசேர்ந்த பெரியகண்ணையுடையாய், ஒருவன் மயக்கங்கைம்மிக்கு, எரியைச்சேர்ந்த தளிரையொக்கும் மேனியையுடையனுமாய், வாடாத தழையையுடையனுமாய், இத்தேம்புனத்தைப் பிரிகின்றிலன், ஒன்றுரைப்பதுஞ் செய்கின்றிலன், அவன்றன்னைப் புலியூர்க்கணுளனாகிய புரிதலைச்சேர்ந்த சடையையுடையோனுடைய புதல்வனோ பூவாகிய அம்பையுடைய காமவேளோ வென்று யாந்துணிகின்றிலேம், ஈதென்னமாயமோ! எ-று.

அவ்வாறு இறப்பப்பெரியோன் இவ்வாறு எளிவந்தொழுகுதல் என்ன பொருத்தமுடைத்தென்னுங் கருத்தால், என்ன மாயங்கொலோ வென்றாள். புலியூர்ப்புரிசேர்சடையோன்புதல்வன்கொலென்றதனால் நம்மை யழிக்கவந்தாரோவென்றும், பூங்கணைவேள் கொலென்றதனால் நம்மைக்காக்கவந்தாரோவென்றும் கூறியவாறாயிற்று. புரிசேர்சடையோன் புதல்வனென்றதனை மடற்குறிப்பெனன்றுணர்க. கொல்-ஐயம். மேனியன் தழையனென்பன வினையெச்சங்கள். மென்மொழிமொழிந்தது - மென்மொழியான்மொழிந்தது. (அகூ)

விரவிக்கூறல்.

விரவிக்கூறலென்பது-வன்மொழிபாற்கூறின் மனமெலியுமெ ன்றஞ்சி, ஓரலவன் தன்பெடைக்கு நாவற்கனியை நல்கக்கண்டு ஒ ருபெருந்தகை பேய்கண்டாற்போல நின்றான் அந்நிலைமையை நீ கண்டாயாயின் உயிர்வாழமாட்டாய் யான் வன்கண்மையேனாகலா ன் ஆற்றியுளேனாப் போந்தேனென மென்மொழியோடு சிறி து வன்மொழிபடக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

நீகண்டனையெனி ன்வாழலிதேரின் னமயப்பலத்தான் *
சேய்கண்டனையன்சென்றாங்கோரலவன்றன்சீர்ப்பெடையின் *
வாய்வண்டனையதொர்நாவற்கனிநனிநல்கக்கண்டு *
பேய்கண்டனையதொன்றாகிநின்றானப்பெருந்தகையே. (அச)

வன்மொழியின்மன மெலிவதஞ் சி
மென்மொழிவிரவி மிகுத்துரைத்த து.

(இ-ள்) நேரிழாய், அப்பலத்தான் புதல்வனைக்கண்டாற்போன் றிருக்கும் ஓரவன் அவ்விடத்து ஓரலவன் தனதழகையுடைய பெ டையினவாயின்கண் வண்டனையதொருநாவற்கனியைச் சென்று மிகவுங்கொடுப்ப அதனைக்கண்டு அப்பெருந்தகை பேயாற்கொ ணப்பட்டாற்போல்வதோர்வேறுபாட்டையுடையனாகி நின்றான், அ ந்நிலையை நீகண்டாயாயின் உயிர்வாழமாட்டாய். யான் வன்கண் மையேனாதலின், அதனைக்கண்டும் ஆற்றியுளேனாயினேன்.எ-று.

பேய்கண்டனையதென்பதாற்றாப் பேயைக்கண்டாற்போல்வி தோர்வேறுபாடென்றுமாப்பினுமமையும் பேய்கண்டனையதொ ன்றையுடையனாயென்னாது ஒற்றுமைநயம்பற்றி ஒன்றாகிநின் றான். நாவற்கனியை நனிநல்கக்கண்டு தன்னுணர்வு மிழப்பேயா யினாற் இன்றுவந்நிலனென்னாது பேய்கண்டனையதொன்றாகிநின் றானென்று கூறினமையான் மென்மொழியும், பேய்கண்டனைய னென்றதனாலும் வன்மொழியும் விரவியதாயிற்று மிகுத்தல்- ஆற் றுமைமிகுத்தல் இவையிரண்டற்றும் மெய்ப்பாடு-இளிவரலைச்சார் ந்தபெருமிதம். பயன்-தலைமகளை மெலிதாகச்செலுத்திக் குறைந யப்பித்தல். (அச)

அறியாள்போறல்.

அறியாள்போறலென்பது-பேய்கண்டாற்போல நின்றானென த் தலைமகனிலைமைகேட்ட தலைமகள் பெருநாணினளாதலின் இத

[illegible]யாளைப்போல, இஃதொருசடல்வடிவிருந்தவாறு காணு[illegible]
[illegible]னாரென்று கூறுநிற்றல். அதற்கு [illegible]ப்பள்.

கங்கைக்கருமுத்தியாம்பெறவான்கழிகாண்கெழுமிப் *
பொங்கு[illegible]ப்புனற்கங்கைகரந்திடப்பொலிகலிப்டாலுலவு *
[illegible]ங்கமலிலைப்[illegible]ன்றிழைதொலைப்பன்மா *
[illegible]மலிகலிநீர்திலைவான [illegible]வருமே. (அ)

அதியாள் போல் [illegible]
குறியாள் கூறிய [illegible]

(இ-ள்.) [illegible], [illegible]மைக்காகவிற் பலவாய்ப்பெரியவா[illegible]
[illegible]கலைகளை மிகப்பெற்ற பலமுயலகங்கிய கடலிலிலைவானவ[illegible]
[illegible]ப்பாம் எ-று

[illegible]ழத்துக்களை யாமபெறப் பெரிய கழிகளைத் தான் [illegible]
[illegible]ருந்திப் பொங்கிப் பனிப்பெடைய கங்கையைக் தாங்கப்பெ[illegible]
[illegible]க ஆரவாரத்தையுடைய பாருகிய மரக்கலங்களிலங்கு [illegible]
[illegible]ளி [illegible]லையுடை [illegible]களிலிலை எனக் கடலிற்மேற்பவும், திருவடி[illegible]
[illegible]ண்டாகிய [illegible]தரும் முத்தியை யாம்பெறும்வண்ணம் [illegible]
[illegible]லைப்பொருளையும் அகப்படுத்திநிற்றும் ஆகாயத்தையுங்கடந்[illegible]
[illegible]ன்ற தான் [illegible]ழவுகொண்டுவந்து பொருந்திப் பொங்கும் [illegible]
[illegible]லையுடைய கங்கையைச் [illegible]மிக்க ஆரவாரத்தையுடைய பா[illegible]
[illegible]கிய [illegible] [illegible]ரதிகிற உயர்வுமிக்க தலையோட்டையேந்துத[illegible]
[illegible]லின் என [illegible]னவமைக்கற்பவும், உரைக்க.

[illegible]ழி [illegible]லாக [illegible]னினு மலையும். குறைநயப்பாற் றலை[illegible]
மகளில்லையைக்கேட்ட தலைமகள் பெருநாணினளாகலின், மறுமொ[illegible]
[illegible]ழி கொடாது பிறிதொன்று கூறியவாறு. ஒருசொற்றொடர் இரு[illegible]
பொருட்குச சிலேடையாயினவாறுபோலத் தோழிகளும் ஓர்ந்[illegible]
[illegible]ணரப்பயம். ஓர்ந்துணர்தலாவது-இவ்வாழுக்கங்களொழுக்[illegible]
[illegible]ரகையாலும், தலைமகள் பெருநாணினளாகையாலும், முன் [illegible]
[illegible]ழியாற் கூறப்பட்ட கூற்றுகடகு வெளிப்படையாக மறுமொழி[illegible]
[illegible]கொடாது, ஓர்ந்துகூட்டினால் மறுமொழியாம்படி கடலில் [illegible]
[illegible]வைத்துக்கூறினாள். எனினை, முன்னர் நீ புரிசேர்சடையோன்[illegible]
[illegible]ல்லவென [illegible]ரும் [illegible]ணவேளெ [illegible]ரும் உயர்தலைக்கூறியவெலாம்
[illegible]ணைக்குரிய, அநிவனம் பெரியவன் தன்மடமுடையான பணாச்
[illegible]யான பேரி[illegible]பதத்தை நாம்பெறுகை காரணமாக இங்ஙன மெ
[illegible]விவந்து உன்னவந்துசேர்ந்தாள், அஃதெவிலோலவெனின், பெ
[illegible]ற்கரிய சங்கு தருகிற முத்தை நாம் பெறுவான் வளிதாகக்கட

ஏ பெரியகழிநயவத்து பொருந்தினாற்போல, இவி உனக்கு வே
ண்டியது செய்யாயாகவென மறுவியாழியாயிற்று மெய்ப்பாடு-
மருட்கை. தோழி சொன்னகுறையறியாள்போலநீ பயந்-அறி
யாள்போறல். (அடு)

வருந்தி நாணாத்தல்.

வஞ்சித்துறைக்கலிவெண்பா- நாணிறுத்த நறைநேரமாட்டாது
வருந்தக் நிறை தலைமகள் நெஞ்சு மெய்ப்பாடு மயலாகவிலை எனவினை
கொண்டாணமீட்சொடு பிரிவுபயன் நாடி பரமாகிநாதற்கு முன் இ
தகுதியாகி நாணுச்சொடு மயலாகி மெய்ப்பாடு இறந்
துபடிவலைவை உடல்கொண்டு, உயிர்த்தாதாகவெட்டி, பாங்க
ற்கூட்டம்பெறுதலைக் தோழி, கூடலதிற்குத் துவளாதின்றானென
ன்பதுகோள, பின்னர் வெளிப்படக் கூறமாட்டாது, மாயவ
ன்மேலவைதனை வருவித்துக்கூறுதலிற் பிறிதுமொழி அணிச்செய்யுள்.

புரங்கடந்தானடிகளைப் பூவினிடைப்போ *
நிரந்தவிரிந்தாமரைப்பதத்தான் நீரடிக்கே *
கரங்கடந்தாமரைக்கண்ணுங்கடைக்கண்டிடென்று *
வரங்கிடந்தாமரைமார்பன் மயலுழன்றிவிம்மாரவனே. (அசு)

நெஞ்சுநெகிழ்ந்தாகை வளைநெகிழ்ந்தாநிலையி வை
செஞ்சடைபோலபுலவர் செழுஞாத்த து.

(இ-ள்) புரங்கடந்தவனது அடிகளைக் காணவேண்டி நெ
ருங்கிய பொய்கையின் நீரினுள் நுழைந்தான் புக்குக்கரு
கு பின்னர் எதிர்பாராது எதிரே வருவானென்றியெண்ணி நீரப்பு
தலினையுடைய நீரினுள் மூழ்கி நீரடியிலுள்ள தாமரைக்
கொடியை இரண்டு கரங்களையுந் தாவி வீசி அவன் திருவடி
லயக்காட்டு மற்றை கரங்களையுங் காடியுடையவிடை மலர்
பலமுற்றதுபோலக்கண் முடினார் அம்மாறு யாமினைக் செருக்
காற் காணாதிற்ற மாயவன் வருங்கிடந்தாற்போலும் எ-று.

வினவென்பதற்கு முன்னுணர்ச்சியேயாக்க. மாயவன் முத
லாயினார்க்கு அவ்வாறாயினும் எம்மதேர்க்கு இவ்வாறெளி
வந்தவன் வன்னுங்கருதாது, தன்னாடிக் சென்னிரல் யகரங்கடந்
தானென்றார் ஆகி தென்பது ஒருவகால் [illegible] வரங்கிடக்கி
ன்றானென்னு, முன்கண்டது ஒன்றுபோலுமென்பது கருத்து பு
ரங்கடந்தானடிகளைக் காணாமாறு வழிபட்டு காணலையாவது-
அல்லனாதிற்றுத தாமரையுப், பன்னிக்கு காமோதலால், இவரிடங்

னந்தத்தநிலைப்பரிசே தேடுதல். இவ்வாறுதேடாது தமதகங்காரத்தினால் மாறுபட்டுப்பன்றி தாமமையும் அன்னங் காடுமாகப் படர்ந்து தேடுதலாறகண்டிலர். இது நெறியல்லாநெறியாயினவாறு. இனி இது தொழிலாகுத தலைவி மறுமொழியாகக் கூறியவாறென்னை? ஒன்றுகாட்டவென்றது- முன்னர்ப் டங்கக்கூட்டம் பெற்றான் அதன்பின் நின்னிலையுகூட்டம் பெறுகை காரணமாகநின்னிடத்து வந்திரந்து சுறையுறுநின்றாற், அஃதென்போலவெனின், மற்றங்கனாட்டிடென்று மால வரக்கிடந்தாற்போல. எ-று.

ஒருசித்தல்- மறுமொழியை வெளிப்படையாகக் கொடாது பிறிதொன்றாக்கூறுதல். இவையிவை-முன்னர்ப்பாட்டும் இப்பாட்டும். இதனை தொழிகூற்றாகவுமாப்பாருமுளர் இவையிவையென்று மறிகலாறும் இனி "உள்ளப்படுவன வுள்ளி" எனத் தலைமகளோடு புலந்து கூறுகின்றமையானும், இவ்விரண்டுதிருப்பாட்டும் தலைமகள்கூற்றாதலே பொருந்தமுடைத்தென்பதறிக. (அஎ)

புலந்துகூறல்.

புலந்துகூறலென்பது-வெளிப்படக்கூறாது வஞ்சித்துக்கூறுதலாம் எனப்பிறாமுன்னே வெளிப்படக்கூறுவாயின் நின்காதற்றோழி யர்க்கு வெளிப்படச்சொல்லி அவரோடு சூழ்ந்து நினக்குறுதி யாய்யான்சொன்ன அறியாமையை நின்னுள்ளகலுக் கொள்ளாது மறுப்பாயாகயான் வேண்டிய திறுவேனிய தத்தாறி தலைமகளைப்புலந்து கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

உள்ளப்படுவனவுள்ளியுரைக்கவர்க்குரைத்து *
மெள்ளப்படாது மிகுணியேவி லுவேன்றவ்யான் *
கள்ளப்படுதுக்கருளாவரன்றிக்கேணலர்பேர *
கொள்ளப்படாது மறுப்பாகிவிலென்கூற்றுக்களே. (அஎ)

திருந்தியசொல்லிற் செவ்விபெறு து
வருந்தியசொல்லிற் வளுத்துரைத்த து.

(இ-ள்.) இதன்கண் ஆராயப்படுவனவற்றை ஆராய்ந்து இதனை வெளிப்படவுரைத்தற்குத் தகுக நின்காதற்றோழியர்க்குரைத்து அவரோடுஞ்சூழ்ந்து நீபடிறென்று கருதிய இதனை மெள்ளத்துணிவாய், அறிதற் துணிபாதொழியாய், நெஞ்சிற்கள்ளத்தையுடையவஞ்சகர்க்கு அருள் செய்யாத அரனது நில்லையை ஒருகாற் காணாதாரைப்போல அறிவிலாதேன் சொல்லிய சொற்களை உள்ளதுக்கொள்ளத்தகாது, அவற்றை மறுப்பாயாகயான் வேண்டுவதிறுவேன். எ-று.

திருவிக்கிரமாதித்தன் கூற்றிற்கு வமை. கொள்ளப்படாதென்பது வினைமுதன்மேலுஞ் செயப்படுபொருள் மேலுமன்றி வினைமேனின்ற முற்றுச்சொல், "அகதரின்றி வளர்ந்தமையாற் பயிர்," என்பதுபோல். மறப்பதென்பது வியங்கோள் [illegible] யசொல்லின்-வருத்தத்தை வெளிப்படுக்குஞ் சொல்லாகிய [illegible] லியென்பது ஊஉப்பாடம். வருத்துவாரைத்தவ - வெளிப்படுத்தாதல்லாதவன்றி வருத்தக்கேட்கு மளவுஞ் சொல்லுஞ்சொல். [illegible] வது நீ சொல்லுகதருங்காதற்றோழிபாக்கு வெளிப்படச் சொல்லென்று புலந்துகூறியது. (அஎ)

வன்மொழியாற்கூறல்.

வன்மொழியாற்கூறலென்பது - புலந்துகூறுகின்றதோழி அக்கொடியோன் அருளுறுமையான் மெய்யிற்பொடியுங் கையிற் கிழியுமாய் மடலேறத்துணிபாதின்றான் அக்கிழிதான் நின்னுடைய வடிவென்று உலையுமுளதாயிருந்தது இனி நீயும் நினைக்குற்றது செய்வாயாக யானறியேனென வன்மொழியாற் கூறுதிற்றல். அதற்குச்செய்யுள்.

மேவியற்கோலுடுக்குந்திலையான்பொடிமெய்யிற்கையி *
லோவியற்றான்றுயிற்கிழிநின்னெழிலென்னுலையுளநாற் *
றூவியற்கோலகையன்றுயென்னபாவஞ்சொலவடமடலைச்செய்யான் *
பாவியற்றோபலைமாமடலேறக்கொலபாவிதனதே. (அஅ)

கடலுலகதியக் கமழலந்துறைவ ன்
மடலேறுமென வன்மொழி மாழிக்க து.

(இ-ள்) மெய்க்கட்பூசியது விருப்பமிகுதலைக்காலைச் சாத்துந்திலையாறுடையதீறு, கையின்கணுண்டாகியது கிழிந்ரம் வளங்குங்கிழி, அக்கிழிதான் நின் வடிவென்று உலையுமுளதாயிருந்தது, தூவியையுடைய வழகியதோலகையையுமாய்ப், பிறருகாரணமாகிய தீவினையாதெனிற்றலியேன்! ஒன்றுமுரையாடான், ஒருந்தவாற்றான் அகக்கொடியோன், அற்றோ! பயனியானது பெரியமடலேறுதற்குப்பொலுநிற்றது. எ-று.

கிழியென்றது கிழிக்கணெழுதியவடிவை. தன்குறையுறவுகண்டு உயிர்தாங்கப்பெறாத அத்தன்மேலும் மடலேறுதலையுந் துணிபாதின்றானென்னுங்கருத்தால், பாவியென்றார். எனவே, அவனுற்றுமைக்குத் தானுற்றுளாகிய பறமை கூறினாளாம். கமழலந்துறைவனென்பதற்கு, கூம்பலந் கைத்தலமென்பதற் குரைத்தது உ

ரைக்க. இவை மூன்றற்கும் மெய்ப்பாடு-இளிவரலைச்சார்ந்த பெருமிதம். பயன்-வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தல். (அஅ)

மனத்தொடுநேர்தல்.

மனத்தொடுநேர்தலென்பது- ஆற்றுமையான் மடலேறத் துணிபாதிலன்றெனைக் தோழியால் வரவிலாரிகூறக் கேட்டதலைமகள் அதற்குத் தானாற்றுளாய், தலைமகனைக் காண வேணவிதுதலின் மனத்தொடுமாறு நிறைவாயிற்றால் அதற்கு வெண்பாவுள்.

பொன்னிறமைப்பாலாகிப் பூவிலாமை சொன்னபடிநோ *
பெண்ணலிவியம்பாலி லுறுவாகுலம்பிறந்தியலார் *
சொன்னவெல் லாமிசைவுசெய்து [illegible] *
மென்னாத்துயரால்வரவேறுவதுகொலுநீர்மைமலியவர்கட்கே (அ)

அடல்வேலவனாற்றுமனக்
கடலவிழ்தலின்னவள் காணலுற்றது.

(இ-ள்.) பொன்போலுந் நிறத்தந்த சலடையையுடையவனது புலியூரைப் புகழாதாரைப்போல வருந்த எனக்குப் புரிந்தநோய் எனது மலியப்பயனில்லை, ஆயினும் பெரிறத்து யானாற்றுவாகுமாடேன், எனக்குத் துணையாகிய மனம், அயலார் சொன்னவென்று இவள்வந்து சொல்லுகின்ற இகழுரைகளை எடுக்கண்வாராமல் அவராற் றுமை கூறுகக்கேட்டலாலுடைய எனதாற்றுயரை உள்ளவாறு சொல்லவல்லையாயின், நீர்மையையுடைய இனியவர்க்கு நீ சொல்லுவாயாக. எ-று

புரிதல்-பிறிதாதல். அயலார் சொன்னவென்றது ஒரு பெருந்தோழி றுங்கிழி நிலவெனமிலவெ றுரைடைதாம் என்றதனைப்பற்றி. அயலார்சொன்னவெல்லாம் யானநீபாதிருப்ப அவரா, றுமையை அயலார்வந்து சொன்னவென்றாம் வெ றுற்றமெ றுறுவிப்பு றுமையும். இப்பொருடரு அயலாரெ றுறு தோழியை நோக்கி. ஆற்றுதுயர் - ஆற்றுதற்கிடமாந்துயர். இவ்வாறு அவராற்றுமைக்கு ஆற்றுளாய் நிற்றலின், தோழி குறைநேர்ந்தமை யுணருமென்பது பெற்றாம், ஆகவே இது தோழிகுறை வெளிப்பட மறுமொழி கூறியவாறுபிற்று. சொல்லுநீர்மையினிவளுக்கென்றவாறுமுல தன்னுயரமும் வெளிப்படக் நி மடலால் வருந்துற்றமுற்றன்னிடத்துவாராமல் விலகக்கெண்டுளாயிறு மெய்ப்பாடு - அச்சம். ஆற்றுளெனக்கேட்டலிற் பயன்-குறைநேர்தல். (அ)

குறைநயப்பித்தல் முற்றிறது.

சேட்படை.

சேட்படையென்பது-தலைமகளைக் [illegible] ஏவிப்பிரித்துத் தலைவி னாயை கூட்டங் கூட்டலுறுந்தோழி தலைமகளதுபெருமையும் தன்னதுமுயற்சியதருமையும் தோன்றுதல் காரணமாகவும், பிறந்து ணையருமையுடையாள் இன்னிறத்தினையுந்தற் குரியையுடையவென் னு இதுவே புணர்ச்சியாக நீட்டியாது விரைய வரைந்துகோடல் காரணமாகவும், தலைமகளுக்கிலையாய மறுத்துக்கூறுதலும்.

அதுவருமாறு-ஞ்சிரம். தழைகொண்டு சேறறகரவெ [illegible] மறுத்தல், நிலத்தின்மை கூறல் நினைவறிவு கூறல், பலவுந்தொழி தலைவரு பணிமொழி [illegible], பெயர்த்துரை [illegible] [illegible] கூறல், செவ்வியிலெனல் சேட்படை [illegible], வய்யினிய மொழிநீ யவட்கூறா யென்றல், நலமுறை [illegible] [illegible] தலைவி, வலிதொலைவி மறுத்தல் பழிதூற்றுதற் [illegible], [illegible] கூறல் கிழவனென் றுரைத்தல், மறைதுமை கூறி [illegible] செய், வளைகவர்ந் [illegible], [illegible] [illegible] ஏவலங் கூறல், கணவரு [illegible] [illegible], [illegible] [illegible] [illegible]

ஞாந் ஞறையுறவு தோன்றநின்று, நும்மாலருளத்தக்காரை அலியா
சே இத்தழை வாங்கிக்கொண்டு என்குறை முடித்தருளுவீராமெ
ன்று, மறத்தற்கிடமாற, சந்தனத்தழைகொண்டு தலைமகன் செல்
லாநிற்றல். அதற்குச் செய்யுள்.

தேமென்கிளவிதன்பங்கத்திறையுறைதில்லையன்னீர் *
பூமென்றழையுமம்போதுங்கொள்ளீர்தமியேன்புலம்ப *
வாமென்றருங்கொடுப்பாடுகள்செய்துநுங்கண்மலராங் *
காமன்கணைகொண்டலைகொள்ளவோமுற்றக்கற்றதுவே. (கூய)

கொய்ம்மலர்ச்சுழலி குறைநயந்தியி ன்
கையுறையோடு காளைசென்ற து.

(இ-ள்.) தேன்போலும் மெல்லிய மொழியையுடையாடனது
கூந்தலறவுடைய பெறவலுறையுந் தில்லையம்பொட்பீர், யான்
கொணர்ந்த பூவையுடைய மெல்லியதழையையும் அழகிய பூக்க
ளையுங் கொள்கின்றிலீர், உணர்விழந்த யான்றனிமைப்படச் செய்
யத்தகாத பொறுத்தற்கரிய கொடுமைகளைச் செய்யத்தகுமென்
று துணிந்து செய்து நுங்கண்மலராகின்ற காமன் கணைகொண்டு
அருளத்தகுகாமா லலைதலையோ முடியக்கற்கப்பட்டது, நும்மா
ல் அருளுமாறு கற்கப்பட்டதில்லையோ! எ-று.

பங்கத்துறையிறையென்பதூஉம் பாடம். தமியேன்புலம்ப
வென்பதற்குத் துணையிலாதேன் வருந்தவெனினுமமையும். மே
ற்சேட்படை கூறுகின்றமையின் அதற்கியைவுபட ஈண்டுங் கு
றையுறவுகூறினார். செய்ப்பாடு-அழுகை. பயன்-ஆற்றுமையுணர்
த்துதல். அவ்வகை தோழிக்குக் குறைநேர்ந்த நொந்து தலைம
கன் கையுறையோடுஞ்சென்று இவ்வகைசொன்னானென்பது. ()

சந்தனத்தழைதகாதென்றுமறுத்தல்.

சந்தனத்தழைதகாதென்றுமறுத்தலென்பது - தலைமகன் சந்த
னத்தழைகொண்டு செல்ல, அது வழியாக நின்று, சந்தனத்தழை
இவர்க்கு வந்தவாறென்னோவென்று ஆராயப்படுதலால் இந்த
ழை எமக்காகாதெனத் தோழி மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்
செய்யுள்.

ஆரத்தழையாரப்பூண்டம்பலத்தனலாடியன்பர்த் *
காரத்தழையன்பருளிநின்றோன்சென்றமாமலையுத் *
தாரத்தழையணைந்தாலிவையவளல்குந்தண்டா *
லாரத்தழைகொண்டவர்தாரெனவருமையுறவே. (கூக)

பிறைநுதற்பேதையைக் குறைநயப்பித்தபி ன்
வாட்படையண்ணலைச் சேட்படுத்த து.

(இ-ள்.) ஆரமாகிய தழைந்த அரவைப்பூண்டு அம்பலத்தின்கண் அனலோடாடி அன்பராயினார்க்குத் தானும் மிகக அன்பைப் பெருகச்செய்தறிந்தவன் சேர்ந்த பெரிய பொதியின் மலையிடத்துளவாகிய சந்தனத்தழைகளை அண்ணல் தந்தால், இத்தழைகளைப் பிறர் அவனுக்குக்கட்காணின் ஈண்டில்லாத அத்தழைகொண்டிவந்தார் யாவரென ஐயமுண்டாய், அதனால் இவை கொள்ளேம். எ-று.

ஆரத்தழையரா- பூண்டகாலத்து ஆரத்தழைத்த அரவெனினுமமையும் அன்பர்க்காரத்தழையன்பருளிநின்றோ லெனின்பதற்கு அன்பர்க்கு அவர் நுகரும்வண்ணம் மிகக அன்பைக்கொடுக்கவோ லெனினுமமையும். அன்பான் வருங்காரிய மேயன்றி அன்பதானும் ஓரின்பமாகலின் நுகர்ச்சியாயிற்று அண்ணலென்பது ஈண்டை மூன்னிலைக்கண்வந்தது. அத்தழையென்றது - அம்மலையதழையை என்றவாறு. (கூக)

நிலத்தின்மைகூறிமறுத்தல்

நிலத்தின்மைகூறி மறுத்தலென்பது-சந்தனத்தழை தகாதென்றகல்லது மறுத்துக் கூறியவாறன்றென மறுமொருதழை கொண்டுசெல்ல, அதுகண்டு, இந்நுன்றிலில்லாத தழையை எமக்கு நீர்தந்தால் எங்குடிக்கு இப்பெருமுதே பழிபாம் ஆதலான் அத்தழையெமக்காகாதென்று மறுத்துக கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்

முன்றகர்த்தெல்லாவிமையோரையும்பின்னைத்தக்கன்முத்தீச் *
சென்றகதிலாவகைசிதைத்தோனறிருத்தம்பலவன் *
குன்றகத்தில்லாத்தழையண்ணறந்தாற்கொடிச்சியருக் *
கின்றகத்தில்லாப்பழிவந்துமூடுமென்றெள்ளுமே. (கூஉ)

கொங்கலர்காரோய் கொணர்ந்தகொய்த எழ
எங்குலத்தாருக் கேலாதென்ற து.

(இ-ள்.) முன் வேள்விக்குச் சென்ற எல்லாத்தேவர்களையும் புடைத்துப் பின்சென்று தக்கனுடைய மூன்றுதீயையுங் குண்டத்தின்கண் இல்லையாம்வண்ணம் அழித்தவன், திருத்தியவம்பலத்தையுடையான், அவனுடைய இம்மலையிடத்தில்லாத தழையை அண்ணல் தந்தால், கொடிச்சியருக்கு இல்லின்கண் இலாதபழி இன்றுவந்துமூடுமென்றுகூறினும், அதனால் இத்தழை கொணரற்பாலீரல்லீர். எ-று.

குன்றகத்தில்லாத்தழையென்றது- குறிஞ்சிநிலத்தார்க்கு உரிய வில்லாத தழையென்றவாறு. அண்ணலென்பது முன்னிலைக்கண்ணும், கொடிச்சியரென்பது தன்மைக்கண்ணும் வந்தன. இல்லாவென்பது பாடமாயின், இல்லையரம்வண்ணம் முன்றகர்த்தென்று கூட்டுக. (கூஉ)

நினைவறிவுகூறிமறுத்தல்.

நினைவறிவுகூறி மறுத்தலென்பது - இத்தழை தந்நிலத்துக்குரித்தன்றென்றதலல்லது மறுதலுக்கூறியவாறன்றென உட்கொண்டும், அந்நிலத்திற்குரிய தழைகொண்டுசெல்ல, அதுகண்டு தாயுடம்பட்டாளாய், யான் சென்று அவணினைவறிந்தால் நின்னெதிர் வந்துகொள்வேன் அதுவல்லது கொள்ள அஞ்சுவேனென மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

யாழார்மொழி மங்கைபங்கத்துறைவெறிதிணாநீ *
சேழாடெழுபொழிலாயிருந்தோனின்றதில்லையன்ன *
சூழார்குழலிலழிற்றொன்டைச்செவ்வாய்நவ்விசொலலறிந்தாற் *
சூழாதெதிர்வந்துகொண்டுசிலம்பதருந்தழையே. (கூஙு)

மைதனழக்கண்ணி மனமறிந்தல்ல
கொய்தழைதந்தாற் கொள்ளேமென்றது.

(இ-ள்.) யாழ்போசைபோலும் மொழியையுடைய மங்கையது கூற்றையுடைய இறைவன், எறியாநின்ற திரையையுடைய கடலேழுமாய் எழுபொழிலுமாயிருந்தவன், அவனின்ற தில்லையை ஒக்குஞ் சுருண்ட நிறங்கொண்ட குழலினையுந் தொண்டைக்கனிபோலும் எழிலியுடைய செவ்வாயினையுமுடைய நவ்விபோல்வாளது மாற்றமறிந்தால், பின் சிலம்பனே, நீ தருந்தழையைத் தாழாது நின்னெதிர்வந்துகொள்வேம், அவள்சொல்லுவது அறியாது கொள்ளவஞ்சுதும். எ-று.

சூழாரெல்புழிச் சூழ்தல்- சூழ்ந்துமுடித்தலெனினுமமையும். இல்லையன்ன நவ்வியெனவியையும். (கூஙு)

படைத்துமொழியான்மறுத்தல்.

படைத்துமொழியான்மறுத்தலென்பது - நினைவறிந்தல்லது ஒலேமென்றது மறுத்துக்கூறியவாறன்று நினைவறிந்தால் ஏறபேமென்றவாறுமென உட்கொண்டுநிற்ப, சிறிதுபுடைபெயர்ந்து அவணினை வறிந்தாளாகச்சென்று, இத்தழை யானேயன்றி அவளும் விரும்புமாயினும் இது குற்றுலத்துத் தழையாதலான் இதை

கழ இவர்க்கு வந்தவாறு என்னோவென்று ஆராயப்படுமாதலான் இத்தழையெமக்காகாதென்று மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்.

எழில்வாயிளவஞ்சியும்விரும்பும்மற்றிறைகுறையண் *
டழல்வாயவிரொளியம்பலத்தாடுமஞ்சோதியர்தீங் *
குழலவாய்மொழிமங்கைபங்கன்குந்நுலத்துக்கோலப்பிண்டிப் *
பொழிலவாய்த்தடவரைவாயலலதில்லையிட்பூந்தழையே. (கச)

அருந்தழைமேன்மேற் பெருந்தகைகொணர ப்
படைத்துமொழிவிளவியிற் றமிழ்கவண்மொழிந்தது.

(இ-ள்.) நின்பாற்றழைகோடற்கு யானேயன்றி எழில்வாய்த்த இளையவஞ்சியையொப்பாளும் விரும்பும், ஆறுஞ் சிறிதுகுறையுண்டு, அழலிடத்துள்ளதொப்பவிளங்குமொளிபாயுள்ளான், அம்பலத்தின்கணாடும் அழகியசீதாங், அழகியவினிய குழலோசை போலும் மொழி நலமுடைய மங்கையது கூற்றையுடையான், அவனது குற்றாலத்தின்கணுளதாகிய அழகையுடைய அசோகப் பொழிலவாய்த்த பெரியதாழ்வரையிடத்தல்லது வேறோரிடத்து இட்பூந்தழையில்லை, அதனால் இத்தழை இவர்க்கு வந்தவாறென்னென்று ஆராயப்படும், ஆதலான் இவை கொள்ளேம் எ-று.

இத்தழையை யிளவஞ்சியும் விரும்புமெனினுமமையும். அவிரொளியையுடைய அஞ்சோதியென்றியைப்பினுமமையும். பிறவிடத்துமுள்ளகனை கவ்விடத்தல்லது இல்லையென்றமையின், படைத்துமொழியாயிற்று. (கரு)

நாணுமைத்துமறுத்தல்.

நாணுமைத்துமறுத்தலென்பது - பலபடியந்தழைகொண்டு செல்ல மறுத்துக்கூறியவழி, இனித்தழையொழிந்து கண்ணியைக் கையறையாகக் கொண்டுசென்றால் அவள் மறுக்கும் வகையில்லையெனக் கழுநீர்மலரைக் கண்ணியாகப் பறைந்துகொண்டுசென்ல, அது கண்டு, செவிலியர் சூட்டிய கண்ணியின்மேல் யாரெனினுஞ் சூட்டினும் நாணுநிற்பள் நீர்கொணர்ந்த இந்தக்கண்ணியை யாங்ஙனஞ் சூடுமெனத் தலைமகள் நாணுமைத்து மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

உறுங்கண்ணிவந்தகணையுரவோன்பொடியாயொடுங்கத் *
தெறுங்கண்ணிவந்தசிற்றம்பலவன்மலைச்சிற்றிலின்வாய் *

நறுங்கண்ணிசூட்டினுநாணுமென்வாணுதலுகத்தொன்பூங் *
குறுங்கண்ணிவேய்ந்திளமந்திகளுணுமிக்குன்றிடத்தே. (கூரு)

வாணுதற் பேசுதை

நாணுக லுரைத்தது.

(இ-ள்.) எல்லார்கணையினும் உயர்ந்த மிகுந்தகேனையுடைய மலர்க்கணையையுடைய பெரியவலிபோன் நீறுய்க்கெடத் தொறலல் லகன்றுநீங்கிய சிற்றம்பலவனது மலைக்கணுண்டாகிய சிறநிலிடத்துச் செவிலியர் சூட்டிய கண்ணிமேல் யாரோ நறுங்கண்ணியைச் சூட்டினும் அதுகுணையானே என்னுடைய வாணுதல் புதிதென்று நாணுநிற்கும். மகளிரைச் சொல்லுகின்றதென்! இக்குன்றிடத்து நாகமரத்தினது ஒள்ளிய பூக்களாலியன்ற குறுங்கண்ணியைச் சூடி அச்சுதிதலான் இளமந்திகளும் நாணுநிற்கும். எ-று.

கண்ணிவந்தவென்பதற்குக் கள் மிக்க கணையெனினு மமையும். நெறுங்கண்ணிவந்தவென்றார், அக்கண் மற்றையவற்றிற்கு மேலாய்நிற்றலின். மேனோக்கி நிற்றலானெனினுமமையும். முதலொடு சினைக்கொற்றுமையுண்மையான் நிவந்தவென்னும் பெயரெச்சத்திற்குச் சிற்றம்பலவனென்பது வினைமுதற்பெயராய்நின்றது. மந்திகளுணுமன்பது பெயரெச்சமாக மலைக்கண் இக்குன்றிடத்துச் சிறநிலிலவாயெனக் கூட்டியுரைப்பினுமமையும். இப்பொருட்குக் குன்றென்றது சிறுகுவட்டை யாதலின்று சூட்டினும் நாணும் பெருநாணினுள் நீர்கொணர்ந்த இவ்வளவிலிய யாங்கனஞ்சூடுவேனென்பதுகருத்து. நாணுதலுரைத்தவென்னுஞ்சொற்கள் ஒருசொன்னீர்மைப்பட்டு இரண்டாவதனையமைத்தன. ()

இசையாமைகூறிமறுத்தல்.

இசையாமைகூறிமறுத்தலென்பது-தலைமகனுணுரைத்தும் மறுத்ததோழி அவனுணங்கிடக்க யாங்கள் வேங்கைமலரல்லது தெய்வத்திற்குரிய வெறிமலர்சூட அஞ்சுதும் ஆதலான் இக்கண்ணி எங்குலத்திற் கிசையாதென மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

நறுமலைவேங்கையின் பூப்பயிலிபாறையநாகறண்ணி *
மறுமலைவேங்கையெனநனிபஞ்சுமஞ்சார்சிலம்பா *
குறுமலைவேங்கைசுணங்கொடணங்கலர்சூட்டுபவோ *
நீறுமலைவேங்கையதளம்பலவனெடுவரையே. (கூன்)

வரைதீர் குலத்தி

இசையா தென்ற

(இ-ள்.) கேணிற்கிடமாகிய வேங்கைப்பூக்கள் பயின்ற பாறையை யானை சென்றணைந்து அதனைத் தறுகணமைக்கிடமாகிய புலியென்று மிகவுமஞ்சும் மனைசாருஞ் சிலம்பையுடையாய், நிறைந்த நகிய புலிபகலையுடைய அம்பலமானது தெடிய இவ்வலாக்கட் குற்வர்மகளாயிருளவாகிய வேங்கையினது சுணங்கு போலும் பூவொடு கெய்வதற்குரிய கழுநீர் முதலாகிய பூக்களைக் கூடவேமோ? கூட்டார். எ-று

நறுமலை வேங்கையென்பதற்கு நறுமிக்க பூவெனினுமமையும். சுறுமனை கூட்டிபவோ வெல்பதற்குக் குறகுடியுள் அவ்வாறு கூட்டிவமோ வென்றுரைப்பாருமுளர் நிறமலையென்பழி ஐகாரம் அகரமாகி, வியப்பென்பாருமுமார் நிறம் அத்தன்மைத்தாகிய அதனொடு இயைதலுமமையும். ஒர்மலை ஒர்மரு ஓர்கருவாடனுமலால் அணுகலர்குடாத எம்மைச் சூழ்வேமாக ஓர்தாயென்பது நிறைச்சிபபொருள். ஒப்புமையாக அஞ்சப்படாததனையும் அஞ்சும் நிலமாகவாக ஏகுருலக்கிற்கேலாத அணங்கலை யாமஞ்சுதலுமொல்லவேண்டுமோவென்பது இறைச்சி யெனினுமமையும். இப்பொருட்கு ஒருதிலகனுத்தலைமகளாகக் கொள்க. வேங்கைப்பூவிற்குச் சுணங்கணித்திருத்தல் குணமாதலால் சுணங்கணியப் படுதலைச் சுணங்கெனறே கூறினாள். (கஎ)

செவ்வியிலளென்றுமறுத்தல்.

செவ்வியிலளென்றுமறுத்தலென்பது- அணங்கலர் தங்குலத்திற்கு சையாதெல்லாதகல்லது மறுத்துக்கூறியவாறன்றென மாந்தழையோடு மலர் கொண்டிசெல்ல, அவை கண்டு உடம்படாளாய், அன்னம் பிணை கிள்ளை தந்தொழிலபயில இன்று செவ்விபெற்றனவிலை அதுகிடக்க என்னுனது நீர்வந்தவாறும் யானுமக்குக் குறைநேர்ந்தவாறும் இன்னுமறிந்திலள் அதனுச் செவ்விபெற்றாற் கொணருமென மறுத்துகூறிற்றல. அதற்குச்செய்யுள்.

கற்றிலகண்டன்னுமென்னடைகண்மலர்நோக்கருளப் *
பெற்றிலமென்பிணைபேச்சுப்பெறுகிள்ளைபிள்ளையின்றென் *
றுற்றிலனுற்றதறிந்திலனாகத்தொளிவிளிரும் *
புற்றிலவாளரவன்புலியூரன்னபூங்கொடியே. (கஅ)

நவ்வி நோக் கி

செவ்வியிலளென்ற து.

(இ-ள்.) புடைபெயர்ந்து விளையாடாமையின் நடைகண்டு அன்னங்கள் மெல்லியநடையைக் கற்கப்பெற்றனவில்லை, தம்மாற் குறிக்கப்படுங் கண்மலர்நோக்குக்களை அவள்கொடுப்ப மென்பி

ணைகள் பெற்றனவில்லை, உமாபாடாமையின் தாங்ருதுமொழிக ளைக் கிளிகள் பெற்றனவில்லை, இருந்தவாற்ருன் எம்மினளை இன் றெருரு விளையாட்டிங்கணுற்றிலள், அதுவேயமன்றி ஆகத்தின்க ட்கிடந்தொளிவிளங்கும் புற்றிலிகண்ணவாகிய ஒளியையுடைய பாம்பையடையவனது பலியுணவொக்கும் பூக்கொடி என்னு ம்ழை நீர்வந்தவாறும் யானுமவளுக் குறைமேற்றவாறும் இன்னு மறிந்திலள், அதனுற்செவ்வி பெற்றுச சொல்லல வேண்டும். எ-று.

கண்டென்பது கற்றலோடும், அருளென்பது பெறுதலோ டும் முடிந்தன. புற்றிலவென்பதற்கு வேள்வி தீயிற்பிறந்து நி ருமேனிக்கண் வாழ்தலாற் புற்றையுடையவலலாத அரவென்று காப்பினுமமையும் ஆகதொளியென்பதனும் பாடம் இலவயே ழிற்கும் மெய்ப்பாடு - அச்சத்தினுகசகார்ந்தபெருமிதப். முடியா தெனகருதுவாளாயின் இறந்துபடுமென்னும் அசசமும முடி க்கக்கருதலிற் பெருமிகமுமாயிற்று. பயன் - செவ்விபெறுதல். மேற்றலைமகளைக் குறைநயப்பித்து அவளது கருத்துணாந்து தன் னினுகிய கூட்டங்கூட்டலுறுந்தோழி தலைமகன் றெருண்டி வரை ந்தெய்துதல்வேண்டி, இவையுமுதலாக முன்னர் விண்ணிறந்தாரெ ன்னும் பாட்டுறுக இவையெல்லாங்கூறிச் சேட்படுத்தலப்பெறு மென்பது. (கஎ)

காப்புடைத்தென்றுமறுத்தல்.

காப்புடைத்தென்றுமறுத்தலென்பது- செவ்வியிலென்றது செவ்வியிபெற்றுற் குறையிலலையென்ருளாமென உட்கொண்டுநிற் ப, கதிரவன் மறைந்தான் இவ்விடம் காவலுடைத்து நும்மிடமு ஞ்சேய்த்து எம்மையன்மாருங் கடியர் யாந்தாழ்ப்பின் அன்னையு முனியும் நீரும் போய் நாளைவாருமென இசைய மறுத்துக்கூறு நிற்றல் அஃதுச்செய்யுள்.

முனிதரு மன்னையுமெம்மையர்சாலவுமூர்க்கரின்னே *
தனிதருமிற்றிலத்தன்றபகுன்றமுந்தாழ்சடைமேற் *
பனிதருநிம்பளணிபம்பலவர்பகைசெருக்கும் *
குனிதருதிண்சிலைக்கோடிசென்றுன்சுடர்க்கொற்றவனே. (கூஅ)

காப்புடைத் தென் று
சேட்படுத்த து.

(இ-ள்.) சுடர்களுட் டலைவன் தாழ்ந்த சடைமேற் குளிர்ச்சியை த்தருந் திங்களைச் சூடிய அம்பலவர் பகையைச்செருக்கும்வளைத் து திண்ணிய சிலையாகிய மேருவினது கோட்டையடைந்தான்,

இனித்தாழ்ப்பின் அன்னையும் முனியும், என்னையன்மாரும் மிகவு மாராயாது ஏதஞ்செய்யுந்தன்மையர், இவ்விடமும் இனி யியங்கு வாரின்மையின் இப்பொழுதேதனிமையைத்தரும். ஐயனே, நினது குன்றமும் இந்நிலத்தின் கண்ணதன்று, அதனால் நண்டுநிற்கத் தகாது எ-று.

அம்பலவர் பகைசெருத்தற்குத் தக்க திண்மை முதலாகிய இயல்பு அதற்கெக்காலத்து முண்மையால், செருக்குமென நிகழ் காலத்தாற்கூறினார். இந்நிலத்தன்றென்பது பாடமாயிக், இக்குன்றமும் இவ்வாறு மகளிரும் ஆடவருந் தலைப்பெய்து கொள்ளாது நிலைமைதன்றென வுவகைக்க. மெய்ப்பாடும் பயனும்-அவை. இவ்விடம் மிக்க காவலுடைத்து இங்குவாரன்மினென்றாளென, இவ்விடத்தருமையை மறையாது எனக்குரைப்பாளாயது எலக்கட்கிடந்த பரிவினானன்றே இத்துணையும் பரிவுடையாள் எனநாற்றுமைக்கிரங்கி முடிக்குமென ஆற்றுமென்பது. (கூஅ)

நீயேகூறென்றுமறுத்தல்.

நீயேகூறென்றுமறுத்தலென்பது - இவள் இவ்விடத்து நிலைமையை மறையாது எனக்குரைப்பாளாயது எலக்கட்கிடந்த பரிவினானன்றே இத்துணைப் பரிவுடையாள் எனக்கிது முடியாமையிலையெனத் தலைவன்உட்கொண்டுபோய்ப் பிற்றைஞான்றுசெல்ல, தோழி யான் குற்றேவன்மகளாகலிற் றுணிந்துசொல்லமாட்டுகின்றிலேன் இனி நீயே சென்று நின்குறையுள்ளது சொல்லெனத்தானுடம்படாதுமறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்

அந்தியின்வாயெழிலம்பலத்தெம்பரனம்பொன்வெற்பிற் *
பந்தியின்வாய்ப்பலவின்சுளைபைந்தேனொடுக்கடுவன் *
மந்தியின்வாய்க்கொடுத்தோம்பருஞ்சிலம்பமனங்கனிய *
மூந்தியின்வாய்மொழிநீயேமொழிசென்றம்மொய்குழற்கே. ()

அஞ்சுதும்பெரும பஞ்சின்மெல்லடியை க்
கூறுவநீயே கூறுகென்ற ரு.

(இ-ள்) அந்தியின்கணுண்டாயெ செவ்வானெழிலையுடைய அம்பலத்தின்கணுளனாகிய எம்முடைய எல்லாப்பொருட்கும் அப்பாலாயவனது அழகிய பொன்னையுடைய வெற்பிடத்துப்பந்தியாகிய நிரையின்கட் செவ்விதிற்றேனொடும் பலாச்சுளையைக் கடுவன் மந்தியிற்வாயின் அருந்தக்கொடுத்துப் பாதுகாத்துஞ் சிலம்பையுடையாய், அவள் மனநெகிழ விரைந்து இன்னினிய வாய்

மொழிகளை அம்மொய்த்தகுழலியுடையாட்கு நீயேசென்றுசொல்லுவாயாக. எ-று.

எல்லாப்பொருளையுங் கடந்தானாயினும் எமக்கணியனென்னுங் காதலத்தான், எம்பரனென்றார். வெற்பிற்சிலம்பனெனவினையையும். பந்தி பலாநிரையென்பாருமுளர் சிலம்பென்றது வெற்பினொரு பக்கத்துளதாகிய சிறுகுவட்டை. வாய்மொழி-மொழியென்னுந் துணையாய்நின்றது. மனங்கனியுமென்பதூஉம், நின்வாய்மொழியென்பதூஉம் பாடம். மந்தி உயிர்வாழ்வதற்குக் காரணமாகியவற்றைக் கடுவன் தானேகொடுத்து மனமகிழ்விப்பதாற்போல தலைவன் உயிர்வாழ்வதற்குக் காரணமாகிய நின்வார்த்தைகளை நீயே கூறி அவளை மனமகிழ்விப்பாயாகவென உள்ளுறையுவமங் கண்டுகொள்க. மெய்ப்பாடும் பயனும் அவை. (கக)

குலமுறைகூறிமறுத்தல்.

குலமுறைகூறிமறுத்தலென்பது - நீயுகூறெனச் சொல்லக் கேட்டு, உலகத்து ஒருவர்கண் ஒருவர் ஒருகுறை வேண்டிச்சென்றால் அக்குறை நீயே முடித்துக்கொள்ளென்பாரில்லை அவ்வாறன்றி இவளிற்றாளெல்லாம் என்குறைமுடித்துத் தருவேனென்று எனனை யலமேயுழற்றி இனறு நின்குறை நீயேமுடித்துக்கொள்ளென்றுரிற்றாளெனத் தலைமகன் ஆற்றாதுரைப்ப, அவனையாற்றுவிப்பது காரணமாக, நீர பெரியீர் யாருசிறியேம், ஆதலான் எம்மோடு நுமக்குச் சொல்லாடுதல் தகாதெனக் குலமுறைகூறி மறுத்துணையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தெங்கம்பழங்கமுகின்குலைசாடிக்கதலிசெற்றுக் *
கொங்கம்பழனதொளிர்குளிர்நாட்டினைநீயுமைகூர் *
பங்கம்பலவன்பரங்குன்றிற்குன்றன்னமாபதைப்பச் *
சிங்கத்திரிதருசீறூர்ச்சிறுமியெற்றேமொழியே. (ஈ)

தொழுகுலதீர் சொற்காகே ப்
இதிகுலதே மெனவுகூர்த்த து.

(இ-ள்.) மூககூழ்த்துவிழுகின்ற தெங்கம்பழம் கமுகினதுகுலையை உதிர மோதி வாழைகளைமுறித்துப் பூந்தாதைபுடைய பழனத்துக்கிடந்து விளங்குங் குளிர்ந்தநாட்டினுள்ளாய் நீ, எம்முடைய தேமொழி உமை சிறந்த பாகத்தையுடைய அப்பலவனது பரங்குன்றிடத்து மலைபோலும் யானைகள் நடுங்கச் சிங்கங்கள் வேட்டத்திரியுஞ் சீறூர்க்கணுள்ளாள் ஓர் சிறியாள், அதனால் எம்மோடு நீ சொல்லாடுதல் தகாது. எ-று

நாட்டினையென்பதற்கு நாட்டையிடமாகவுடையையென இரண்டாவதன்பொருள்பட உரைப்பினுமமையும். பரங்குன்றிற் சீறூரென வியையும். பெருங்காட்டிற் சிறுகுரம்பையென்பது போதர, சிங்கந்திரிதரு சீறூரென்றான். மெய்ப்பாடும் பயனும் அவை. (ஈ)

நகையாடிமறுத்தல்.

நகையாடிமறுத்தலென்பது- இவள் குலமுறைகளைத்தலான் மறுத்துக்கூறியவாறன்றென மனமகிழ்ந்துநிற்ப, இனியிவனுற்றவாறென உட்கொண்டு, பின்னுந்தழையெதிராது, எம்மையன்மாரேவுங்கண்டவிவேம் இவ்வையர் கையிலேப்போலக்கொலையாற்றிண்ணியபுகண்டறியேமென அவனேவாடல்சொல்லி நகையொடுமறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

சிலையொன்றுவாணுதல்பங்கன்சிற்றம்பலவன்கயிலை *
மலையொன்றுமாமுகத்தெம்மையரெய்கணைமண்குளிக்குங் *
கலையொன்றுவெங்கணையோடுகடுகிட்டதென்னிற்கெட்டேன் *
கொலையொன்றுதிண்ணியவாறையர்கையிற்கொடுஞ்சிலையே (ஈக)

வாடடழையெதிராது சேட்படுத்தற் கு
மென்னகைத்தோழி யின்னகைசெய்தது.

(இ-ள்) சிலையையொக்கும் வாணுதலை யுடையாளது கூற்றையுடையாள், சிற்றம்பலவன், அவனது கைலைக்கண் மலையை யொக்கும் மாமுகத்து எம்மையன்மார் எய்யுங்கணை அவற்றை யுருவி மண்ணின்கட்குளிப்புக்காண்டும், அவ்வாறன்றி ஒருகலையுவமாய்த வெப்பமிகுந்து மிகுந்தோடிற்றாயின், இவ்வையர் கையிலவளைந்தகில, கெட்டேன், கொலையாகிய வொன்று திண்ணியவாறென! எ-று.

கைலைக்கண் மண்குளிக்குமெனவியையும். கொடுஞ்சரமென்பதூஉம் பாடம். (ஈக)

இரக்கத்தொடுமறுத்தல்.

இரக்கத்தொடுமறுத்தலென்பது- இவள் என்னுடனே நகையாடுகின்றாளு தழைவரங்குதற்பொருட்டென உட்கொண்டுநிற்ப, பின்னையுந் தழையேலாது, இவ்வையர் இவ்வாறுமயங்கிப் பித்தழையாநிற்றற்குக் காரணமென்னோவென்று அதற்கிரங்கி மறுத்துக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பித்தழையாநிற்றமாமிடற்றம்பலவன்கழற்கே *
மெய்த்தழையாநிற்றவன்பிணர்போலவிதாவிதிர்த்துக் *

கைத்தலமேற்றிக்கடமாவினுய்க்கையில்விலின்றியே
பித்தலமாதிற்பாரவென்பாவம்பெரியவரே. (௩௨)

கையுறைவெதிராது காதற்றுழி
வையநீபெரி த்யர்ததலையென்ற து.

(இ-ள்.) கருமை மிகாநின்ற கரியமிடற்றையுடைய அம்பலவனது கழற்கணணே பெருகாநின்ற மெய்யன்பையுடையவரைப் போல மிகநடுங்கிக் கைக்கண்ணே தழையை ஏந்தி, இதனேடுமகறுபடக் கடமாவவ வினுவி, தங்கையில் விலலின்றிரே, இப்பெரியவர் பித்தலமாதின்றார், இஃதென்ன தீவ்வினையோ! எ-று.

மா-கருமை மாமிடறென்பது பண்புத்தொகையாய் இன்னதிறுவென்னுந் துணையாய் நிற்றலானும், மைதலமாதின்றவென்பது அக்கருமையது மிருதியை உணர்த்தி நிற்றலானும், கூறிய துகூறலாகாமையறிக அது "தாமரைமீமிசை,, எனவும், "ஞழிந்தாழ்ககண்ண,, எனவும், இத்தன்மையபிறவும் வருவனபோக. மெய்த்தலமாதின்றவன் பென்பதற்கு மெய்யாற்றலமாதின்ற அன்பெனனுமமையும். பித்தென்றது ஈண்டுப் பித்தாற்பிறந்த அலமப்பை. அலமப்பு-பொருள்புணராவோசை. (௩௨)

சிறப்பினமைகூறிமறுத்தல்.

சிறப்பினமை கூறி மறுத்தலென்பது- என்வருத்தந்திற்குக் கவலாநிலமானன் இவளாதலின் எனக்கிதுமுடியாமை யில்லையென உட்கொண்டுநிற்ப, தோழி இக்குன்றிடத்து மாவுஞ் சுனையும் இவள்வழிவுக்கஞ்சி மலர்ந்தறியாவாதலான் ஈண்டில்லாதனவற்றை யாமணியிற் கண்டார் ஐயுறுவரென மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

அகனுமாவுமணி மணிக்கூத்தன்சிற்றம்பலமே *
யொக்குமிவளதொளிருருவஞ்சிமஞ்சார்சிலம்பா *
கொக்குஞ்சுனையுங்குளிர்தளிருங்கொழும்போதுகளு *
மக்குன்றிலென்னுமலர்ந்தறியாதவியல்பினவே. (௩௩)

மாந்தளிரு மலர்நீலமு
ஏந்தலிம்மலை யில்லையென்ற து.

(இ-ள்) மஞ்சார்ந்த சிலம்பையுடையாய், அக்கையும் அரவையு மணியும் மாணிக்கம்போலுங் கூத்தனது சிற்றம்பலத்தையொக்கும் இவளது விளங்காநின்ற வடிவையஞ்சி மாக்களுஞ் சுனைகளுங் குளிர்ந்தளிர்களுங் கொழுவியபோதுகளும் இக்குன்றில் எக்

ஆலத்தும் விரிந்தறியாத தன்மையையுடைய, அதனால் நண்டில்லாத இவற்கறு யாமணியிற் கண்டார் ஐயுறுவர். எ-று.

தளிர்மலர்ந்தறியாதவென்னுஞ் சினைவினை முதன் மேலேறியும், போதுமலர்ந்தறியாத வென்னும் இடத்து நிகழ்பொருளின் வினை இடத்து மேலேறியும், நின்றன. (ரகு)

இளமைகூறிமறுத்தல்.

இளமைகூறிமறுத்தலென்பது - அவளது வடிவுக்கஞ்சி மலர்ந்தறியாவென்றதல்லது மறுத்துக்கூறியவாறன்று சிறப்பின்மைகூறியவாறென உட்கொண்டு, சிறப்புடைத் தழை கொண்டுசெல்ல, அதுகண்டு, குழலும் முலையுங் குவியாத குதலைச்சொல்லிக்கு நீ சொல்லுகின்றதாரியம் சிறிதுமியையுடைத்தன்றென அவளிளமை கூறி மறுத்துரையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

உருகுதலைச்சென்றவுள்ளத்துமம்பலத்தும்மொளியே *
பெருகுதலைச்சென்றுநின்றுன்பெருந்துறைப் பிள்ளைகள்ளார்
முருகுதலைச்சென்றகூழைமுடியாமுலைபொடியா *
வொருகுதலைச்சின்மழலைக்கென்னேவையவோதுவதே. (ரகு)

முளையெயிற் றரி வை
விளைவில ளென்ற து.

(இ-ள்) அன்பருடைய உருகுதலையடைந்த உள்ளத்தின்கண்ணும் அம்பலத்தின்கண்ணும் இரண்டிடத்துமொப்ப ஒளிபெருகுதலையடைந்து நின்றவனது பெருந்துறைக்கணுளராகிய எம்பிள்ளையுடைய தேனூர்ந்த நறுநாற்றம் தம்மிடத்தடைந்த குழல்கள் முடிக்கப்படா, முலைகள் தோன்றா, ஒருகுதலைச் சின்மழலை மொழியாட்டி, ஐயனே, நீ சொல்லுகின்றவலி யாதாம்! சிறிதுமியையுடைத்தன்று. எ-று.

ஏசாரம்-அசைதில். கள்ளார் கூழையெனவியையும். குதலைமை-விளங்காமை. மழலை-இளஞ்சொல். சின்மழலைத் திறத்தென நான்காவது ஏழாவதன்பொருட்கண் வந்ததெனினுமமையும். இவையுரான்கற்கும் மெய்ப்பாடும் பயனும் அவை. (ரகு)

மறைத்தமைகூறிநகைத்துரைத்தல்.

மறைத்தமைகூறிநகைத்துரைத்தலென்பது - இவளதிளமை கூறுகின்றது தழைவரங்குதற்பொருட்டன்றாகவேண்டும் அதுவன்றி

இந்நாளெல்லாமியைப மறந்து இப்பொழுது இவளிளையளென்று இயைபாமைகூறி மறுக்கவேண்டியதென்னை இனி யிவ்வொழுக்கம் இவளையொழியவொழுகக்கடவேனென உட்கொண்டுநிற்ப, நீயென்னைமறைத்தகாரியம் இனி நினக்கு முடியாதென அவளோடு நகைத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பண்டாலியறுமிலைவளர்பாலகன்பார்கிழிந்துந் *
தொண்டலிபறுஞ்சுடர்க்கழலோன்றுலைத்திலையின்வாய் *
வண்டாலியறுவளர்பூந்துறைவமறைவிலென்னைக் *
கண்டாலியறுங்கடனிலங்கொல்லோகருதியதே. (ஈரு)

என்னைமறைந்தமி னென்னனியதரிதெ ன
நன்னுதற்றோழி நகைசெய்த து.

(இ-ள்.) முற்காலத்து ஆலின்கனுளதாம் இலையிற்கட்டியின்ற பாலகனாகிய மார்பேன் நிலத்தைக்கிழித்துக் காறுமையிற் பின்றொண்டாலினாழுகுஞ் சுடர்க்கழலையுடையானது பலபுயதலமிய இலைவளாப்பிறுண்டாகிய வண்டுகள் ஆலிப்போடு திரிகரும் மிக்க பூக்களையுடைய துறையையுடையாய், ஆராய்ந்தால் எனனை மறைப்பின் நீ கருதியது முடியுமுறைமையிலலைபோலும். எ-று.

பண்டிதொண்டாலியனுமெனவும், இலைவளாப்பிற்றுறையெனவுமிலையும். இலைக்கட் டுறைவனெனினுமமையும். மெய்ப்பாடு- அச்சத்தைச்சார்ந்த நகை. இவள் நகுதலான் என்குறையின்னதென உணர்ந்த ஞான்று தானே முடிக்குமென நினைதலு ஆற்றுவாளுவது-டயன். (ஈரு)

நகைகண்டுமகிழ்தல்.

நகைகண்டுமகிழ்தலென்பது - இவள் தன்னை மறைத்தால் முடியாதென்றது மறையாதொழிந்தால் முடியுமென்றுளாயெனத் தலைமகன் உட்கொண்டு நின்று, உன்னுடைய சதுரப்பாட்டைச்சேர்ந்த மெல்லென்ற நோக்கமன்றோ எனக்குச் சிறந்த துணையல்லது வேறு துணையுண்டோவென அவளது நகை கண்டு மகிழ்நிற்றல். அதற்குச்செய்யுள்.

மத்தகஞ்சேர்தனிநோக்கினன்வாக்கிறந்தூறமுதே *
யொத்தகஞ்சேர்ந்தென்னையுய்யநின்றோணறில்லையொத்திலங்கு *
முத்தகஞ்சேர்மென்னகைப்பெருந்தோளிமுகமதியின் *
வித்தகஞ்சேர்மெல்லெனோக்கமன்றோவென்விழுத்துணையே

இன்னகைத்தோழி மென்னகைகண் ௫
வண்ணக்கதிர்வே லண்ணலுளாரத் ௬.

(இ-ள்.) நெற்றியைச்சேர்ந்த தனிக்கண்ணையுடையான், சொல்லளவைக் கடந்து ஊறுமமுதத்தையொத்து மனத்தைச்சேர்ந்து என்னையுய்யநின்றவன், அவனது திருவிளையாடலொதுநிலவும் மூத்துப்போலும் எயிறுகளுள்ளடங்கிய மூன்றுமுறுவலையுடைய பெருந் தோளியது முகமாகிய மதியில்கணுண்டாகிய சதுரப்பாட்டைச்சேர்ந்த மெல்லென்ற நோக்கமன்றோ எனது சிறந்ததுணை, அதனால் ஆற்றக்கரும். எ-று.

வாக்கிறந்தென்பதூஉம், அமுதொத்தென்பதூஉம், அகஞ்சேர்ந்தென்பதனோடியையும். உய்யநின்றோ னென்றுஞ் சொற்கள் உய்வித்தோனென்னும் பொருளவாய், ஒருசொன்னீர்மைப்பட்டு இரண்டாவதற்கு முடிபாயின. இலங்குமுகமதியென வியையும். மறுத்தாளாயினும் நங்கண் மலர்ந்தமுகதகளெ ஊங்கருத்தால் இலங்குமுகமதியினென்றான் உள்ளக்குறிப்பை நுண்ணிதின் விளக்கலின், வித்தகஞ்சேர்மெல்லெனோக்கமென்றான். உள்ளக்குறிப்பென்றவாறென்னை, முன்னாளச் சிங்கமழலைக்கென்னோடை யவோதுவதென்று இளையளென மறுத்தவிடத்து இந்நாளெல்லா மியையமறுத்து இப்பொழுது இவளிளையளென்று இளையாளை மறுத்தாள் இவ்வொழுக்கம் இனி இவளை யொழிய வொழுக்கட வேனென்று நலமகன் தன்மனத்திற் றுணிந்தான் அக்குறிப்பைத் தோழி அறிந்து கூறினமையின் வித்தகஞ்சேர் மெல்லெனோக்கமன்றோ எனக்குச் சிறந்ததுணை பிறிதில்லையெனத் தனதாற்றாமை தோன்றக கூறினான். மெய்ப்பாடு-உவகை. பயன்- ஆற்றாமை நீங்குதல். (ஈ௭)

அறியாள்போன்றுநினைவுகேட்டல்.

அறியாள்போன்றுநினைவுகேட்டலென்பது - தலைமகனது மதிமுச்சிகண்டு இவன் வாடாமற் றழைவாங்குவேனென உட்கொண்டு, என்னுடைய தோழியர் எண்ணிறந்தாருளர் அவருள் நின்னுடைய நினைவு யார்கண்ணதோவெனத்தானறியாதாள்போன்று அவளினைவு கேளாநிற்றல். அதற்குச்செய்யுள்.

விண்ணிறந்தார்நிலம்விண்டவரொன்றுமிக்காரிருவர் *
கண்ணிறந்தார்தில்லையம்பலத்தாரகழுக்குன்றினின்று *
தண்ணறுந்தார்திவர்சந்தனசாலைப்பந்தாடுகின்றா *
ரெண்ணிறந்தாரவர்யார்கண்ணதோமன்னநின்னருளே. (ஈ௭)

வேந்தன்சொன்ன மாந்தளிர்மேனி யை
வெறிபார்கோதை யறிபேனென்ற து.

(இ-ள்.) விண்ணைக்கடந்தலர் நிலத்தைப்பிளந்தவென்று சொல்லப்படும் பேரிபோரிருவருடைய கண்ணைக்கடந்தார், திங்கள்பம்பலத்தின்கண்ணார், அவரது கழுத்தின்றின்றணிந்தாகிய நறிய தாது பரந்த சந்தனச்சோலையிடத்துப் பந்தாடுகின்றார் இறப்பப்பலர், மன்னனே, நினதருள் அவருள் யார்கண்ணதோ? கூறுவாயாக. எ-று.

விண்டவரென்பதற்கு முன்னுரைத்தது ஊரைக்க. அன்னோர்க்கு அரியராயினும் 'எம்மனோர்க்கு எளியரொன்னுங்கருத்தால் நில்லை யம்பலத்தாரென்றார். கோலைக்கணிந்தென்று கூட்டினு மமையும். எண்ணிறந்தாரபலரென்பதனும் பாடம். மெய்ப்பாடு- மருட்கையைச்சார்ந்த பெருமிதம் நும்மாற் கருதப்படுவாளை அறியேனென்றாளாக என்குறை இன்னாள்கண்ணதென அறிவித்தால் இவள் முடிக்குமென நினைந்து ஆற்றுவாளுமென்பது -பயன். (ாஎ)

அவயவங்கூறல்.

அவயவங்கூறலென்பது-இன்னும் அவளை யிவள் அறிந்திலள் அறிந்தாளாயிற் றழைவாங்குவாளென உட்கொண்டு நின்று, என்னுற்கருதப்பட்டாளுக்கு அவயவம் இவையெனத் தொழிக்குத் தலைமகன் அவளுடைய அவயவங்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

குவவினகொங்கைகுரும்பைகுழல்கொடுறைகொவ்வைசெவ்வாய் *
கவவினவாணகைவெண்முத்தங்கண்மலர்செங்கழுநீர் *
தவவினதீர்ப்பவன்றுழ்பொழிற்சிற்றம்பலமனையாட் *
குவவினநாண்மதிபோன்றொளிர்கின்றதொளிமுகமே. (ாஅ)

அவயவ மவளு க்
கிவையிவை யென்ற து.

(இ-ள்.) விரதங்களான் வருந்தாமற் றவத்தொழிலைநீக்கி அன்பர்க்கு இன்புறு தெறியருளியவனது தாழ்ந்தபொழிலையுடைய சிற்றம்பலத்தையொப்பாட்குக் குவிந்தகொங்கைகள் குரும்பையையொக்கும், குழல் கொன்றைப்பழத்தை யொக்கும், செய்யவாய் கொவ்வைக்கனியையொக்கும், அதனகத்திடப்பட்ட வாணகை வெண்முத்தையொக்கும், கண்மலர்கள் செங்கழுநீரையொக்கும், ஒளி முகம் உவாவின்கணுளதாகிய செவ்விமதியோன்றொளிராநின்றது. எ-று.

தவவினைதீர்ப்பவனென்பதற்கு மிகவுந் வினைகளைத் தீர்ப்பவனெனினுமமையும். உவவினநாண்மதியென்றது "காலகுருக்கு" என்பதுபோலப் பன்மையொருமைமயக்கம். எப்பொழுதுந் தன்னுள்ளெத்திடையறாது விளங்குதலின், ஒளிர்கின்றதென நிகழ்காலத்தாற்கூறினான் உவவினமதி-பலகலைகள்கூடி நிறைந்த தன்மையையுடைய மதி. நாண்மதி-உவாவான நாளின்மதி. (ரஅ)

கண்ணபத்துரைத்தல்

கண்ணபத்துரைத்தலென்பது - அவயவங்கூறியவழிக் கூறியும் அமையாது, தனக்கு அன்று தோழியைக் காட்டினமை நினைந்து, பின்னுங்கண்ணபத்து கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஈசற்கியான்வைத்தவன் பினகன்றவன்வாங்கியவென் *
பாசத்திற்காரென்றவன் றில்லையினொளிபோன்றவன்றோள் *
பூசத்திருநீறெனவெளுத்தாங்கவன் பூங்கழல்யாம் *
பேசத்திருவார்த்தையிற்பெருநீளம்பெருங்கண்களே. (ரஎ)

கண்ணினை பிறழ்வ ன
வண்ண முரைத்த தி.

(இ-ள்) ஈசனிடத்து யான் வைத்த அன்புபோல அகன்று, அவனால் வாங்கப்பட்ட எனது பாசம்போலக் கறுத்து, அவனது தில்லையினொளியையொத்து, அவன்றோள்களிற்சாத்தும் அத்திருநீறுபோல வெளுத்து, அவனுடைய பூப்போலுந் திருவடிகளை யாம் பேசும் அத்திருவார்த்தைபோல மிகவுநெடியவாயிருக்கும் என்னுந் காணப்பட்டவளுடைய பெரிய கண்கள். எ-று.

அன்பின்கன்றென்பதற்குப் பிறிதுரைப்பாருமுளர். தில்லையினொளிபோறல் - தில்லையினொளிபோலும் ஒளியையுடைத்தாதல்; ஆகவிவ தில்லையே உவமையாம். பூசத்திருநீறு வெள்ளிதாய்த்தோன்றுமாறுபோல வெளுத்தென்றும், பேசத் திருவார்த்தை நெடியவாயினாற்போலப் பெருநீளமாமென்றும், வினையெச்சமாக்கி, சிலசொல் வருவித்துரைப்பினும் அமையும். பெருநீளமாமென ஆக்கம் வருவித்துத் தொழிற்படவுரைக்க. கண்களாற்பெரிது மிடர்ப்பட்டானாகலானும், தோழியைத் தனக்குக்காட்டின பேருதவியையுடையனாகலானும், மூன்னர்க்கண்மலர் செங்கழுநீரென்றும் அமையாது, பின்னும் இவ்வாறுகூறினான். கண்ணிற்குப் பிறிது வகையான் உவமங்கூறாது இங்ஙனமே அல்லமுதலாயின கூறலே என்படியது எற்றிற்கெனின், அவை கண்ணிற்கிலக்கணமுங் காட்டியவாறும். என்னை இலக்கணமாமாறு? "கண்ணிற் கியல்பு கசடறக்

இளப்பின், வெண்மை கருமை செம்மை யகல, நீள மொளியென நிகழ்த்துவர் புலவர்,, ஆயின் இதனுட் செம்மை கண்டிலேமென்பார்க்குச் செம்மையுங் கூறிற்று. அவன்றொளிற்றூசத் திருநீறென்றதனால் சிவப்புஞ்சொல்லியதாயிற்று. அதுசெம்மையாற் றோன்றாம் வரியெனவறிக. யான்பேசத்திருவார்த்தைதென்னாது யாமென்ற தென்னையெனின், திருவார்த்தை பேசுமன்பர் பலராகலான் யாமென்று பலராகக்கூறினார். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு- உவகையைச்சார்ந்தபெருமிதம். பயன்-ஐயமறுத்தல். (௧௬)

தழையெதிர்தல்

தழையெதிர்தலென்பது-கண்ணையந்துரைப்பக்கேட்ட தோழி இவ்வாறு எற்றல் எந்குடிக்கேலாவாயினும் நீ செய்தவுதவிக்கும் நின்போன்பக்கும் எலாநின்றேனெனக் கூறித் தலைமகன்மாட்டித் தழையெதிராநிற்றல். அதற்குச்செய்யுள்.

தோலாக்கரிவென்றதற்றுந்துவள்விற்குமில்லின்றொன்மைக் *
கேலாப்பரிசுளவேயன்றி யேலேமிருஞ்சிலம்ப *
மாலார்க்கரியமலர்க்கழலம்பலவன்மலையிற் *
கோலாப்பிரசமன்னுடகையநீதந்தகொய்தழையே. (௧௭)

அகன்றவிடத் தாற்றுமைகண் டு
கவன்றதோழி கையுறையெதிர்ந்த து.

(இ-ள்.) இருஞ்சிலம்பா, எம்மையேதஞ்செய்யவருந் தோலாக்கரியை நீ வென்றதற்கும் யான் குறைமறுப்பவும் போகாது பேரன்பினையுடையையாய் நீவிடாது துவண்ட துவட்சிக்கும் எமது குடியின்பழமைக்கேலாத இயல்பையுடைய வென்று எம்மாற்செய்யப்படாதனவுளவே! ஐயனே, மாலார்க்குமரிய மலர்போலுங் கழலையுடைய அம்பலவனது மலையின்கண் வைக்கப்படாத தேனையொப்பாட்டு நீ தந்த கொய்தழையைப் பிறிதோராற்றானேலேம். எ-று.

உளவேயென்றுமேலாரம் எதிர்மறை. அஃதென்போலவெனின், "ஆற்றுதோ தூர விடல்,, என்றது தூற்றுமென்று பொருள்பட்டவாறுபோலவென்றறிக. அன்றியும், எலாப்பரிசுளவேயென்பதற்கு நாங்கள் இத்தழை வாங்குவதன்றென்றது கருத்து. எமதுகுடிப்பிறப்பின் பழமைபற்றி அது அற்றத்தார்கூடி வாங்குவதொழித்து நாங்களாக வாங்கினாற் குடிப்பிறப்புக்குப் பழிவருமென்பதனைப்பற்றியென்றிவாறு. வழிபட்டுக்காணவுறுமையின், மாலாரென இழித்துக்கூறினாரெனினுமமையும். உளவேலன்றியேலேமென்பது பாடமாயின், தழைவாங்குகின்றுழி என்பொருட்டால்நீர் நுங்குடிக்கேலாதனவற்றைச்செய்யாநின்றீரென்று தலை

மகன்கூறியவழி, நீ செய்ததற்குக்கைம்மாறுசெய்ய வேண்டுமாதலின் இற்பழியாங்குற்றம் இதற்குளவாயினல்லது இதனையேலேமென்று கூறினளாகவுமாக்க என்றது-இற்பழியாங்குற்றம் இதற்குளவாகலான் எற்கினறேம் நீ செய்தவுதவியைப்பற்றி அல்லதேலேமென்றவாறெனவறிக. கோலாற்பிரசமென்பதுபாடமாயின், கோலிடத்துப்பிரசம் - என்றது - கோற்றேன். இது சுவைமிகுதியுடைமைகூறியவாறெனவுமாக்க. தோலாக்கரியென்றது முதலாயின நிகழ்ச்சி செய்யுளின்கட் கண்டிலேமென்பார்க்கு இயற்கைப்புணர்ச்சியது நீங்கத்தின்கண் நிகழ்ந்தனவெனவுமாக்க. அன்றியும்படைத்துமொழி வகுத்துரையென்பனவற்றானுமறிக. அகறல்-அவன்கருத்திற்ககறல். மெய்ப்பாடு-அச்சத்தைச்சார்ந்தபெருமிதம். பயன்-குறைநேர்தல். (எம)

குறிப்பறிதல்.

குறிப்பறிதலென்பது - தலைமகன் மாட்டுத் தலைமகளெதிர்ந்த கோழி இவளுக்குத் தெற்றெனக் கூறுவேனாயின் இவள் மறுக்கவுநிகழ்வினவன உட்கொண்டு, இற்றாள்காறுந் தலைமகளாமைக்குத் தக்க பொய்சொல்லி மறுத்தேன் இன்று அவளது நோக்கங்கண்டபின் பொய்சொல்லுநெறி அறிந்திலேன் இனி யவளுக்குச் சொல்லுமாறெங்ஙனேயெனத் தலைமகளது குறிப்பறியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கழைகாண்டலுஞ்சுளியுங்களியானையங்ஙனன்கரத்திற் *
றழைகாண்டலும்பொய்தழைப்பமுன்காண்பனின்றம்பலத்கா *
னுழைகாண்டலுநினைப்பாருமென்னேக்கிமன்னேக்கங்கண்டீர *
லிழைகாண்பணைமுலையாயறியேன்சொல்லுமீடவற்கே. (ரரக)

தழையெதிரா தொழிவதற்கோ ரீ
சொல்லறியேனெனப் பல்லவைக்குரைத்த ௩.

(இ-ள்.) குத்துகோலைக் காண்டலும் வெகுளுங் களியானையையொப்பானுடைய கையிற் றழையைக்காண்டலும் அப்பொழுது சொல்லத்தகும் பொய்யை முன்பெருகக் காண்பேன், அம்பலத்தானுடைய கையி லுழைமானைக்காண்டலும் நினைவுண்டாம் மெல்லியநோக்கத்தையுடையாய், அம்மன்னனுடைய புன்கணேக்கத்தைக் கண்டால் இழை விரும்பிக் காணப்படுமிடை பெரியமுலையையுடையாய், இன்று அவற்குப் பொய்சொல்லுநெறி யறிகின்றிலேன், இனி யாது செய்வாய்! எ-று.

குத்துகோல்வரைத்தன்றி யானை களிவரைத்தாயினாற்போலக் க

றுறுவார் சொல்லுவத்தனன்றி வேட்கைவயத்தனாயினனென்பது போதாக் கழைதாண்டலுஞ் சுளியுங்களியானை யன்னானென்றார். ஈண்டுக்கழறுவாரென்றது தோழிதன்னை. தலைவரவு கையுறைபல வற்றையும் ஆகாவென்று தான் மறுத்ததனை நோக்கி. தலைமகனை மு கங்கோடற்கு இழைதாண்பணைமுலையாயெனப் பின்னும் எதிர்மு கமாக்கினாள். தழையெதிர்ந்தாளாயினும் தலைமகளது குறிப்பறி யாமையின், அவனைக் கண்டிலள்போலக் கண்டாளென எதிர்கால த்தாற் கூறினாள். இதனை முகம்புக வுரைத்தலெனினும் குறிப்பறித லெனினுமொக்கும். (ரகக)

குறிப்பறிந்துகூறல்.

குறிப்பறிந்துகூறலென்பது-குறிப்பறிந்து முகங்கண்டு, அது வழியாகநின்று, யானை கடிந்த பேருவகையார் கையிற்றழுவுந் வளத்தகுமோ அது வுவளாமலியாம் அவரது குறைமுடிக வே ண்டாவோவெனத் தோழி நயப்பக கூறுநிற்றல். அதற்குச்செய் யுள்.

தவளத்தநீற ணியுந்தடந்தோளண்ணறன்னொருபா
லவளத்தனாமகனாந்தில்லையானன் றுரித்ததன்ன
வவளத்தயானைகடிந்தார்கரத்தகண்ணார்தழையுந்
துவளத்தகுவனவோசுரும்பார்குழற்றூமொழியே. (ரகஉ)

ஏழைக் கிருந்த ழை
தோழிகொண் டுலாந்த து.

(இ-ள்.) சுரும்பார்ந்த குழலையுடைய தூமொழியாய், வெண் மையையுடைய நீற்றைச் சாத்தும் பெரிய தோள்களையுடைய அ ண்ணலை, தனதொரு பாகத்துறையாகிய அவட்குத் தந்தையுமாய் ம கனுமாந் திலையான், அவன் அன்றுரித்த யானையையொக்குங் க வளத்தகையுடைய யானையை நம்மேல் வாராமற் கடிந்தவருடைய கைபவாகிய கண்ணிற்காருந் தழையும் வாடத்தகுவனவோ! ஒகா. எ-று.

தவளத்தநீறு கவளத்தயானையென்பன பன்மையொருமைமய க்கம். சிவதத்துவத்தினின்றுஞ் சத்திதத்துவந்தோன்றலின் அவள த்தனாமென்றும், சதாசிவதத்துவத்தினின்றுஞ் சதாசிவதத்துவந்தோ ன்றலின் மகனாமென்றும், கூறினார். "இம வான்மகட்குத் தன்னு டைக் கேள்வன் மகன் றகப்பல்,, என்பதனாலும் அப்பொருண் மேல் வந்தது. கவளத்தயானையென்பதனால் தான்விரும்புங்கவள மூண்டு வளர்ந்த யானையென்பதனாலும் கூறப்பட்டதாம். அது ஒ ருவாற்கட்டப்பட்டு மிடிபட்டதன்றாகலான், அதனை வெல்வதநி

து அப்படிப்பட்டபானையையும் வென்றவர், அங்ஙனம் பானை டிந்த பேருதவியார்கையனவுந் துவளத்தருவனவே வெல்றதலு ல், அவருள்ளமுந் துவளாமற் குறைமுடிக்கவேண்டுமென்பது குறிப்பாறகூறினாள். உய்மை-சிறப்பும்மை எனமகுளாத்தென வினையாயும். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு-அழுகையைச்சார்ந் தபெருமிதம். பயன்-குறைநயப்பித்தல். (ரடஉ)

வருத்துணர்த்தல்.

வருத்துணர்த்தலென்பது-உதவிகூறவும் பெருநாணினளாதலி ன் தலை வாங்க மாட்டாதுநின்ற, அக்குறிப்பறிந்து, நிருவகையா லும் நமக்குப்பழி சிறவும் அதுகிடக்க நமக்குதவி செய்தாற்கு நாமுமுதவிசெய்யமாறென்றேவினவத் தலைமகள் தலைவேற்கு மாறு வருந்துக்கூறுநிற்றல் எனக்கொள்க செய்யுள்.

எறும்பழிகாழ்ப்பற்றின்பற்றேலாவிடினமடன்மா *
வேறுமவனிடபங்கொடியேற்றிவந்தம்பலத்து *
ளேறுமரசுமன்னுமீங்கோய்மலைநமபழிமுடியுங்காய்ந் *
தேறுமலைதொலைந்தாற்கென்னையாருஞ்செய்வதேந்திழையே. ()

கடிச்கலைமொணர்ந்த காதற்றோ ழி
மடகொடிமாதர்க்கு வருத்துணர்த்துக.

(இ-ள்.) ஏந்திழாய், தலைவனையேற்றின் காமமேயொரு நட்பச் செய்காரொன்று பிறரிடத்து நமக்குப்பழி சிறவும், அதனினும்வலா தொழியின் பிறிதோருபாடமிலையென்று அவன் மடலாகிய மா வையேறாய். கருமவடிவாகிய இடபத்தைக் கொடியின்கண்வைத் து நமது பிறவித்துன்பத்தை நீக்க ஒருப்பட்டுவந்து, அப்பலத் தின்கணேறும் அரன்றங்கும் கங்கோய்மலையின் நமதுபெரியப ளத்தையழித்து நம்மைநோக்கி எற்றேறும் பலவிடையாறும் யானை யைத்தோற்பித்ததவற்கு யாஞ்செய்வதென்றோ! அதனை யானறிகி ன்றிலேன். எ-று.

மற்று- வினைமாற்று. மடன்மாவேறுமவனென்று தலைமேலா விடினும் பழியேறுமென்பது படக்கூறினமையானும், எறுமலை தொலைத்தாற்கென அவன்செய்த உதவிகூறினமையானும், தலை யேற்பதே கருமமென்பது படக்கூறினாளாம். அன்றியுந் தலை யேற்றால் நமக்கேறும்பழியை அறத்தொடு நிலைமுதலாயினகொ ண்டு தீர்க்கலாமென்றும், எலாவிடின் அவன் மடன்மாமையேறு தலான் வரும்பழி ஒன்றானுந் தீர்க்கமுடியாதென்றும், கூறியவா

ழியிற்று. வருத்துரைத்தல்-தழையேற்றலே கருமமென்று கூறு பமித்துச்சொல்லுதல். (ரா ௬௩)

தழையேற்பித்தல்.

தழையேற்பித்தலென்பது - தழையேலாதொழியினும் பழியேறுமாயிற் றழையேற்பதே காரியமென உட்கொண்டிருந்த, அக்குறிப்பறிந்து, இத்தழை நமக்கெளியதொன்றன்று இதனை யேற்றுக்கொள்வாயாகவெனத் தோழி தலைமகளைத் தழையேற்பியாநிற்றல். அதற்குச் செய்யுள்.

தெய்வவரைமெய்யெரிகாய்சிலையாண்டெனையாண்டுகொண்ட *
செய்வவரைமேனியன்சிற்றம்பலவன்செழுங்கையிலை . *
யவ்வரைமேலன்றியிலைகண்டாயுள்ளவாறருளா *
லிவ்வரைமேற்கிலம்பன்னெளிதிற்றந்தவிர்ந்தழையே. (ரா ௬௪)

கருங்குழன்மடந்தைக் கரும்பெறற்றோ ழி
இருந்தழைகொள்கென விருப்பிக்கொடுத்தது.

(இ-ள்.) நமமாட்டுண்டாகிய அருளான் இம்மலைக்கட் சிலம்பன் எளிதாகக்கொணர்ந்து தந்த வாடாத இதழ்தழை எளிய கைலை யாகிய அம்மலையிடத்தலது பிறிதோரிடத்தில்லை, இதனைக் கொள்வாயாக. எறு உள்ளவாறென்பது யான்கூறிய இது மெய்ம்மையென்றவாறு. பகைவரை மெய்யெரித்த வரையாகிய காய்சிலையைப் பணிகொண்டபின் என்னை யடிமைக்கொண்ட செய்வரைபோலுந் திருமேனியையுடையனாகிய சிற்றம்பலவனது செழுங்கைலையெனக்கூட்டுக.

மெய்யெரியென்பன ஒருசொல்லாய்த் தெய்வரையென்னும் இரண்டாவதற்கு முடிபாயின. மெய்யெரித்த காய்சிலை மெய்யெரி காய்சிலையென விரித்தொகையாயிற்று. காய்சிலை- சாதியடை. ஐகாரத்தை அசைநிலையாக்கித் தெய்வர்மெய்யெரித்தற்குக் காரணமாஞ்சிலையெனினுமமையும். வலியனவற்றை வயமாக்கிப் பயின்றபின் ,என்னையாண்டானென்பது போதர, காய்சிலையாண்டென்னையாண்டுகொண்டவென்றார். என்னைத் தனக்கடிமைகொள்ளுதல் காரணமாகப் பிறிதொன்றின் மேலிட்டுக்கல்லை வளைத்தான் என்னெஞ்சை வளைத்தல் காரணமாக அல்லது தனக்கொரு பகையுண்டாய்ச் செய்ததன்றுபோலும் என்பதுகருத்து. "கல்லை மென்கனியாக்கும் விச்சைகொண்டென்னை நின்கழற் கன்பனாக்கினையே" என்பதுமது. கைலைத்தழையை எளிதிற்றந்தானென்ற

நனான் வளரவு வேண்டியவளாந் தமர் மறுப்பின் வளர்ந்து கொள்ளுந் தாளாண்மையனென்பது கூறினளாம். கண்டாயென்பது முன்னிலையசைச்சொல். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-கையுறையேற்பித்தல். (ரஅச)

தழைவிருப்புணர்த்தல்.

தழைவிருப்புணர்த்தலென்பது-தலைமகளைத் தழையேற்பித்துத் தலைமகனுழைச்சென்று, நீநந்த தழையை யான்வ ளர்ந்து கொடுத்தேன் அதுகொண்டு அவள் செய்கை சொலவிற் பெருகுமெனத் தலைமகளது விருப்பங் கூறுநிற்றல். அற்குரு செய்யள்.

பாசத்தளையறுத்தாண்டுகொண்டோன்றிலைப்ப பலஞ்சூழ் *
தேசத்தனசெம்மனிநந்தனசென்றிபான்கொடுத்தேன் *
பேசிற்பெருகுஞ்சுருங்குமருங்குலபெயர்ந்தவாத்துப் *
பூசிற்றிலளன்றிச்செய்யாதனவில்லைபூந்தலைழ நீயே. (ரஎரு)

விருப்பவ டேர ழி
பொருப்பற் குரைத்த து

(இ-ள்.) பாசமாகிய தளையிற்பட்டுக் கிடப்ப அத்தளையறுத்துத் தனக்குக் குற்றேவல்செய்ய என்னை யடிமைக்கொண்டவனது நிலைலயம்பலத்தைச் சூழ்ந்த தேசத்தின்கணுள்ளன, அச்சிறப்பேயன்றி, செம்மாள், நின்னாற்றரப்பட்டன, அவற்றைச்சென்று யான் கொடுத்தேன், கொடுப்ப, ஆண்டு நிகழ்ந்தனவற்றைச் சொலவுவேணாயிற் பெருகும், சுருங்கிய மருங்குலையுடையாள் அப்பூந்தழைய அரைத்துத் தன்மேனியெங்கும் பூசிற்றிலளல்லது பெயர்த்துச்செய்யாதனவில்லை. எ-று.

என்றது-இவை வாடுமென்று கருதாது அரைத்துப்பூசினாற் போலத் தன்மேனிமுழுதும் படுத்தாள். எ-று. பெயர்த்தென்பது பெயர்த்தெனமெலித்து நின்றது. பிசைந்தனரைத்தென்று பாடமோதுவாருமுளர். மெய்ப்பாடு-உவகை. பயன்-தலைமகனையாற்றுவித்தல். (ரஎரு)

சேட்படைமுற்றிற்று.

பகற்குறி.

பகற்குறியென்பது-தலைமகளைத் தழையேற்பித்ததோழி தலைமகனுடன் அவளைப் பகற்குறிக்கட் டலைப்பெய்வியாநிற்றல்.

அதுவருமாறு,—சூத்திரம். குறியிடங் கூறலாடிடம் படர்தல், குறியிடைச் சேறலிடத்துய்த்து நீங்க, ஒருவற்கு ஒரைத்தலொடு

மருங்கணை தல்லே, யறிவறி வித்தலையுண் மகிழ்த, லாயத் துய்த்த சீறுழி வந்து கூடலாடிடம் புகுதறனிகண் மொதாத, நடமெ ன் மூலையாள் பருவங் கூறி, வரவு விலக்கன் வரைவுடம்ப டாது, மிகுத்து ரைத்தலொடு மெய்ம்மை யுரைத்தல், வருத்தங் கூ றாயச்சங்கூற, விற்செறிவறிவித்த றமரிணை வுரைத்த, லெதிர் கோள் கூற லேறுகோள் கூற, லேதிலார் தம்மூர கூற லவளொ டுகூறுவாள் போன்று தினைமுதிர் வுரைத்தல், பகல்வரல் விலக்கல் பைபு லொய்தித், தினையொடு வெறுத்தல் சிறைப்புற மாக, வேங் கையொடு வெறுத்தல் வெற்பமர் நாடற்குச், கழுமலுற் றிரங்கல் கடிப்புனங் கையறக, கொய்தமை கூறல் பிரிவருமை கூறல், ம யிலொடு கூறல் வறும்புனங் காண்டல், பயில்பதி நோ கிப் பதி யிகழ் வாடல், சொன்னாள லெட்டுந் தோன்று மியற்கை, மன்னிய பகற்குறி வகையா லும்மே.

(இ-ள்.) குறியிடங்கூறல்- ஆடிடம்படர்தல்-குறியிடத்துக்கொ ண்டுசேறல்- இடத்துய்த்துநீங்கல்-உவந்துரைத்தல்- மருங்கணை தல்-பரங்கியறிவுரைத்தல்-உண்மகிழ்ந்துரைத்தல்- ஆயத்துய்த்தல்- தோழிவந்து கூடல்-ஆடிடம்புகுதல்- தனிகண்டுரைத்தல்-பருவங் கூறிவரவுவிலக்கல் - வரைவுடம்படாதுமிகுத்துக்கூறல் - உண் மைகூறிவரைவுகடாதல் - வருத்தங்கூறிவரைவுகடாதல் - நாயச்சி ங்கூறிவரைவுகடாதல்- இற்செறிவறிவித்துவரைவுகடாதல்- தமர்தி ணைவுரைத்துவரைவுகடாதல் -எதிர்கோள்கூறிவரைவுகடாதல்-ஏறு கோள்கூறிவரைவுகடாதல்- ஆயனுரையுரைத்துவரைவுகடாதல்- தி ணைமுதிர்வுரைத்துவரைவுகடாதல்- பகல்வரல்விலக்கிவரைவுகடாத ல்-தினையொடுவெறுத்துவரைவுகடாதல்- வேங்கையொடுவெறுத் துவரைவுகடாதல்- மிரக்கமுற்றுவரைவுகடாதல்- கொய்தமைகூறி வரைவுகடாதல்-பிரிவருமைகூறிவரைவுகடாதல்-மயிலொடுகூறிவ ரைவுகடாதல்- வறும்புனங்காண்டலிவருந்தல்- பதிநோகிவருந்தல் என விவ்வெழுப்பத்திரண்டும்பகற்குறியாம். எ-று. அவற்றுள்,—

குறியிடங்கூறல்.

குறியிடங்கூறலென்பது - தலைவிருப்புரைத்த தோழி ஆங்க வள் விளையாடிடத்து ஒருதரிபபிபாழில் சுதிரவன் றுழையாவி ருளாய் நடுவண் ஓர் பளிக்குப்பாறையை யுடைத்தாயிருக்கும் அ வ்விடத்து வருவாயாகவென்று தலைமகனுக்குக் குறியிடங்கூறுநி ற்றல். அதற்குச்செய்யுள்.

வானுழையாளம்பலத்தான்சுன்றென்றுவட்கிவெய்யோன் *
றானுழையாவிருளாய்ப்புறநாப்பண்வண்டாரகைபோற் *

தேனுழைநாகமலர்த்துதிகழ்பளிங்கான்மதியோன்
கானுழைவாழ்வுபெற்றுங்கெழில்காட்டுமொர்கார்ப்பொழிலே.

வாடிடத்தண்ணல் வண்டழையெதிர்ந்தவ ள்
ஆடிடத்தின்னியல் பறியவுணர்த்த து.

(இ ள்.) ஒரு கரியபொழில், புறமெங்கும் கதிரோன் சென்று நுழைபாதவிருளாய், நறுவண் வளவிய வான்மீன் போலத் தேன்கள் நுழையும் நாகப்பூ மலர்ந்து, திகழும் பளிங்காற் றிங்கட்கடவுள் வானிடத்துவாழ்வையொழிந்து கானிடத்து வாழ்வைப் பெற்றுற்போலத் தனதெழிலைப் புலப்படுத்தும். எ-று இருட்கு அப்பாலாகிய வானிடத்துண்டாகிய ஒளி, இவ்வணஞ் சேயனாயினும் அணியனாய் அம்பலத்தின்கணுளனாகிய அரன், அவனது மலையென்று கூசினாற்போல வெய்யவன் நுழையாவெனக் கூட்டுக.

"அண்ட மாரிரு ளூடு கடந்தும்ப-ருண்டு போலுமோரொண் சுடர்,, என்பதனாலும் அப்பொருண்மேல் வந்தது வட்கியென்பதனால் முன் பற்பதியுண்டானதல் விளங்கும். வானுழைவாரென்பதற்குக் கற்பவிறுதிக்கண் தோன்றிய முறையானே வான் சென்றொடுங்கும் ஒளியென்றுரைப்பாருமுளர். பறம் இருளாயெனவும், நாகமலர்த்தெனவும், சினை ' னை முதன்மேலேறி நின்றன. பறம் இருளாயென்பது இடத்து நிகழ்பொருளின்வினை இடத்தின் மேலேறி நின்றது. இது குறிப்பெச்சமாதலான், ஆண்டு வாவென்பது கருதது. மெய்ப்பாடு-உவகை பயன்-குறியிடமுணர்த்துதல்.

ஆடிடம்படர்தல்.

ஆடிடம்படர்தலென்பது - தலைமகளுறுகுறி குறியிடங் கூறினதோழி யாம் புனத்தின்கட்போய் ஊசலாடி அருவியேற்றுவிளையாடுவேம் போதுவாயாகவெனத் தலைமகனை ஆயத்தொடுங் கொண்டுசென்று ஆடிடம் படராதிற்றல். அதற்குச்செய்யுள்.

புயல்வளருசனமுன்னுடிப்பொன்னேபின்னைப் போய்ப்பொலிய
மயல்வளர்குன்றினின்றேற்றுமருவிதிருவுருவிற் *
கயல்வளர்வாட்கண்ணிபோதருகாதந்தீர்த்தருளுந் *
தயல்வள்ர்மேனியனம்பலத்தான்வரைத்தண்புனத்தே. (ரா-ன)

வண்டழையெதிர்ந்த வொண்டொடிப்பாங் கி
நீடமைத்தோளியொ டாடிடம்படர்ந்த து.

(இ-ள்.) பொன்னே, பிறவி காரணமாக வருமச்சத்தை நீக்கி அ

ருள்செய்யுந் தையல் தங்குந்திருமேனியை யுடையவளாகிய அம் பலத்தானது மலையிற் குளிர்ந்த புனத்தின்கட் புயல் தங்குமுதலை மூன்றாடி, பின்போய், அதற்கயலாகிய பொலியும் உயர்ந்த குன்றின்கணின்று அருவியை எற்போய், திருப்போலும் உருவினையும் கயல்போலும் வாட்கண்ணையுமுடையாய், நீ போதுவாயாக. எ-று.

உயர்ந்தவழை மரத்திற் றொடுத்தலால், புயல்வளருசலென்றாள். வளர்கணெனவிகையையும். ஈண்டு வளரென்பது உவமையுருபு. வான்- உவமை ஒளியெனினுமமையும் தண்புனத்துப் போதருவென இயைப்பினுமமையும். மெய்ப்பாடு- பெருமிதம், உவகையுமாம். பயன்-குறியிடத்துப்போதருதல். (௧௬௭)

குறியிடத்துக்கொண்டுசேறல்.

குறியிடத்துக்கொண்டுசேறலென்பது- ஆடிடம்படர்ந்த தோழி தலைமகனுக்குத் தான்சொன்ன குறியிடத்து இவளைக்கொண்டு சென்றாய்காரும்பொழுது, ஆயத்தாரைத் தம்மிடத்தினின்று நீக்க வேண்டுதலின் தினைகாத்தல் முதலாகிய விளையாட்டுக்களைத் தான் கூறவே அவ்வவ்விளையாட்டிற்குரியார் தலைமகள் அவ்வவ்விடங்களிலே வருவளென்று கருதித் தோழி சொன்னவாறே அவ்வவ் விளையாட்டிலிருப்பினுள் எல்லாரும் பிரிவர் அவ்வகை ஆயவெள்ளத்தைப் பிரித்து, தமியளாய் நின்ற தலைமகளையுங்கொண்டு, யாமும்போய் மயிலாடலகாண்பேமென அக்குறியிடத்துச் செல்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தினைவளங்காத்துச்சிலம்பெதிர்கூவுச்சிற்றின்முற்றிழைத்துச் *
சுனைவளம்பாய்ந்துதுணைமலர்கொய்துதொழுதெழுவார் *
வனைவளநீறெழநீறணியம்பலவன்றன்வெற்பிற் *
புனைவளர்கோம்பரன்னாயன்னகாண்டும்புனமயிலே. (௧௬௮)

அணிவளராடிடத் தாயவெள் ள
மணிவளர்கொங்கையை மருங்கல்ற்று.

(இ-ள்.) தொழாநின்று துயிலெழுவாருடைய வினையினது பெருக்கம் பொடியாகத் தன்திருமேனிக்கண் நீற்றையணியும் அம்பலவனது வெற்பிற் கைபுனையப்பட்ட வளர்கொம்பையொப்பாய், தினையாகிய வளத்தைக் காத்து, சிலம்பிற் கெதிரழைத்து, சிற்றிலைமிகவுமிழைத்து, சுனைப்புனலிற் பாய்ந்து ஒத்தமலர்களைக்கொய்து, அத்தன்மையவாகிய புனமயிலைக் காண்பேம் யாம் எ-று.

மலைக்கு வளமாதலானுக்கித் தினைவளமென்றாள். தினையினதுமிகுதியெனினுமமையும். தொழுதெழுவாரென்றது துயிலெழுந்

காலத்தல்லது முன்னுணர்வின்மையான் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார். எ-று. நீறணிந்தகோலம் நெஞ்சம் பிணிக்குமெழிலுடைமையான் அக்கோலத்தொழுகுவாருள்ளத்து நீங்காது நிற்றலான் ஆண்டுள்ளவினை நீறாமென்னுங்கருத்தான், வினைவளநீ லெழநீறணிபம்பலவெனன்றார். புதல்வனது பிணிக்குத் தாய் மருந்துண்டாற்போலத் தொழுதெழுவார் வினைக்குத் தாவீறணிந்தானென்பாருமுளர். வெற்பினென்புழி வெற்பைத் தினைகாத்தல் முதலாகிய தொழிற்கு இடமாகவுரைப்பினுமமையும். அத்தன்மையனாகிய மயிலென்றது பொருளதிகாரத்திற்கூறப்பட்ட தலைமகன் வாரறியாவாய் நின்று கண்டமயில். இயற்கைப்புணர்ச்சியதிறுதி மடலேறுதலை தனதுவாட்டத்தைவினவியபோது யாமேநிளமயிலை அதனை கண்டேன் அதனை நீயுங்காணப் பெற்றிலையென வாடினேன் மன்னறு உரைப்பக் கேட்டாளாதலான், அதனைப்பற்றி அம்மயிலைக் காண்டுமெனிருளாயிற்று. மெய்ப்பாடு - அது. பயன்-ஆயம்பிரிதல். (௩௬௮)

இடத்துய்த்துநீங்கல்.

இடத்துய்த்துநீங்கலென்பது - குறியிடைக் கொண்டு சென்று கோழி யான் அவ்விடத்துச்சென்று நின்குழற்குப் பூக்கொய்து வருவேன் அவ்விடம் வேய் முத்துதிர்கலான் நினதுமெல்லடிகளுத் தகாதாதலான் நீ என்னோடு வாராது இங்கேநின்று பூக்கொய்வாயாகவெனத் தலைமகளைக் குறியிடத்துநிறுத்தித் தானீங்கநிற்றல். அதற்குச் செய்யுள்.

நாலவேயினநினதோட்குடைந்துக்கநன்முத்தஞ்சிந்திப் *
பாலவேயறைபுறைக்கும்பஞ்சடிப்பரன்றிலையன்றாய் *
வாலவேய்கருவனிங்கேநிலுங்கேசென்றுன்வார்குழற்கீர்ந் *
குரலவேயளிமுரல்கொங்கார்தடமலர்கொண்டுவநமே (௩௬௯)

மடத்தகைமாதரை யிடத்தகத்துய்த் து
நீங்கலுற்ற பாங்கியகர்ந்த து.

(இ-ள்.) யான் அவ்விடத்தேசென்று தேனுணிரிய பூக்கொத்தை மூடிய அளிகள் மூரலுந் தாதுநிறைந்த பெரியமலர்களைக் கொய்துகொண்டுவந்து நின்னுடைய நெடியகுழற்கண் வேய்வேன், பானது நில்லையையொப்பாய், காற்றானென்றோடொன்று தேய்ந்து நாளும் வேய்த்திரள் உன்னுடைய தோள்களைஞ்சிப் பிளத்தலான் உக்கதல்ல முத்துக்கள் சிதறுதலாற் பால் மூடிய பாறை

நினது பஞ்சடிக்கணுறைக்கும், அதனான் என்னோடு ஆண்டு வரப் பாலையல்லை, ஈண்டு நிற்பாயாக. எ-று.

யான்றரு ன் நீ வேயென்றும் பிறவாற்றானு முளாப்பாருமுளர் சூரலென்றது பூங்கொத்தை. தடமலரென்பதற்குத் தடத்து மலரென்றுரைப்பாருமுளர். பரல்வேயறையுறைக்கும் வரல்வேய் தருவனிக்கேதிலவென்றாள் தலைமகளைத் தோழி கூறி இவ்விடத்தே நிலவென்றாள். மெய்ப்பாடு- அது. பயன்-தலைமகளைக் குறியிடத் துய்த்துநீங்குதல். (ரா.கூ)

உவந்துணைத்தல்.

உவந்துணைத்தலென்பது-தோழி தலைமகளைக் குறியிடைநிறுத்தி நீங்கா நிற்பத் தலைமகன் சென்றெதிர்ப்பட்டு, இக்குவட்டுட மாசுணப்பள்ளியாகவும் என்னைத் திருமாலாகவும் நினைந்தோ நீயிப்பொழிற்கண் வந்து நின்றதெனத் தலைமகளை உவந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

படமாசுணப்பள்ளியிக்குவடாக்கியப்பங்கயக்க *
ணெடுமாலெனவென்னை நீநினைந்தோநெஞ்சத்தாமரையே *
யிடமாவிருந்தனுற்றோரில்லைநின்றவனீர்ங்கயிலை *
வடமார்முலைமடவாய்வந்துவைகத்தியிவர்பொழிற்கே. (ரா.உ)

சனிமயிற்சாயலை யொருகிறைக்கண் ட
ஒளிமலர்த்தாமோ னுவந்துணைத்த து.

(இ-ள்.) வடமார்ந்த முலையையுடையமடவாய், இலைக்கணின்றவனது குளிர்ந்த கைலைக்கண் நீண்ட இப்பொழிலிடத்துவந்து தங்கியது, இக்குவட்டைப் படத்தையுடைய மாசுணமாகியபள்ளிபாக்கி என்னை அம்மாசுணப்பள்ளியிற் றங்கும் பங்கயம் போலுங் கண்ணையுடைய அந்தெடிய மாலென்று நீநினைந்தோ! நெடுமாலின் மார்பினன்றித் தாமரையினு மிருத்தலான் யான் நீங்கினும் என்னெஞ்சமாகிய தாமரையே நினக்கிடமாக இருக்க நினைந்தோ? கூறுவாயாக எ-று.

மாசுணப்பள்ளி- மாசுணத்தானியன்ற பள்ளியெனினுமமையும். என்னெஞ்சுத் தாமரைக்கணிருக்கலுற்றோவென்றதனான், இப்பொழிற்கண்வந்து நின்றநிலை ஒருஞான்றும் என்னெஞ்சினின்று நீங்காதென உவந்துகூறினாளும். கைலைமடவாயென்றியைப்பினுமமையும். வான்பொழிலென்பதனுமாம். மெய்ப்பாடு- உவகை. பயன்-தலைமகளைக்கண்டு தன் காதன்மிகுதியாற் றோன்றிய பேருவகைகைய ஆற்றல்லான் ஆற்றுதல், தலைமகளை மகிழ்விக்கலுமாம். (ரா.உ)

மருங்கணைதல்.

மருங்கணைதலென்பது - உவந்துரைப்பக் கேட்ட தலைமகள் பெருநாணினளாதலிற் கண்புதைத்து ஒருகொடியினொதுங்கி வருந்தாநிற்ப, சென்றுசார்தலாகாமையிற் றலைமகன் அவ்வருத்தந் தணிப்பான்போன்று, முலையொடுமுனித்து அவளிதுமருங்குறுங்கி யணையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தொத்தீன்மலர்ப்பொழிற்றில்லைத்தொல்லோனருளென்னமுன்னி
முத்தீன்குவளைமென்காந்தளின்மூடித்தன்னேரளப்பா *
ளொத்தீர்ங்கொடியினொதுங்குகின்றாண்மருங்குன்னெருங்கப் *
பித்தீர்பணைமுலைகாளென்னுக்கின்னும்பெருகின்றதே. (௧௨௬)

வாணுதலரிவை நாணுதல்கண் ட
கோதைவேலவ னுதாவுரைத்த து.

(இ-ள்.) கொத்துக்களையீனு மலர்ப்பொழிலையுடையதில்லையிற் றொல்லோனதருள்போல வந்தெதிர்ப்பட்டு, கண்ணீர்த்துளியாகி யமுத்தைவிடாநின்ற கண்ணாகிய குவளைகளைக் கையாகிய மெல்லி யகாந்தட்பூவான்மூடி அதனோடுசார்த்தி, தன்னெழிலை யளவிடுவா ன்போன்று, குளிர்ந்தகொடியின்கண் நாணி மறைகின்றவளது மருங்குலடர்ப்புண்ண, பித்தையுடையீர் பணைமுலைகாள், தம்பெருமைமேல்இன்னுநீர் பெருக்கின்றதெற்றிற்கு! இதுநன்றன்று. எ-று

தமக்காதாரமென்று கருதாது அடர்க்கின்றமைநோக்கி, பித்தீரென்றான். பெருக்கின்றதெற்றிற்கு நீர் பித்தையுடையீரென வினைக்குநீப்பு முற்றாகவுரைப்பினுமமையும். இவ்வாறு தானுதாவுரைத்து இறுமருங்கு றுங்குவானாய்ச்சென்று சாருமென்பது. ஈன்கொடி ஈன்பணைமுலை என்பனவும் பாடம். ஈன்கொடி - மலரீன்ற கொடி. அரிவையையென்பதுபாடமாயின் நாணுதல்கண்ட வென்பனவற்றை ஒருசொல்லாக்கிமுடிக்க. மெய்ப்பாடு-அது. பயன்-சார்தல். (௧௨௬)

பாங்கியறிவுரைத்தல்.

பாங்கியறிவுரைத்தலென்பது-மருங்கணைவிறுதிக்கட் டலைமகளை தைபந்தீர், அவளைக்கோலஞ்செய்து, இதுநின் றோழிசெய்தகோலமே நீகலங்காதொழிகெனத் தலைமகன், தான்றோழியொடு தலைப்பெய்தமைதோன்றக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

அளிநீடலகத்தினட்டியகாதுமணியணியு *
மொளிநீள்சுரிகுழற்சூழ்ந்தவொண்மாலையுந்தண்ணறவுண் *
களிநீயெனச்செய்தவன்கடற்றில்லையன்னாய்கலங்க *
தெளிநீயனையபொன்னேபன்னுகோலத்திருநுதலே. (௩௨௨)

நெறிசூழ்ந் பாங் கி
யறிவறி வித்த து.

(இ-ள்.) நீ ஞளிர்ந்தநறவையுண்ணுங் களிமகனென்றுபிறர்சொல்லும்வண்ணம் ஓரின்பத்தை யெனக்குச்செய்தவனது கடலையுடைய தில்லையையொப்பாய், அளிகள் விடாதுதங்குமளகத்தின்கண் இட்டநாதும், அணிந்தவணிகளும், ஒளியையுடைய நீண்டசுரிகுழலிடத்துச்சுற்றியதலைமாலையும், இவையெல்லாம்நின்னோடொருதன்மையளாகிய நின்றோழி யாராய்ந்து செய்யக்கோலமே நிருநுதலாய், யான்பிறிதோர் கோலஞ்செய்தேனென்று கலங்கவேண்டா, தெளிவாயாக. எ-று.

தண்ணறவுண்களி நீயெனச்செய்தவனென்பதற்குப் பிறிதுரைப்பாருமுளர். பொன்னேயென்னுமேகாரம்- பிரிநிலையேகாரம். அணிமணியுமென்பதுஉம்பாடம். பாங்கியறிவு-பாங்கியல்வொழுக்கத்தை யறிந்தவறிவு. மெய்ப்பாடு- பெருமிதம். பயன்- பாங்கியறிந்தமை தலைமகட்குணர்த்துதல். (௩௨௨)

உண்மகிழ்ந்துரைத்தல்.

உண்மகிழ்ந்துரைத்தலென்பது - பாங்கியறிவுரைப்பக்கேட்ட தலைமகள், இனிநமக்கொரு குறையில்லையென வுட்கொண்டு முகமலராநிற்ப, அம்முகமலர்ச்சிகண்டு, அவளைக் கழுநீர்மலராகவும், தான் அதனினறவைப்பருகும் வண்டாகவும்புனைந்து, தலைமகன்றன்னுண்மகிழ்ந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

செழுநீர்மதிக்கண்ணிச்சிற்றம்பலவன்திருக்கழலே *
கெழுநீர்மையிற்சென்றுகிண்கிணிவாய்க்கொள்ளுங்கள்ளகத்த *
கழுநீர்மலரிவள்வானதன்கண்மருவிப்பிரியாக் *
கொழுநீர்தரப்பருகும்பெருநீர்மையனிகுலமே. (௩௨௩)

தண்மலர்க் கோதை யை
யுண்மகிழ்த் துரைத்த து.

(இ-ள்.) வளவியநீர்மையையுடையமதியாகிய கண்ணியையுடைய சிற்றம்பலவனது திருக்கழல்களையே பொருந்து நீர்மையான்

உண்மலிந்த முகமலர்வதுபோலவு, பொதுவிய நிலைமையைவிட்டு மலராம் நிலைமையையடைந்து சிறிதே மலர்தலொடுங்குந்தேனை யகத்துடைய கழுநீர்மலர் இவள், யான் அகக்கழுநீர்மலர்கண் மருவி ஒருகாலும்பிரியாத கொழுவியநீர்மையையுடைய அந்தநலவைப்பருகும் பெருந்தன்மையையுடைய தோரளிசாதி எ-று.

செழுநீர்மறிக்கண்ணி யென்பதற்கு வளவியநீர் மறியாகிய கண்ணியுமென்பாருமுளர். திருக்கழுமலே யென்னு மமரரம் பிரிதிலையேகாரம். செழுநீர்மையையுடைய கழுநீர்மலரொன்றிலையப்பிறிதுமமையும். சென்று கிண்கிணிவாய்க்கொள்ளு மமன்பதனாலே தைப்பருவங்கடந்து இன்பப்பருவந்தந்தாயினாளென்பது விளங்கும். கள்ளகத்தவென்பதனால், புலப்படா துண்ணிறைந்த காதலென்பது விளங்கும். கள்ளகத்தகழுநீர் மலரென்பது - காலுருகெச்பது போலநின்றது. பெயரொச்சமெனினு மமையும். யான் மருவிப்பிரியாத அளிகுலமெனினுமமையும். நறு-குறுகிநின்றது. பெருநீர்மையளிகுலமென்றால், கழுநீர்மலரலர்தலாலமையின். அதனால், பிறிதோரிடத்துந் தன்னுள்ளஞ்செல்லாமை விளங்கும். மெய்ப்பாடு-உவகை. பயன்-நயப்புணர்த்தலால். (௩௬௬)

ஆயத்துய்த்தல்.

ஆயத்துய்த்தலென்பது-மலரளிமேல்வைத்து மகிழ்வுற்றுப்பிரியலுறுநின்றதலைமகன், யாமித்தன்மையேமாதலின், நமக்குப்பிரிவிலலை, இனியழகிய பொழிலிடத்து விளையாடிம் ஆயம் பொலிவுபெறச்சென்று, அவரோடுசேர்ந்து விளையாடுவாயெனத் தலைமகளையாயத்துச்செலுத்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கொழுந்தாரகைமுகைகொண்டலம்பாசடைவிண்மமிவி *
லெழுந்தார்மதிக்கலமெழிறந்தெனவிப்பிறப்பி *
லழுந்தாவகைவெனையாண்டவுல்சிற்றம்பலமனையாய் *
செழுந்தாதவிழ்பொழிலாயதனுள்சேர்கதிருந்தனவே. (௩௬௭)

கனைகடலன்ன கார்மயிற்கணத்து ப்
புனைகடமாளைப் புகவிட்ட து.

(இ-ள்.) இப்பிறவியின்கணழுந்தாதவண்ணமென்னையடிமைக்கொண்டவனது சிற்றம்பலத்தை யொப்பாய், கொழுவியதாரகையாகிய முகையைக் கொண்டலாகிய பசியவிலையையு முடையவிண்ணாகிய மதிவின்கண் எழுந்து நிறைந்த மதியாகியவெண்டாமரைப்பூத்தனை தெழிலப் புலப்படுத்தி நிற்பவோலவளவியதாதவி

மூரலின்றபொழிற்கண் விளையாடுகின்ற ஆயத்தின்கட்பொலிவுதக இனிச்சேர்வாயாக எ-று.

மூகையோடு தாரகைக்கொத்தபண்பு-வெண்மையும்வடிவும் பன்மையும். தாரகையோ டாயத்தார்க் கொத்தபண்பு- பன்மையும் ஒன்றற்குச்சுற்றமாய் அதனிற்றாழ்ந்துநிற்றலும். கமலத்தோடுமதிக்கொத்தபண்பு-வெண்மையும்வடிவும் பொலிவும். மதியோடு தலைமகட்கொத்தபண்பு-கட்கினிமையும் சுற்றத்திடை அதனின் மிக்குப்பொலிதலும். இவ்வாறொத்தபண்பு வேறுபடுதலான் உவமைக்குவமை யாகாமையறிந்துகொள்க. கொண்டலம் பாசடையென் புழி, அம்மூச்சாரியை யல்லழிக்கண்வந்தது அம்-அழகெனினுமமையும். புனைமடமான்-கைபுனையப்பட்டமான். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-புறத்தாரறியாமைப்பிரிதல். (௩௨௬)

தோழிவந்துகூடல்.

தோழிவந்துகூடலென்பது-தலைமகனைப்பிரிந்த தலைமகடானும்பூக்கொய்யாநின்றாளாகப் பிரிவாற்றாமையானும் பெருநாணினாலுந்தடுமாறி மொட்டுக்களைப்பறியாநிற்ப, யானின் குழற்காம்பூக்கொண்டுவந்தேன், நீ விரல்வருந்த மொட்டுக்களைப்பறிக்கவேண்டாவெனத் தோழிவந்துகூடாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொன்னனையான்றில்லைப்பொங்கரவம்புன்சடைமிடைந்த *
மின்னனையானருண்மேவலர்போன்மெல்விரல்வருந்த *
மென்னனையாய்மறியேபறியேல்வெறிபார்மலர்க *
ளின்னனையான்கொணர்ந்தேன்மணத்தாழ்குழற்கேய்வனவே. ()

நெறியுறுகுழலியை நின்றிடத்துய்த்து ப்
பிறைநுதற்பாங்கி பெயர்ந்தவட்குரைத்த து.

(இ-ள்.) அசைந்தமான்மறிபோல்வாய், பொன்னையொப்பான், தில்லைக்கணுளனாகிய வெகுளாநின்ற வரவம் புல்லிய சடைக்கண்மிடைந்த மின்னையொப்பான், அவனதருளைப் பொருந்தாதாரைப் போல, மெல்லியவிரல்கள்வருந்த, மென்னரைகளைப் பறியாதொழிவாயாக, நின்மணந்தங்கியகுழற்குப் பொருந்துவனவாகிய நறுநாற்றநிறைந்தமலர்க ளித்தன்மையனவற்றை யான்கொணர்ந்தேன். எ-று.

மிடைந்தவென்னும்பெயரெச்சம் மின்னையானென்னுநிலைப்பெயர்கொண்டது. அரவஞ்சடைமிடைதலைமின்மேலேற்றி, இ

ல்பொருளுவமையாகவுரைப்பாருமுளர். இல்பொருளுவமையெனினும் அபூதவுவமையெனினு மொக்கும். இவள்மலரைப்பறியாமல் மொட்டைப்பறிப்பானேனென்பதுகடா. அதற்குவிடை- இவள்தலைமகனைப்பிரிந்துஅப்பிரிவாற்றாமையாலும், தலைமகன்புணர்ச்சிநிகழ்தற்குக்கட் டன்னைக்கோலஞ்செய்த அக்கோலத்தைத்தோழி காணுறின்றாளென்றும் பெருநாணினாலும் ஆற்றாளாய், மலரைப்பறிக்கின்றவள் மயங்கி மொட்டைப் பறித்தாளென்பதாம். மெல்லியமொட்டுக்களைப்பறியாதொழி, இத்தன்மைய நறுமலரை நின்குழற்கணிதற்கு யான்கொணர்ந்தேனென்பதனால், இவ்வொழுக்கம் யானறியப்பட்டதுகாணென் றுடம்பாடு கூறியவாறாயிற்று. என்னையாய் கொணர்ந்தே னென்பதனாலும்பாடம். நின்றிடத்துப்பத்து-இடத்துப்பத்துநீக்கிநின்று.பெயர்ந்து-மீண்டுசென்று. ()

ஆடிடம்புகுதல்.

ஆடிடம்புகுதலென்பது-கொய்துவந்தமலருங்குழற்கணிந்து, இனி நின்றிறமருங்குல்வருந்தாமல் மெல்லச்செல்வாயாகவெனத் தோழி தலைமகளையுங்கொண்டு ஆடிடம்புகாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அறுகாலிறைமலைரம்பானிறையணிந்தேனணியார் *
அறுகான்மலர்த்தொத்துத்தோகைதொல்லாயமெல்லப்புகுக *
சிறுகான்மருங்குல்வருந்தாவகையிகவென்சிறத்தி *
னுறுகால்பிறர்க்கரியோன்புலியூரன்னவொன்னுதலே. (ாஉ.)

தனிவிளைபாடிய தாழ்குழற்றோழி
பனிமதிநுதலியொ டாடிடம்படர்ந்தது.

(இ-ள்.) என்றலைக்கணுற்றகால் பிறர்க்குமிகவரியவனது புலியூரை யொக்குமொன்னுதலாய், அழகார்ந்த நெருங்கிய நறுநாற்றத்தையுடையமலர்க்கொத்துக்களை வண்டுகணிறைந்த மலையுடைய நின்னம்பாற்கண் நிறையவணிந்தேன், தோகையையொப்பாய், சிறியவிடத்தையுடைய மருங்குல் வருந்தாதவண்ணம் பழைய நாகிய ஆயத்தின்கண் மெல்லப்புகுவாயாக. எ-று.

'அறுகாலிறைமலையணிந்தேனென்றும், மலர்க்கொத்துக்களையுடைய தோகாயென்றும், உரைப்பாருமுளர். நிறையவென்பது குறைந்துநின்றது. காலென்னுஞ்சினை - பிறர்க்கரியோனென்றதன் விளைக்கேலாவெழுத்துக்கொண்டது.இவையிரண்டுக்குமெய்ப்பாடு- பெருமிதம். பயன்-தலைமகளையாற்றுவிக்கிக்கூறல். ()

தனிக்கண்டோத்தல்.

தனிக்கண்டோத்தலென்பது- தலைமகளையாயத்துய்த்துத் தலைமகனுடைச்சென்று, இஃதெம்மூர், இதன்கண்யாமருந்துந் தேனையுந் கிழங்கையு நீயுமருந்தி, இன்றெம்மோடுதங்கி, நாளைநின் னூருக்குப்போவாயாகென வுலகியல்கூறுவாள்போன்று, வரைவுபயப்பக்கூறுதற்றால் அதற்குச்செய்யுள்.

தழங்குமருவியெஞ்சீறூர்பெருமவிழுமதுவுங் *
கிழங்குமருந்தியிருந்தெம்மொடுன்றுவிளர்ந்துகுன்றர் *
முழங்குங்குரவையிரவிற்கண்டேகுமுதுதன்முதலி *
வழங்கும்பிரானெரியாடிதென்றிலைமணிநகர்க்கே. (௧௨௭)

வேயொத்ததோளியை யாயத்துய்த்து
ஞானிசிலையண்ணலைத் தனிக்கண்டுரைத்தது.

(இ-ள்.) பெருமழங்கானின்றவருவிவையுடைய விஃதெம்சீறூர், இதன்கண் யாமருந்துந் தேனையுங்கிழங்கையு நீயுமருந்தி, இன்றெம்மோடுதங்கி, குன்றவெல்லாருமெழுந்து முழங்குமிந்நிலத்து விளையாட்டாகிய குரவையையிரவிற்கண்டு, நாளை நினதூரல்லதாகக்கேகுவாயாக. எனவு இயல்பாகவே முதற்றன், முதற்றியை யேற்பார்க்கு வழங்குமுதல்வன், ஊழிதீயின்கணுளான், அவனதுதெற்கின்கட்டிண்ணையாகிய மணிநகரெனக்கூட்டுக.

ஏற்பார்மாட்டொன்றுங்கருதாதுகொடுத்தலின் வழங்குமென்றார் உலகியல் கூறுவாள்போன்று ஒருகாலீவந்துபோந்துணையாவிளாற்றுந்தன்மையளல்லளென்பதுபயப்பக்கூறி, வரைவுகடாயவாறு மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-குறிப்பினாற்பிரிவாற்றாமைகூறிவரைவுகடாதல். (௧௨௭)

பருவங்கூறிவரைவுவிலக்கல்.

பருவங்கூறிவரைவுவிலக்கலென்பது -உலகியல்கூறுவாள்போன்றுகுறிப்பால்வரைவுகடாவி, இனியிவ்வாறொழுகாது வரைவொடுவருவாயாகவெனத் தலைமகளதுபருவங்கூறி, தலைமகனைத் தோழி வரைவுவிலக்காதிற்றல். அதற்குச்செய்யுள்.

தள்ளிமணிசிந்தமுந்திக்கறுகட்கரிமருப்புந் *
தெள்ளிநறவத்திசைதிசைபாயுமலைச்சிலம்பா *
வெள்ளிமலையன்னமால்விடைபோன்புலியூர்விளங்கும் *
வள்ளிமருங்குல்வருத்துவபோன்றவனமுலையே. (௧௨௮)

மாத்தளிர்மேனியை வளைத்தெம்
தேத்தலிவ்வாறியங்கலென்ற

(இ-ள்.) மணிகளைத்தள்ளிச் சந்தனமரங்களை நூக்கித் தறுகண்மையையுடைய யானையின் மருப்புக்களைக்கொழித்துத் தேன்றிசைதோறும் பரக்கும் மலையையுடையகிலம்பனே, தனதுவெள்ளீமலையாகிய கயிலையையொக்கும் பெரியவிடையை யுடையவனது பலியூர்போல விளங்குங்கொடிச்சியது மருங்குலை, நல்லமுலைகள் வளராநின்றபடியால், வருத்துவனபோன்றன, இனிவளர்த்தெய்துவாயாக எ-று

கிலம்பனென்பது அதனையுடையனென்னும் பொருளோக்கர் ஈண்டுப்பெயராய்நின்றது. புலியூர்புரையுமென்பதுஉம்பாடம். யாவருமறியாவிவ்வனாக்கண்ணவதத தேன் முதிர்ந்துக்கு அருவிபோலவெல்லாருங்காணத் திசைதிசை பரந்தாற்போல,காந்தாரம் இவள் கதிர்ப்புவேறுபாட்டாற் புறத்தார்க்குப்புலனாய் வெளிப்படாநின்றதென. உள்ளுறையுவமையாயினவாறு கண்டு கொள்க.மெய்ப்பாடு-அச்சம் இவ்வொழுக்கம் புறத்தாரறியினிவறிறந்துபடுமெ,இறந்துபடவிவனுமிறந்துபடுமென்னு நினைவினாதலால், பயன்-வரைவுகடாதல். (ாஉஅ)

வரைவுடம்படாதுமிகுத்துக்கூறல்.

வரைவுடம்படாதுமிகுத்துக்கூறலென்பது-பருவங்கூறிவரைவுகடாயதோழிக்கு, அமராவதிக்கண்ணும் இம்மாதர்க்கொப்பில்லையென தான்முகன்பயந்தபிள்ளையை யான்வரையுந்துணையெளியளாக நீகூறுகின்றதென்னோவெனத் தலைமகன் வரைவுடம்படாது தலைமகளைமிகுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மாடஞ்செய்பொன்னகருந்திகழில்லையிம்மாதர்க்கென்னப் *
பீடஞ்செய்தாமரையோன்பெற்றபிள்ளையையுள்ளலரைக் *
கிடஞ்செய்தென்பிறப்புக்கெடத்திலலைநின்றோன்கயிலைக் *
கூடஞ்செய்சாதற்கொடிச்சியென்றோநின்றகூறுவதே. (ாஉக)

வரைவுகடாய வானுதற்றோழிக் கு
விரைமலர்த்தாரோன் மிகுத்துரைத்த து.

(இ-ள்.) மாடமாகச்செய்யப்பட்ட பொன்னகராகிய அமராவதிக்கண்ணும்இம்மாதர்க்கொப்பில்லையென்றுசொல்லும்எண்ணம் பீடமாகசெய்யப்பட்ட தாமரையையுடைய நான்முகன்பயந்த பிள்ளையைக் கயிலைமலைக்கட் கூடஞ்செய்யப்பட்ட சாலிடத்தி

வாழுங்கொடிச்செயலென்றோ நீ திர்ந்துசொல்லுவது, இவ்வாறுசொ ல்லற்பாலையல்லை.எ-து. தன்னை நினையாதாளைப் பழுக்களாகச்செய் து யான்தன்னை நினைவேனாகச்செய்து என்பிறப்புக்கெடத்தில்லை க்கணின்றவனது செயலெனக்கூட்டுக.

கூடமென்றது மன்னாகச்செய்யப்பட்ட தேவகோட்டத்தை. கூடஞ்செய்சாரலென்பதற்கு மாத்திரையாற்கூடஞ்செய்தாற்போ லுஞ் சாரலெனினுமமையும். கூடஞ்செய்தாற்போலு முலைக ளையுடைய சாரலெனினுமமையும். வரைவுடம்படாது மிகுத்துக் கூறியது. மெய்ப்பாடு-இளிவரல். பயன்-தலைமகனதுவிருப்புணர் த்துதல். (எஉக)

உண்மைகூறி வரைவுகடாதல்.

உண்மைகூறிவரைவுகடாதலென்பது- வரைவுடம்படாது மிகு த்துக்கூறியதலைமகனுக்கு,எங்களுக்குத் தாயுந் தந்தையுங்கானவர், யாங்கள்புனங்காப்போஞ்சிலர். நீர்வரைவுவேண்டாமையி னெம் மைப்புணர்ந்து கூறல்வேண்டுவதில்லையெனத் தோழி தங்களுண் மைகூறி வரைவுகடாவாதிற்றல். அதற்குச்செய்யுள்.

வெய்தாதவெண்முத்தஞ்சிந்துபைங்கார்வரைமீன்பரப்பிச் *
செய்தாதவானகமானஞ்சிலம்பதன்சேவடிக்கே *
பாய்தாதவன்புதந்தாட்கொண்டவம்பலவன்மலையிற் *
றூய்தாதைகானவரேனலெங்காவலித்தாழ்வனாயே. (எகஅ)

கல்வரைநாட வில்லதுரைப் ப
ஆங்கவளுண்மை பாங்கிபகர்ந்த து.

(இ-ள்.)வேயுண்டாக்கிய வெள்ளியமுத்துக்கள் சிந்திய சோலை களாற் பசிய கரியதாழ்வரை மீன்களைத் தன்கட்பரப்பிச் செய் மையையப் புலப்படுத்திய வானிடத்தையொக்குஞ் சிலம்பையுடை யாய், எமக்குத் தாயுந்தந்தையுந் தன்னுடைய சிவந்த திருவடிக் கே ஆளாயப்பட்டவன்பைத்தற்று என்னையடிமைக்கொண்ட அம் பலவனது மலையிற்கானவரே, இத்தாழ்வரையினுண்டாகிய தினை யெமதுகாவலாயிருக்கும், அதனுளிவரைவுவேண்டாமையிற்புனை த்துகூறவேண்டுவதில்லை.எ-து.

வினைமுதலல்லாத கருவிமுதலாயின அவ்வினைமுதல் வினைக்கு ச்செய்விப்பனவாகாதலின், பரப்பியெனச்செய்விப்பதாகக்கூறி னார். சேவடிக்கே யன்புதந்தெனவினையையும். மெய்ப்பாடு- பெரு மிதம். பயன்- வரைவுகடாதல். (எகஎ)

வருத்தங்கூறி வரைவுகடாதல்.

வருத்தங்கூறி வரைவுகடாதலென்பது- உண்மையுரைத்து வரைவுகடாயதோழி, வரையாமைநினைத்து அவள்வருந்தாநின்றாள், வரைவென்று நினைக்க நீயிர்வருந்தாநின்றீர், இவ்வாறாதும்முள்ளம் மாறுபடநிகழ்தலின் இருவர்க்குமிடையே யான்வருந்தாநின்றேனெனத் தலைமகனுக்கு வருத்தங்கூறி வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மன்னுந்திருவருந்தும்வரையாவிடினீர்வரைவென் ❋
றுன்னுமதற்குத்தளர்ந்தொளிவாடுநிரும்பலொரு ❋
பன்னும்புகழ்ப்பரமன்பரஞ்சோதிசிற்றம்பலத்தான் ❋
பொன்னங்கழலவழுத்தார்புலனென்னப்புலம்புவனே. (எகூக)

கனங்குழைமுகத்தவண் மனங்குழைவுணர்த் தி
நினைவளைத்தோளி வரைவுகடாய து.

(இ-ள்.) வரையாதொழியிற் பெரும்பான்மையுந் திருவையொப்பான்வருந்துவள், நீயிர் வரைவென்று நினைக்குமதற்குமனந்தளர்ந்து மேனியொளிவாடாநின்றீர், இவ்வாறாதும்முள்ளம் மாறுபடநிகழ்தலின், யான் பொன்னையொக்குங்கழலைவாழ்த்தமாட்டாதாநிறிவுபோலத் தனிமையுற்று வருந்தாநின்றேன் எ-று. அறிதற்கருமையான் உம்பரெல்லாமாராயும்புகழையுடையபரமன், எல்லாப்பொருட்கும் அப்பாலாகியவொளி, ஆயினும் அன்பர்க்கு இப்பாலாய்ச் சிற்றம்பலத்தின்கண்ணுயவன், அவனுடையபொன்னங்கழலெனக்கூட்டுக.

மன்னுமென்பது-ஓரிடைச்சொல். நிலைபெறுந்திருவென்றுரைப்பாருமுளர். முன்னர் இவட்குத்திருவையுவமங்கூறுதல் தக்கதன்றென்று, ஈண்டுவமித்ததெனினையெனின், ஆண்டுத்தெவியாமையிற்கூறலாகாமைகூறி, மக்களுள்ளாரென்று தெவித்தபின்னர்க் கூறலாமென்பதனாற் கூறியதெனவுணர்க. பொன்னங்கழலென்பதற்குப் பொன்னானியன்றகழலையுடையதென அன்மொழித்தொகைப்படவுரைப்பினுமமையும். புலனென்னவென்பதற்குச்சுவைமுதலாகிய தம்பொருள்பெறாது வழுத்தாதாரைம்பொறியும்புலம்புமாறுபோலவெனினுமமையும். இருவருள்ளநிகழ்ச்சியுங்கூறுவாள்போன்று, தலைமகளதாற்றாமைகூறி வரைவுகடாயவாறு. பெயர்ப்பாடு-அச்சம். பயன்-வரைவுகடாதல். (எகூக

தாயச்சங்கூறிவரைவுகடாதல்.

தாயச்சங்கூறிவரைவுகடாதலாவது - வருத்தங்கூறிவரைவுகடாயதோழி, எம்முடையயன்னை அவள்முலைமுதிர்வுகண்டு இவள் சிற்றிடைக்கு ஒருபற்றுக்கண்டிலேமென்று அஞ்சாநின்றாள், இனிமகட்பேசுவார்க்கு மறுதுகொடுக்கவுங் கூடுமெனத் தாயச்சங் கூறிவரைவுகடாவாதிற்றல அதற்குச்செய்யுள்.

பனித்துண்டஞ்சூடும்பசர்சடையம்பலவன்னுலகந் *
தனித்துண்டவன்றொழுந்தாளோன்கபிலப்பயில்சிலம்பா *
கனித்தொண்டைவாய்ச்சிகதிர்முலைப்பாரிப்புக்கண்டழிவுந் *
பினிக்கண்டிலம்பற்றுசிற்றிடைக்கென்றஞ்சுமெம்மனையே. ()

மடத்தகைமாதர்க் கடிப்பனவறி யா
வேற்கட்பாங்கி யேற்கவுரைத்த து.

(இ-ள்.) பனியையுடைய துண்டமாகியபிறையைச்சூடும் பரப்பியசடையையுடையவம்பலவன, எஞ்சுவான்றானேயாய்த் தானல்லாத உலகமுழுதையுமுண்டவன்றொழுந் தாளையுடையவன், அவனது கயிலைகட்பயிலுஞ்சிலம்பனே, தொண்டைக்கனிபோலும் வாயை யுடையாளுடைய கதிர்முலைகளது ஒருப்பாட்டைக்கண்டு, நெஞ்சழிந்து, எமமன்னை இவளசிற்றிடைக்கு இனியொருபற்றுக்கண்டிலமென்று, அஞ்சாநின்றாள், இனியபப்பனவறியேன். எ-று

துண்டம்-ஒருபொருளினதுகூறு. பாரிப்பு- அடியிடுதலெனினுமமையும். இளமைப்பருவம்புகுந்தமையான் மகட்கூறுவார்க்கு அன்னைமறுதே கொடுக்கும் நீ மூற்பட்டு வரைவாயாகவென்று தோழியேற்கக்கூறியவாறு. மெய்ப்பாடு-அச்சத்தைச்சார்ந்தபெருமிதம். பயன்-செறிப்பறிவுறுத்து வரைவுகடாதல். (ரசுஉ)

இற்செறிவறிவித்துவரைவுகடாதல்.

இற்செறிவறிவித்துவரைவுகடாதலென்பது-தாயச்சங்கூறிவரைவுகடாயதோழி,எம்மன்னை அவளையுற்றுநோக்கி, திருமலைக்கட்புகம்போய் விளையாடவேண்டாவெனக்கூறினாள், இனி யிற்செறிப்பாள்போலுமென,இற்செறிவறிவித்து வரைவுகடாவாதிற்றல்.அதற்குச்செய்யுள்.

விளையாடற்றவிளைவோர்ந்தெமர்மால்பெயற்றும்
வேய்விளையாடும்வெற்பாவுற்றுநோக்கியெம்மெல்லியலைப்

போய்விளையாடலென்றாளன்னையுப்பலத்தான்புரத்திற் *
நீவிளையாடுதின்றேவிளையாடிதிருமலைக்கே. (௧௩௩)

விற்செறி நுதலி வை
யிற்செறி வுரைத்த து.

(இ-ள்.) தேனீக்கள்பறந்துவிளையாட அவற்றினது விளையாட்டாற் றேனினதுவிளைவையோர்ந்தறிந்து எம்முடையதமர் கண்ணேணியைசசெய்யும்வேய்விளையாடும் வெற்பையுடையாய், குறிஞ்சுநோக்கி அன்னை எம்முடையமெல்லியலைத் திருமலைக்கட்புறம்போய் விளையாடவேண்டாவென்றுகூறினாள், இனியிற்செறிக்றும்போலும். எ-று. அம்பலத்தின்கண்ணான், முப்புரத்தின்கட் டீ விளையாடதின்று * எத்தொழிலால் விளையாடுவான், அவனது திருமலையெனக்கூட்டுக.

எமர்மால்பியற்றும் வெற்பாவென்றதனால், தாமற்றிலத்துமக்களாதலும் அவன்றலைவனாதலுங்கூறினாளாம். போய்விளையாடுகென்றாளென்பதுபாடமாயின், உற்றுநோக்கி இன்றுபோய்விளையாடுகவென்றாள் அக்குறிப்பாலநாளையிற்செறிப்பாள் போலுமெனவுணர்க. நவிளையாட்டாற்றேன்விளைவையோர்ந்து எமர்மால்பியற்றுமாறுபோல, கதிர்ப்புவேறுபாட்டால் இவளுள்ளத்துக்கரத்தகாமமுணர்ந்து மேற்செய்வனசெய்யக் கருதாநின்றாளென உள்ளுறைகாண்க. இற்செறிவித்ததென்பது பாடமாயின், இன்னார்கூற்றென்னாது துறைகூறிற்றாகவுணர்க. (௧௩௩)

தமர்நினைவுரைத்துவரைவுகடாதல்.

தமர்நினைவுரைத்து வரைவுகடாதலென்பது - இற்செறிவறிவித்துவரைவுகடாயதோழி, அவன்முலைதாங்கமாட்டாநிடைவருந்துவதனைக்கண்டு எமரிற்செறிப்பாராக நினையாநின்றார், அயலவருமகட்பேசநினையாநின்றாரெனத் தமர்நினைவுரைத்து வரைவுகடாவாதிற்றல். அதற்குச்செய்யுள்.

ற்றுஞ்சலடைக்கற்றைச்சிற்றம்பலவற்றொழாதுதொல்சீர் *
ற்றுமறியுலரிற்றிலம்பாவிடைதைவதுகண் *
டற்றுத்திரையின்னமிர்தையிவித்தமரிற்செறிப்பார் *
ற்றுஞ்சிலபலசீறாரிகளர்பெறுவார்நித்தைகளே. (௧௩௪)

விற்செறிதுதலியை யிற்செறிவிப்பரெ ன்
றொளிவேலவற்கு வெளியேயுரைத்த து.

(இ-ள்.) சிலம்பா, சுற்றப்பட்டசடைத்திரளையுடைய சிற்றம்பலவனை முற்பிறவியிற்றொழாமையான் நூல்களைக் கற்றுவைத்தும் அவனதுபழையபுகழையறியாதாளாய்ப்போல, முலைதாங்கல்லாதிடைவருந்துவதனைக்கண்டு, எற்றுற்றிரையையுடையகடலிற்பிறந்த இளியவமிர்தத்தையொப்பாளை இப்பொழுதுதமர் இற்செறிப்பார், அதுவுமன்றி இச்சீறூரார் பகரப்படும் பெரியவார்த்தைகள் சிலபலவுள. எ-று.

எற்றுற்றிரையென்பது சினையாகிய தன்பொருட்கேற்ற வடையபெற்றுநின்றதோராறுபெயர். இற்செறிப்பாளென்பது ஆரீற்று முற்றுச்சொல். வினைப்பெயரென்பாருஞ் செறிப்பவென்றுபாடமோதுவாருமுளர். சிலபலவென்பது பத்தெட்டுளவென்பது போலத் துணிவின்மைக்கண்வந்தது-சீறூரர்ப்பகரென்பதுஉம்பாடம்.இவற்றிற்கு மெய்ப்பாடும் பயனும-அவை. இவற்றுள்மேலைப்பாட்டிற குறிப்பினானே செறிப்பறிவுறுத்தாள். (௧௬௪)

எதிர்கோள் கூறிவரைவுகடாதல்.

எதிர்கோள்கூறிவரைவுகடாதலென்பது- தமர்தினைவுவரைத்து வரைவுகடாயுதோழி, நீவரைவொடுவரின், அன்னையும் ஐயன்மாரும் அயலவரும் நின்வரவெதிர்கொள்ளாநிற்பர், இனிப்பலதினையாது பலருமறியவரைவொடுவருவாயாகவென எதிர்கோள்கூறிவரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வழியுமதுவன்னையென்னின்மகிழ்வந்தெந்தையுநின் *
மொழியின்வழிநிற்குஞ்சுற்றமுன்னேவயமம்பலத்துக் *
குழியும்பரேத்துமெங்கூத்தன்குற்றாலமுற்றும்மறியக் *
கெழியும்மவேபணைத்தோள்பலவென்னோடெங்கின்றதே.(௧௬௫)

எற்றிரைத்தோழி யேற்றலைமுன்னி க்
கடியாமாறு தொடிகென்ற து.

(இ-ள்.) இவளைநீயெய்துதற்கு மூறைமையும் வரைவுவேண்டுதலே, இவணலத்திற்குத்தக்காரோர்களவனைவேண்டுவாசகலின் நீ வரைவுவேண்டுமிடத்து அன்னையென்னைப்போலமகிழும். உலகியலான்மறுத்தகன்றுநின்றாலுயினுந் தருதிநோக்கிவந்து எந்தையுநின்மொழியைக்கடவாது அதன்வழியேநிற்கும். இவளோடுநின்னி

ண்டநிகழ்ந்தது குறிப்பானநிகழ்ந்ததாகலின், நிவகாவுவேண்டுவதன் முன்னே கற்றம் நினைக்குவயுமாயிருக்கும். பலசொல்லுகின்றதென்,திரண்டு உம்பாரனேத்தப்படும் அம்பலத்தின்கணுளனாகிய எம்முடையகூத்தனது குற்றலமுமுதுமறியப்பொருத்திய உம்மனவேபுனைத்தோள்கள்ஐயுறவேண்டா. எ-று.

வழியுமென்னுமும்மை எச்சவும்மை, உபாயமாதலேயன்றி ஈ-று எந்தையுமென்பது இறந்ததுதழீஇய வெச்சவும்மை. முன்னே வயமென வேறுபடுத்துகூறுதலால், சுற்றமுமென வும்மை கொடாதுகூறினள். நலமுங்குலமு முதலாயினவற்றா னோராராயினும், வ்வெஞ்சிமீநாவனைபதுபயப்பட,குற்றலமுற்று மறியக்கெழீஇயவென்றாள் கெழீஇய வென்பது கெழியெனக் குறைந்துநின்றது. நின்மொழியென்று உம்மவே என்றது "என்னீரியாதீர் போலவிவைகூறுனின்னீரவலலறெரிந்தகாய்,,என்பதுபோலநன்னும்பன்மையு மொருமையுமயங்கிநின்றன குற்றலமுற்று மறியக் கெழியென்பதற்கு மறைந்தொழுகாதெல்லாருமறிய வரைவொடு வருவாயாகவென் றுரைப்பாருமுளர். இப்பொருட்குக் கெழுமு வென்பதுவிகாரவகையாற்கெழியெனநின்றது.கெய்ப்பாடும்படனும்அவை வரைவின்கட்டலைமகனையொற்றுமை கொளுவுதலுமாக

தழங்குமருவியென்னும் பாட்டுத்தொட் டிகன்காறும்வர இப்பாட்டென்பதுஞ்செறிப்பறிவுறுத்துவரைவுகடாயினவென்பது இவையெல்லாந்தோழியிற்கூட்டமுந்தோழியிற் கூட்டத்தின்விகற்பமுமெனவறிக. (ரகஎ)

ஏறுகோள்கூறிவரைவுகடாதல்.

ஏறுகோள்கூறிவரைவுகடாதலென்பது - எதிர்கோள்கூறிவரைவுகடாயதோழி, எம்முடைய வையன்மார் அவளுடையமுலையின் பெருமையும் இடையின்சிறுமையுங்கண்டு எம்மூர்க்கண்விடையின்மருப்பைத்திருத்திவிட்டார் இனியடுப்பன வறியேனெனஏறுகோள்கூறி வரைவுகடாவாதிற்றல். ஈண்டுகூறுவானுதலுகின்றதுமுல்லைத்திணைபாகலின்,அத்தமுல்லைத்திணைக்குமாபாவது,ஒரிடத்தொருபெண்பிறந்தால் அப்பெண்ணைப்பெற்றவர்தந்தொழுவில் அன்றுபிறந்தசேங்கன்றுள்ளனவெல்லாந் தன்னூட்டியாகவிட்டுவளர்த்து அப்பரிசினால்வளர்ந்த வேற்றைதந்தழுவி ஞெரூவனுக்குஅப்பெண்ணைக்கொடுத்தல் மரபென்ப-அதற்குச்செய்யுள்.

படையார்கருங்கண்ணிவண்ணப்பயோதரப்பாரமுறுண் *
ணிடையார்மெலிவுங்கண்டண்டர்களீராமுலைவேலியெம்மூர் *
விடையார்மருப்புத்திருத்திவிட்டார்விய ந்தென்புலியூ *
ருடையார்கடிவிவருவதுபோலுமுருவினதே. (ஈஎஉ)

என்னையர் அணி
வின்ன தென்றது.

(இ-ள்.) படைக்கலம்போலுங் கரியகண்ணையுடையாருடைய நிறத்தையுடையமுலைகளின்பாரத்தையும் அப்பாரத்தைத்தாங்கலுறுதின்ற நுண்ணிடையினையுடையாரது மெலிவையுங்கண்டு, என்னையாரியவாயர் சூரியமுலையாகிய வேலியையுடைய எம்மூரின்கண்விடையினது நிரயமருப்பைத் திருத்தச்செய்துவிட்டார்கள். அவ்விடை அகன்றதென்புலியூரையுடையவர் செலுத்திவரும் விடைபோலுமுருவினையுடைத்து. இனியென்னிகழும். எ-று.

இயலவனுமேற்கொள்ளாமையின் இடையாரெனவிழித்துக்கூறினாள். முலைவேலையுடைய வேலியினு மலையும். அவ்வேறு கோள்திகழ்வதன்முன் வரைந்தெய்துவாயாகவென்றவாறு. விடையார்மருப்புத்திருத்திவிட்டார் நினக்குற்றது செய்யென்பதனைக்கேட்டித் தலைமகனுள்ளம்வாடினான், அஃதெற்றிற்கெனின், ஏறுகழுவிக்கோடல்தங்குலத்திற்றுமரபாகலானும், தமக்குப்பொதுவியர் பொதுவியரென்றுபெயராகலானும், அவ்வேற்றமறத்தன்னின்முற்பட்டாளொருவன்றழுவவுற்றகுமென்றுள்ளம்வாடினான் அதனைத்தோழிகண்டு அவ்வேறு புலியூருடையார் கடவி வருவது போலு முருவினதென்றாள், என்றது அதன்றெம்மை சொன்னவாறன்று, இவ்வொழுகலை புலியூருடையாரதருளான்வந்ததாகலின் அவ்வேறுநினக்கேவரப்படுவதன்றி மற்றொருக்கரா லணுகுதற்கரிது, நீகடிதுவிரைந்துசெய் அஞ்சவேண்டா வென்றாளாயிற்று. இதுமுலைதத்தினை. மெய்ப்பாடு-அது. பயன்-ஏறுகோளுணர்த்திவரைவுகடாதல். (ஈஎஎ)

அயலுளையுளைத்துவளைவுகடாதல்.

அயலுளையுளைத்துவளைவுகடாதலென்பது - ஏறுகோள்கூறிவளைவுகடாயதோழி, அயலவர் நாளைப்பொன் புனையப்புகுதாநின்றார், இகற்குத்தீவினையேன்சொல்லுவதென்னோவெனத் தான்முலைவனிலைப்புறமொழியாகஅயலுளையுளைத்துவளைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்,

உருப்பனையன்னகைக்குன்றொன்றரித்தாரூரெரித்த *
நெருப்பனையம்பலத்தாதியையும்பரிசென்றேத்திநிற்கும் *
திருப்பனையூரனையாளைப்பொன்னுளைப்புனல்செப்பிப் *
பொருப்பனைமுன்னின்றென்னோவினையேன்யான்புகல்வதுவே.

கயல்புரை கண்ணி யை
யயலுரை யுரைத்த து.

(இ-ள்.) வடிவுபனையையொக்குங்கையையுடையகுன்றொன்றை யுரித்து வலியையுடையஊர்களையெரித்த நெருப்பையுடையானை, அம்பலத்தின்கணுள்ளாகிய வெல்லாப்பொருட்கு முதலாயவனை, உம்பர் சென்றுவாழ்தலிநிற்றற்கிடம்நிற்திருப்பனையூரையொப்பானை அயலார்நாளைப்பொன்புனலைச்செல்லித் தீவினையேனாகிய யான்முன்னின்று பொருப்பனைச் சொல்லுவதெவனோ. எ-று.

உரூஉரித்தலைநெருப்பி லேறுதலெரித்தநெருப்பனை யென்றசொற்களினாற்றலான், எரிக்கதுநெருப்பானென்பது பேரதரும் புகல்வதென்றது வரைந்தெய்துவாயாகவென்று பின்சொல்லப்படுங்காரியத்தை நீனு கிறைப்பறம். பொருப்பனென்பது முன்னிலைக்கண்வந்ததென்று தலைமகன் முன்னிலையாகக் கூறினாளெனினுமமையும். அயலுரை- தலைமகட்கியாது மியைபில்லாதவுரை. அயலாரொருப்பட்ட வுரையெனினுமமையும் மெய்ப்பாடு - அழுகையச்சார்த்தபெருமிதம். பயன்-வரைவுகடாதல். (எகூஎ)

தினைமுதிர்வுரைத்துவரைவுகடாதல்.

தினைமுதிர்வுரைத்துவரைவுகடாதலென்பது - அயலுரையுரைத்துவரைவுகடாயதோழி, இவ்வேங்கை,தினைப்புனங்கொய்கவென்று சோதிடஞ்சொல்லுதலைப்பொருந்தி யெம்மைக்கெடுவித்தது, இனிநமக்கேனல் விளையாட்டில்லையெனச் சிறைப்புறமாகத் தலைமகளோடுகூறுவாள்போன்று,தினைமுதிர்வுரைத்து வரைவுகடாவாறிற்றல். அதற்குச்செய்யுள்.

மாதிடங்கொண்டம்பலத்துறின்றோன்வடவான்கயிலைப் *
போதிடங்கொண்டபொன்வேங்கைதினைப்புனங்கொய்கவென்று *
சோதிடங்கொண்டுபொன்வீசித்தன்கள்வாய்ச்சொரியநின்று *
சோதிடங்கொண்டிதெம்மைக்கெடுவித்ததுதூமொழியே. ()

னேனல்விளையாட்டினியில்லையெ ன
மானற்றோழிமடந்தைக்குரைத்தது

(இ-ள்.) தூயமொழியையுடையாய், மாலையிடப்பக்கத்துக்

கொண்டெல்லாருங்காண அம்பலத்தின்கணின்றபொருந்தாவெர்
ழுக்கத்தையுடையவனது வடக்கின்கணுண்டாகிய பெரியகைலை
மலைக்கணுள்ளதாகிய பொருப்பிடங்கொண்டபொன்போலுமலரை
யுடையவேங்கை, தினைப்புனத்தைக் கொய்கவென்று தாதையிடத்
தேகொண்டு, பொன்போலுமலரையெல்லார்க்குங்கொடுத்து, தன
துதேனைப்பூத்தவிடஞ்சொரியநின்று, சோதிடஞ்சொல்லுதலைப்
பொருந்தி, இஃதெம்மைக்கெடுத்தது, இனியென்செய்தும்.எ-று.

பொன்னைக்கொடுத்துப்பிறர்க்கடிமையாதலைப்பொருந்தித்தா
னிழிந்தசாதியாதலாற்றனக்குரியகளிலை வாய்சொரியநின்றெனக்
கிலைடவகையா னிழித்துக்கூறினாளாகவுமுரைக்க. சோதிடங்
கொண்டி தெம்மைக்கெடக்கொண்டதென்பது பாடமாயிற் கெ
டக்கொண்டதென்னுஞ்சொற்கள் ஒருசொல்னீரவாய்க் கெடுத்த
தென்னும்பொருள்பட்டு, எம்மையெனனு மிரண்டாவதனை முடி
த்தனவாகவுரைக்க. மெய்ப்பாடு-அழுகை. பயன் - செறிப்பறிவு
றுத்தல். (௧௩௮)

பகல்வரல்விலக்கிவரைவுகடாதல்.

பகல்வரல்விலக்கிவரைவுகடாதலென்பது - கைறப்புறமாகத்தி
னைமூதிர்வுரைத்துவரைவுகடாயதோழி, எதிர்ப்பட்டுநின்று, இப்
பெருங்கணியார் நமக்குநோவுதகப்பருவஞ்சொல்லுவாராயிருந்
தார், எம்மையன்மார் இவர்சொற்கேட்டு இத்தினையைத் தடிவாரா
யிருந்தார். எமக்குமினித்தினைப்புனங்காவலில்லை, நீரிளிப்பகல்வர
ல்வேண்டாவெனப் பகல்வரல்விலக்கி வரைவுகடாவாதிற்றல். அத
ற்குச்செய்யுள்.

வடிவார்வயற்றில்லையோன்மலயத்துதின்றும்வருதேன் *
கடிவார்களிவண்டுநின்றலர்தூற்றப்பெருங்கணியார் *
நொடிவார்நமக்கினிநோதகவாறுமக்கென்னுரைக்கேன் *
தடிவார்தினைபெயர்காவேம்பெருமவித்தண்புனமே. (௧௩௯)

அகல்வரை நாடனை
பகல்வர லென்ற

(இ-ள்.) அழகார்ந்தவயல்சூழ்ந்த தில்லையையுடையவனது பொ
தியிற்கணின்றுவைத்தும், நறுதாற்றத்தால்வாராநின்றதேன்களும்,
தாற்றத்தைத்தேருதடிய களிவண்டுகளும், நின்று அலர்களைக்கு
டைந்துதூற்ற, வேங்கையாகிய பெருங்கணியார் இப்பொழுது
நமக்குநோவுதகப்பருவஞ்சொல்லுவாராயிருந்தார், யானுமக்கெ

நீ சொல்லுவேன், கணியார் சொல்லுதலால் எமர் தினையைத் தடிவாராயிருந்தார். அதனால், பெருமை, இத்தண்புனத்தை யாயினிக்காவேல், நீ பகல்வர வேண்டா. எ-று.

வடிவார் தில்லையென்றினியப்பினுமமையும். மலயத்துவாழ்வார் பிறர் பகுவருத்தஞ்செய்யாராதலின், மலயத்துறின்றுமெனறும் மைகொடுத்தார். மலயத்துறின்றும் வருத்தேனென்றுரைப்பாருமுளர். இப்பொருட்கு வேங்கைமலயத்தையணைந்ததோரிடத்துநின்றதாகவுரைக்க. கடி-பதுமையுமாம். வண்டொழுங்கினது நெறிமைபற்றி வார்களிவண்டென்றாள். இதுவுமதுவாகலால், மலர்தூற்றலென்பதற்குத் தன்னோடுபயின்றாரைக் கண்ணோட்டமின்றிவருத்தாறின்றதென்று பறங்கூறவென்றுமுரைக்க. மெய்ப்பாடு-அது. பயன்-பகற்குறிவிலக்கல். (ாகக)

தினையொடுவெறுத்துவரைவுகடாதல்.

தினையொடுவெறுத்துவரைவுகடாதலென்பது-பகல்வரல்விலக்கி இவரைவுகடாயதோழி, இத்தினைகாவறலைக்கோக நாமவனையெதிர்ப்படலாமென்றுநினைந்துதினையைவித்திக்காத்தோம், அதுபோய்த் தீவினையைவித்திக்காத்து அதன்விளைவையுமுண்டதாகி முடிந்ததெனச் சிறைப்புறமாகத் தினையொடுவெறுத்து வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தினைவித்துத்தல்லையென்னெஞ்சத்திருந்தம்பலத்துநின்று *
புனைவித்தவீசன்பொதியின்மலைப்பொருப்பன்விருப்பிற் *
றினைவித்திக்காத்துச்சிறந்துநின்றேமுக்குச்சென்றுசென்று *
வினைவித்திக்காத்துவிளைவுண்டதாகிவிளைந்ததுவே. (ாசல)

தண்புனத்தோடு தளர்வுற்று ப்
பண்புனைமொழிப் பாங்கியகர்ந்த து.

(இ-ள்.) நானேவந்திருந்து திருத்தவேண்டுதலின் என்னெஞ்சத்துப்புகுந்திருந்து தன்னை யானினையும் வண்ணஞ்செய்து அம்பலத்தின்கட்டன்றிருமேனிகாட்டிநின்று என்னுற்றன்னைப் புகழ்வித்துக்கொண்ட ஈசனதுபொதியின் மலைக்கணுளனாகியபொருப்பன்மேல்வைத்த விருப்பினாற் றினையைவித்தி அதனைக்காத்து உள்ளமலிந்துநின்ற எங்கட்கு அத்தினையை வித்திக்காத்த காவல் போய்த் தீவினையைவித்தி அதனைக்காத்து, அதன்விளைவையுமுண்டதாகிமுடிந்தது. எ-று.

நினைவித்துத்தன்னையென்னெஞ்சத்திருந்தென்பதற்கு ஒருகா லந்தன்னை நினைவேனாகவுஞ்செய்து அந்நினைவேபற்றுக்கோடாகத் தான்புகுந்திருந்தெனினுமமையும் பொருப்பன் விருப்பென்ப தனை நீர்வேட்கைபோலக்கொள்க. நினைவித்தியஞான்று இத்தினை, க்காவல் தலைக்கீடாக அவனை யெதிர்ப்படலாமென்று மகிழ்ந்து அ தற்குடம்பட்டாராகலிற் றும்வித்தினார் போலக்கூறினாள். புனத் தோடுதளர்வுற்று-புனத்தாற்றளர்வுற்று. (ரசசு)

வேங்கையொடுவெறுத்துவளைவுகடாதல்.

வேங்கையொடுவெறுத்துவளைவுகடாதலென்பது- தினையொடு வெறுத்துவளைவுகடாயதோழி, இவ்வேங்கையரும்பிய ஞான்றே அரும்பறக் கொய்தேமாயின் இவர் இன்னுறம்மைக் கெடுப்பான் வேண்டி இத்தினைகெட முயலுமாறுமுண்டோ யாமதுசெய்யப் பெற்றிலேமென வேங்கையொடு வெறுத்து வளைவுகடாவாதிற்றல். அதற்குச்செய்யுள்.

கனைகடற்செய்தநஞ்சுண்டுகண்டார்க்கம்பலத்தமிழ்தாய் *
வினைகெடச்செய்தவன்விண்டோய்கயிலைமயிலனையாய் *
நனைகெடச்செய்தனமாயினமைக்கெடச்செய்திடுவான் *
தினைகெடச்செய்திடுமாறுமுண்டோவித்திருக்கணியே. (ரசச)

நீங்குகவினி நெடுந்தகையெ ன
வேங்கைமேல்வைத்து விளம்பியது.

(இ-ள்) ஒலியாநின்ற கடலின்கணுண்டார்க்கப்பட்ட நஞ்சையு ண்டுவைத்து, அம்பலத்தின்கணின்று கண்டார்க்கு அமிழ்தமாய் த ம்வினைகெடும்வண்ணஞ்செய்தவனது விண்ணைத்தோயாநின்றகை லையின்மயிலையொப்பாய், அரும்பியஞான்றே நனையைக்கெடும்வ ண்ணஞ்செய்தேமாயின், நம்மைக்கெடுப்பான்வேண்டி இத்திரு வாலியகணி தினைகெடமுயலுமாறுமுண்டோ, யாமது செய்யப் பெற்றிலேம். எ-று.

கனைகடற்செய்தவென்றதனான் நஞ்சின்பெருமைகூறினார். செ ய்யாததஞ்சிற்செய்ததஞ்சுகொழிதாகவின், அதன்கொடுமைவிளங் க, செய்ததஞ்சென்றார். அமிழ்தாதல்-அமிழ்தின்காரியத்தைச்செ ய்தல், கண்டார்க்கென்றதனான், அல்லாதவமிழ்தோடு இவ்வமிழ்திற் குவேற்றுமைகூறியவாறும். கெடச்செய்திடுவானென்னுஞ்சொற் கள் ஒருசொன்னீரவாய், கெடுப்பானென்னும்பொருள்பட்டு,

ட்மமயென்னு மிரண்டாவதற்குமூடிபாயின. வினைகெடச்செய்த வலென்பது மூதலாயினவற்றிற்கு மிவ்வாறுனாப்பினு மமையும். திரு-சாதிப்பெயர். கணி-தொழிற்பெயர். நல்லகணியென்றிழித்துக்கூறினாளாகவுரைப்பாருமுளர். (ாசக)

இரக்கமுற்றுவளாவுகடாதல்.

இரக்கமுற்றுவளாவுகடாதலென்பது - வேங்கையொடுவெறுத்துவளாவுகடாயதோழி,பாமலனை யெதிர்ப்படலாமென்'நின்புற்று வளர்த்தகினைத்திரள் இப்புனத்தின்கணில்லாவாயிருந்தன, இனிநாமவனை யெதிர்ப்படுமாறென்னோவெனச் சிறைப்புறமாகத் தலைமகனுக்கிரக்கமுற்று வளாவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வழுவாவியலெம்மலையர்வீதைப்பமற்றியாம்வளர்த்த *
கொழுவார்தினையின்குழாங்களெல்லாமெங்குழாம்வணங்குஞ் *
செழுவார்கழற்றிண்ணிசிற்றம்பலவரைச்சென்றுநின்று *
தொழுவார்வினைநிற்கிலைநிற்பதாவதித்தொல்புனதே. (ாசஉ)

செழுமலை நாடற்கு
கழுமலுற் றிரங்கிய து.

(இ-ள்.) விதைக்கும்பருவத்துங் கொய்யும்பருவத்தும் வழுவாதுசெய்யுமியல்பையுடைய எந்தமாகிய மலையர் விதைப்ப யாம் வளர்த்தகொழுவிய நெடிய தினையின்றிரட்களெல்லாம், எமதுகுழாஞ்சென்றுவணங்கும் வளவியநெடியகழலையுடைய திருவிலையிற் சிற்றம்பலத்தையுடையானைச்சென்றுநின்று தொழுவாருடையவினை அவர்கண் நிற்கிலே, இப்பனழயபுனத்தினிற்பதாவது, இனிநில்லர். எ-று.

குழாங்களெல்லாநிற்பதாவதெனக்கூட்டுக. நிற்பதென்பது- நிற்றலென்னும்பொருட்டு நிற்பதாவதென்பதுபாடமாயின், ஆவதென்பதிரங்கற்குறிப்பாகவுரைக்க. நிற்பவென்பதூஉம்பாடம். குழுவார்தினையென்பதூஉம்பாடம். (ாசஉ)

கொய்தமைகூறிவளாவுகடாதல்.

கொய்தமைகூறிவளாவுகடாதலென்பது - இரக்கமுற்றுவளாவுகடாயதோழி எதிர்ப்பட்டுநின்று, இப்புனத்துத்தினையுள்ளது இன்றுதொடங்கிறுகொய்தற்றது, எமக்குமினிப்புனங்காவலில்லை, யாருமக்கறிவுசொல்லுகின்றேமல்லேம், நீரேயறிவீரெனத் தினை கொய்தமைகூறி வளாவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொருப்பர்க்கியாமொன்றுமாட்டேம்புகலப்புகலெமக்காம் *
விருப்பர்க்கியாவர்க்குமேலர்க்குமேல்வருமூரொரித்த *
நெருப்பர்க்குநீடம்பலவருக்கன்பர்குலநிலத்துக் *
கருப்பற்றுவிட்டெனக்கொய்தற்றதின்றிக்கடிப்புனமே. (ரசசு)

நீஷரும்புனத்தினி யாடேமென் று
வலாவுதோறை வுரைசெய்த து.

(இ-ள்.) எம்மைக்குப்புகலிடமாதற்குக்காரணமாகியவிருப்பத்தை யுடையவர்க்கு, எல்லார்க்குமேலாயவர்க்கு, ஆகாயத்தின்கட்செல் லுமூர்களை யெரித்த நெருப்பையுடையவர்க்கு, நிலைபெற்றவம்ப லத்தையுடையவர்க்கு அன்பராயினாருடையகுலங்கள் உலகத்துப் பிறவிக்காரணத்தைப்பற்றுவிட்டகன்றாற்போல, இக்காவலையுடை யபுனம் இப்பொழுதுதொடர்பறக்கொய்தற்றது, அதனாற் பொ ருப்பர்க்கியாமொன்றுஞ்சொல்லமாட்டேம். எ-று.

யாமொருகுணமுமில்லேமாயினுந் தமதுவிருப்பினா லெமக் குப்புகலிடமாயினாரென்னுங்கருத்தால், பகலெமக்காம்விருப்பர் க்கென்றார் எம்மாலவிரும்பப்படுவார்க்கென்பாருமுளர். விடெ னவென்பதனுமம்பாடம். (ரசசு)

பிரிவருமைகூறிவரைவுகடாதல்.

பிரிவருமைகூறிவரைவுகடாதலென்பது- கொய்தமைகூறிவரை வுகடாயக்கூறி, இப்புனத்துப்பயின்றகிளிகள், நமக்குத் துப்பா காக்காலத்துநு நினைத்தாளைவிடாதிராதின்றன, நாம்போலுல நங்கா தலரிவ்விடத்தேவந்துதின்று நம்மைமதிதேமுவர் கொல்லோவெனச் சிறைப்புறமாகப்பிரிவருமைகூறி வரைவுகடாவாநிற்றல். அதற்கு ச்செய்யுள்.

பரிவுசெய்தாண்டம்பலத்துப்பயில்வோன்பரங்குன்றின்வா *
யருவிசெய்தாம்புனத்தைவனங்கொய்யவுமிவ்வனத்தே *
பிரிவுசெய்தாலரிதேகொள்கபேரொடுமென்னும்பெற்றி *
யிருவிசெய்தாளிவிருந்தின்றுகாட்டுமிளங்கிளியே. (ரசச)

மறைப்புறக் கிளவியி ற்
சிறைப்புறத் துரைத்த து.

(இ-ள்.) எம்மைப்பரித்தாண்டு, அம்பலத்தின்கட்பயில்வானது பரங்குன்றினிடத்து அருவிநீராற்செய்யப்பட்ட தாழ்ந்தபுனத்தி ன்கணுண்டாகிய ஐவனத்தைக்கொய்யவும், இக்காட்டின்கண் இரு

வியாகச்செய்யப்பட்ட தாளிலேயிருந்து, நட்புச்செய்தாற் பேயோடாயினும் பிரிவரிது இதனையுள்ளத்துக்கொள்கவென்னுந் தன்மையை இளங்கிளிகள் இப்பொழுதுகாட்டாநின்றன எ-று.

பேயோடாயினும் பிரிவுசெய்தாலாற்றுதலரிதென் றுணாப்பினுமலமையும். இருவியென்பது-கதிர்கொய்ததட்டை. தாளென்பது-கதிர்கொய்யாதமூன்னுஞ்சொல்வதோர்பெயர். இப்புனத்துப்பயின்றகிளிகள் தமக்குத் துப்பாகாக்காலத்துமிகனைவிடாதிராநின்றன இனிறங்காதலர் தம்மாட்டென்செய்வதென்னுங் கருத்தான், மறைப்புறமாயிற்று. சிறைப்படவுரைத்ததென்பது பாடமாயின், சிறைக்கண்வந்துநிற்பவென்றுணாக்க. (௩௪௪)

மயிலொடுகூறிவரைவுகடாதல்.

மயிலொடுகூறிவரைவுகடாதலென்பது - பிரிவருமைகூறிவரைவுகடாயதோழி, பிரிவாற்றாமையோடு தலைமகளையுங்கொண்டு புனங்காவலேறிப்போகாநின்றாள், கணியார்தினைவு இன்றுமூடிற்றது, யாங்கள் போகாநின்றேம், இப்புனத்தொருவர்வந்தால் இஞ்ஞானறுப்பினவர்கள் துணியாதன துணிந்துபோனாளென்று அவர்கருச்சொல்லுமினென மயிலொடுகூறி வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கணியார்கருத்தின்றுமூற்றிற்றியாஞ்சென்றுங்கார்ப்புனமே *
மணியார்பொழிலகரண்மறத்திர்கண்டீர்மன்னுமம்பலத்தோ *
ணணியார்கயிலைமயில்காளயிவ்வேலொருவர்வந்தாற் *
றுணியாதனதுணிந்தாரொன்னுநீர்மைகள்சொல்லுமினே. (௩௪௫)

நீங்கரும்புனம்விடு தீள்பெருந்துயரா ம்
பாங்கிபகர்ந்து பருவரலுற்ற

(இ-ள்.) கணியாரதுநினைவு இன்றுமூடிற்றது, யாங்கள் போகாநின்றேம், கரியபுனமே, மணிகளார்ந்தபொழில்காள், வேங்கையொடுபயின்றீராகலின் நீரெம்மைமறப்பீர், நிலைபெறு மம்பலத்தையுடையவனது அழகார்ந்தகலையினின்றும்வந்தமயில்காள், அயில்வேல் துணியாகத்தனிவருமவர் ஈண்டுவந்தால், அன்புடையார் துணியாதனவற்றை அவர்துணிந்தாரொன்னுநீர்மைகளை யவர்க்குச்சொல்லுமின். எ-று.

நீர்மை-ஈண்டுவியப்பு. நீரிவ்வாறுசொன்னால் அவராற்றுவாரொன்பதுகருத்து. போருவிளைவான் கைலையினுள்ளீராகலின் நீர்கண்ணோட்டமுடையீரென்பதுகருத்து. கார்ப்புனமென்பதற்குக்கா

ர்காலத்துப்பொலியும் புனமெனினுமமையும். துணியாதனவாவன பிரிதலும், வரையுந்துணையுமாற்றியிருத்தலும். புனமே பொழில்காள் மயில்காள் என்றுகூட்டி, நீரெம்மைமறப்பிராயினும் புறவாதுசொல்லுமினென் றுரைப்பாருமுளர். இவையாறற்றும் மெய்ப்பாடும் பயனும்-அவை. (௩௪௫)

வறும்புனங்கண்டுவருந்தல்.

வறும்புனங்கண்டுவருந்தலென்பது-தலைமகளுந்தோழியும்புனங்காவலேறிப்போகாநிற்ப,தலைமகன்பனத்திடைச்சென்றுநின்று, இப்புனம் யாமுன்பயின்றதன்றோ, இஃதின்றிருக்கின்றவாறென்னோவென்று, அதன்பொலிவழிவுகூறித்தலைமகளைத்தேடிவருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொதுவினித்தீர்த்தென்னையாண்டோன்புலியூரான்பொருப்பே
யிதுவெனிலென்னீன்றிருக்கின்றவாறெம்மிரும்பொழிலே *
யெதுநுமக்கெய்தியதென்னுற்றவிரறையீண்டருவி *
மதுவினிற்கைப்புவைத்தாலொத்தவாமற்றிவ்வான்புனமே(௩௪௬)

மென்புனம்விடுத்து மெல்லியல்செல் ல
மின்பொலிவேலோன் மெலிவுற்ற து.

(இ-ள்.) அதுவோவிதுவோவழியென்றுமயங்கிப் பொதுவாகநிற்றலைமையைநீக்கி என்னையாண்டவன், புலியூரிலான் அவனதுபொருப்பாய் யான்முன் பயின்றவிடமேயாயின் இஃதின்றிருக்கின்றவாறென், எம்முடையபெரியபொழிலே, நுமக்குத்தான் இன்றுவந்ததியாது! நீரென்னுற்றீர்! இதுவேயுமன்றி இப்பெரிய புனம் ஒலியாநின்ற பெருகியவருவியாய்விழும் மதுவின்கண் அதனின்சுவையையமாற்றிக்கைப்பாகியசுவையையவைத்தாலொத்தவாறென்! எ-று.

மற்றென்பதசைநிலை. எல்லாரையுமாளும் பொதுவாகியமுறைமையினின்றுநீக்கி என்னை யுளநெகிழ்விப்பதோருபாயத்தானுண்டவென்றுரைப்பினுமமையும். இன்பஞ்செய்வதுந் துன்பஞ்செய்வது மொன்றாகமாட்டாதென்னுங்கருத்தாற் புலியூரான் பொருப்பேயிதுவெனிலென்றான். அறையீண்டருவிகாள் நீரென்னுற்றீரென்றும், அறையீண்டருவிப்புனமென்றும், உரைப்பாருமுளர். (௩௪௭)

பதிநோக்கிவருந்தல்.

பதிநோக்கிவருந்தலென்பது-வறம்புனத்திடைவருந்தாநின்ற தலைமகன், இவ்வாறணித்தாயினும் நம்மாற்செய்யலாவதொன்றில்லையென்று அவளிருந்தபதியைநோக்கித் தன்னெஞ்சோடுசொல்லிவருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஆனந்தமாக்கடலாடுசிற்றம்பலமன்னபொன்னின் *
றேனுந்துமாமலைச்சீறூரிதுசெய்யலாவதில்லை *
வானுந்துமாமதிவேண்டியமுழுமழப்போனுமன்னோ *
நானுந்தளர்ந்தனனீயுந்தளர்ந்தனைநன்னெஞ்சமே. (௧௪௭)

மதிதுகலரீவை பதிபுகலரிதெ ன
மதிநனிகலங்கிப் பதிமிகவாடிய து.

(இ-ள்.) ஆனந்தமாகிய நீரானிறைந்ததோர் பெரியகடல் நின்றாடுஞ் சிற்றம்பலத்தையொக்கும் பொன்னினது தேன்றத்திப்பாயும்பெரியமலைக்கணுண்டாகியசீறூரிது, இவ்வாறணித்தாயினுநம்மாற்செய்யலாவதொன்றில்லை அதனால் வானின்கட்செல்லும் பெரியமதியைக்கொள்ளவேண்டி அதனருமையறியாதழுங்குழவிபோல் எய்துதற்கரியாளைவிரும்பி, நல்லநெஞ்சமே, நீயுந்தளர்ந்தாய், நீபவ்வரும்பொருள்விரும்புதலான்யானுந்தளர்ந்தேன்-எறு

தேனையுமிழுமாமலையெனினு மமையும். மழவை நெஞ்சத்திற்கேயன்றித் தலைமகற்குவமையாக வுரைப்பினுமமையும். நெஞ்சத்தைத்தன்னோடுபடுத்தற்கு நன்னெஞ்சமெனப் பனைந்துகூறினான். இதுதலைமகளை இற்செறிவிக்கின்றகாலத்துஆற்றாளாகியதலைமகன்றோழிகேட்பத் தன்னெஞ்சிற்குச்சொல்லியது. மன்னுமோவுமசைநிலை. பதி-தலைமகன். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு- அழுகை. பயன்-ஆற்றாமைநீங்குதல். (௧௪௭)

பகற்குறிமுற்றிற்று.

இ ர வு க் கு றி.

இரவுக்குறிவருமாறு—பகற்குறிபுணர்ந்து விலக்கப்பட்டதலைமகன் தெருண்டுவரைதலை. தெருளாளுயிற்பின்னையுந்தோழியைத்தலைப்பட்டு இரவுக்குறிவேண்டிச்சென்று எய்துதன்முறைமையென்ப. என்னோ "தனவினுட் டவிர்ச்சி கிழவோர் கில்லை,, என்றாகலின்.

ருத்திரம். இரவுக்குறிவேண்ட லாற்றருமைகூற, னின்றுநெஞ்சுடைத னின்கண்டுநேர்த, லுட்கோள்வினாத லுட்கொண்டுவினாத லல், குறியிடங்கூறல் குறியேற்பித்த, லிரவாவுரைத்த லேதங்கூறல், குறைநேர்தலோடு குறைநயப்புரைத்தன், மயின்மேனிசைத்துவா வுணர்ந்துரைத்த, றுய்துயிலறித றலைவிதுயிலெடுத்த, லிடத்துய்த் துநீங்க நளர்வகன்றுரைத்தன், மருங்கணைதலோடு முகங்கண்டுமகி ழ்தல், பள்ளியிடத்துய்த்தல் பள்ளியிடத்துய்த்து, வரைவுகடாவி வரவுவிலக்கல், வரைவுடம்படா தாற்றாதுரைத்த, லதரிடைச்செல விற் கிரக்கங்கூற, லிருளறநிலவு வெளிப்படவருந்கல், வேற்றுக்கு றிகூறல் கடலிடைவைத்துத், துயரறிவித்த றோழியுயின்றித், தா னேகிடந்து தனிமையுற்றாற்றாங், காமமிக்க கழிபடர்கிளவி, காப் புச்சிறைமிக்க கையறுகிளவி, யாறுபார்த்துற்ற வச்சக்கிளவி, தன் னுட்கையா றெய்திடுகிளவி, நிலைகண்டுரைத்த னெடுங்கடற்சேர்த் த, லலரறிவித்தலோ டாறைம்மூன்று, மிரவுக்குறியிவை யென்றிசி னோரே.

(இ-ள்.) இரவுக்குறிவேண்டல்- வழியருமைகூறிமறுத்தல்-நின் றுநெஞ்சுடைதல்- இரவுக்குறிநேர்தல்- உட்கோள்வினாதல் - உட் கொண்டுவினாதல்-குறியிடங்கூறல்-இரவுக்குறியேற்பித்தல்-இரவ ரவுரைத்தல்-ஏதங்கூறிமறுத்தல்- குறைநேர்தல்-குறைநேர்ந்தமை கூறல்- வரவுணர்ந்துரைத்தல்- றாய்துயிலறிதல்- துயிலெடுத்துச் சேறல்-இடத்துய்த்துநீங்கல்-நளர்வகன்றுரைத்தல்-மருங்கணைதல்- முகங்கண்டுமகிழ்தல்-பள்ளியிடத்துய்த்தல்-வரவுவிலக்கல்-ஆற்று துரைத்தல்-இரக்கங்கூறிவரைவுகடாதல்- நிலவுவெளிப்படவருந்த ல்-அலருறுதியறிவித்தல்-கடலிடைவைத்துத்துயரறிவித்தல்-காம மிக்ககழிபடர்கிளவி- காப்புச்சிறைமிக்ககையறுகிளவி- ஆறுபார் த்துற்றவச்சக்கிளவி- தன்னுட்கையாறெய்திடுகிளவி - நிலைகண்டு ரைத்தல்- இரவுறுதுயரங் கடலோடுசேர்த்தல் - அலரறிவுறுத்தல்- என விவை முப்பத்துமூன்று மிரவுக்குறியாம். எ-று. அவற்றுள்,

இரவுக்குறிவேண்டல்.

இரவுக்குறிவேண்டலென்பது - பகிரோக்கிவருந்தாநின்றதலை மகன், இற்றையிரவிற்கியானுங்கள்சிறார்க்குவிருந்து என்னை யே றுக்கொள்வாயாகவெனத் தோழியையிரவுக்குறி வேண்டாநிற்ற ல். அதற்குச்செய்யுள்.

மருந்துநமக்கல்லற்பிறவிப்பிணிக்கம்பலத்தமிர்தா
யிருத்தனர்ருன்றிணின்றேங்குமருவிசென்றேர்திகழப்

பொருந்தினமேகம்புரைத்திருடுக்கும்புனைபிறும்பிற் *
விருந்தினன்யானுங்கள்சீறூரதனுக்குவெள்ளனையே. (௧௮அ)

நள்ளிருட்குறியை வள்ளனினைந் து
வீங்குமென்முலைப் பாங்கிகுரைத்த து.

(இ-ள்) வெள்ளனையையுடையாய், ஞன்றிக்கலின்றெழிக்கும் ருவிகள் பாய்ந்தழகுவிளங்கும்வண்ணம்மேகம்வந்து பொருந்தின அதனால் அம்மேகத்தின்கட்புரைதந்திருள்செறியுமாசெய்காட்டையுடைய நுமதுசீறூரதந்கியான்விருந்தினனாய்வந்தேற்றுக் கொள்வாயாக. எ-று நம்முடையவலலலின் செயலுமறிவியாகிய பிணிக்கு அருந்துமருந்தாய்வருவாளும் அம்பலத்தின்கட் சுவையுடனமிர்தமுமாய் விருந்தாவாது குன்றினைகூட்டம். மேகம்வந்து பொருந்தினவென்றதனால் [illegible] லருமை கூறுவாலபோன்று இரவுகுறி மாட்டெமைப்படுமென்றாம் இருடுக்கும் பனைபிறும்பென்றதனால், யாயருகீறூராகவிருந்தினேனென்றாம் மாலைவிருந்தினனாமாற்று தலறனனதென்பது தோலற விருந்தினனென்றான். [illegible] நேரிங்கு மருவியோழுகுச்சென்று பொருந்தினமேகமென்ன அருவியேர்பெற மேகம்பொருந்தினவூர் நின்னூராகலான் என்னினைப்பற்றுயானு மேர்பெற நின்னிலவந்துசேர்ந்தே னென்பது போதரும். மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - இரவுக்குறிநேர்வித்தல். (௧௮அ)

வழியருமைகூறிமறுத்தல்.

வழியருமைகூறிமறுத்தலென்பது-தலைமகனிரவுக்குறிவேண்டிநிற்ப, யாங்கள்வாழும்பதி ஏற்றிழிவுடைத்தாகலின் அவ்விடத்துநினக்குக்கிற்றைக்கு மேறற்கரிதெனத் தோழி வழியருமைகூறி மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

விசும்பினுக்கேணிநெறியன்னசின்னெறிமேன்மழைநாங் *
கசும்பினிற்றுன்னியவளைநுனழந்தாலொக்குமையமெய்யே *
யிசும்பினிற்றிந்தைக்குமேறற்கரிதெழிலம்பலத்துப் *
பசும்பனிக்கோடுமிலைந்தான்மலயத்தெம்வாழ்பதியே. (௧௮௬)

இரவரலேந்தல் கருதியுரைப்ப
பருவரற்பாங்கி யருமையுணர்த்த து.

(இ-ள்.) ஐயனே, விசும்பிறகிட்டதோ ரேணிநெறிபோலுஞ்

அடிநினைந்திரங்கலென்பது- நிலைமைநினைந்துகலவலாநின்றசெவிலி, அணிச்சப்பூமேன்மிதிப்பினும் ஆற்றாதுபதைத்துப்பொங்காநின்றவடிகள் இன்று செறிந்தபரலையுடைய காட்டின்கட்பாவிபவாறென்னோவென அவளடிநினைந்திரங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

தாமேதமக்கொப்புமற்றில்லவர்நில்லைத்தண்ணனிச்சப் *
பூமேன்மிதிக்கிற்பனைத்தடிபொங்குநங்காயெரியுந் *
தீமேலயிலபோற்செறிபரற்காணிற்சிலம்படிபா *
யாமேநடக்கவருவினையேன்பெற்றவம்மனைகளே. (உஉஅ)

வெஞ்சுரமும்மவள் பஞ்சிமெலலடியு ஞ்
செவிலிநினைந்து கவலையுற்ற அ.

(இ-ள்.) தாமேதமக்கொப்பாக வேறொருபொருளில்லாதவரது நிலைமையற்றுளிர்ந்தவனிச்சப்பூவின்மேன்மிதிப்பினும் தடிங்கிக் தலைவடிகள்பணமி கொப்புட்கொள்ளும் நங்காய், எரியாநின்றதீயின்மேறபடிந்ததவேலபோலச் செறிந்தபரலையுடைய காடடின்கட் சிலம்படையுடைய அவ்வடியைப்பாவி அரியவினையையுடையேன் பெற்ற அன்னைக்கு இன்றுநடக்கவியலுமோ! ஆன்றென்செய்கின்றாள்! எ-று.

செறிவு - ஒத்தபண்பன்று. நிலத்தைச்செறிந்தபரலெனினுமமையும் அயிலபோல்செறிபரலென்பதுபாடமாயின், அயிலபோலுஞ்செறிபரலென்றுகாக்க. இவையிரண்டற்கும் மெய்ப்பாடு-அழுகை. பயன்-ஆற்றாமைநீங்குதல். (உஉஅ)

நற்றாய்க்குணாத்தல்.

நற்றாய்க்குணாத்தலென்பது- அடிநினைந்திரங்காநின்றசெவிலி, கற்புமுதிர்வுதோன்றநின்று என்னை யிடைவிடாமற்றேடியழாநின்றபேதையதறிவு இன்றென்னைத்தேய்வியாநின்றதென்று அவள் உடன்போனமை ஆற்றாது நற்றாய்க்குக் கூறுதிற்றல். அதற்குச்செய்யுள்.

நழுவினைகையிறைசோரிற்றமியமென்றேதளர்வுற் *
றழுவினைசெய்யுநையாவஞ்சொற்பேதையறிவுவின்றோர் *
குழுவினையுய்யநஞ்சுண்டம்பலத்துக்குனிக்கும்பிரான் *
செழுவினைதான்பணியார்பிணியாலுற்றுத்தேய்வித்ததே. (உஉகூ)

முகிழ்முலைமடந்தைக்கு முன்னியதறிய
திகழ்மனைக்கிழத்திக்குள் செவிலிசெப்பிய

(இ-ள்.) தன்னைத்தழுவினை என்கை சிறிதுசோருமாயின், நாத்தகியமென்றேகருதி நைந்து உள்ளந்தளர்ந்து அழுந்தொழிலைச் செய்யும் அழகிய சொல்லையுடைய பேதையறிவு வின்னோரு திரள் பிழைக்கத் தானஞ்சையுண்டு அப்பலத்தினின்றுகூடாமல் நிறையழுடைய வளவியதாள்களைப் பணிபூதார்பிணிப்பாரும் பினியான்மிக்கு என்னைக்குறைவித்தது எ-று

உய்யறளுசுண்டென்னுஞ்சொற்கள் ஒருசொன்னீர்மைப்பட்டு உய்வித்து என்னும்பொருளவாய், ஒழுவினையெனவு மிரனடாவதற்குமுடியாயின அறிவுவக்கருத்தாவாகவு மிணையக்கருவியாகவுங்கொள்க. முன்னியது-வந்தது. மெய்ப்பாடுமயலு - அவை. (உ௨௬)

நற்றாய்வருந்தல்.

நற்றாய்வருந்தலென்பது-உடன்போனமகளைத்தேடி உண்மைவேறுமிந்று, இரேதிலன்பின்னே தன்றோழியைவிட்டு. என்னையு முன்னேறுறது, சோதாமுன்னே ஊர் அலர்தூற்ற அருஞ்சுரம்போயிருள், இனியாவென்கிளவமாற்றுவேனென நற்றாயி ரிவாற்றுதவருந்தாநிற்றல அதற்றாய்செய்யுள்.

யாழியன்மெல்மொழிவன் னனப்பி பகையொரேதிலன்பின் *
றோழியைநீத்தென்னைமுன்னேனுறந்துறுகாகன்முன்னே *
வாழியிய மூதூர்மறுகச் சென்றுளன்று வால்வளைகிய *
வாழிதந்தானம்பலம்பணியாரினருஞ்சுரமே. (உ௩)

சோடாய் கூ ற
நீடாய் வாடிய து.

(இ-ள்.) யாழோசையினியல்புபோலும் இயல்பையுடையமெல்லியமொழியையும் வலியமனத்தையுமுடையபேதை ஒருநொறு மலன்பின்னே தன்றோழியைவிட்டு, என்னைமுற்காலத்தேநீக்கி, இம்மூதூரிலுள்ளார் அலரெடுத்துக்கலங்கச் சோதார்முன்னே, திருமாலவணங்குதலான் அன்றோழியைக்கொடுத்தவனது அம்பலத்தைப்பணியாதாரைப்போல அரியசுரத்தைச்சென்றாள். இனியெங்கனமாற்றுகேன்! எ-று.

இற்செறிக்கப்பட்டபின்னர்ப் பாராமுகத்தலென்பதனை உடன்போனபின்னருணர்ந்தாளாகலின், என்னைமுன்னேனுறந்தென்றாள். வாழி-அசைநிலை. மெய்ப்பாடும் பயனும்-அவை. (உ௩)

கிளிமொழிக்கிரங்கல்.

கிளிமொழிக்கிரங்கலென்பது- பிரிவாற்றாதுவருந்தாநின்றவள், அவன்போனபோக்கன்றி, இககிள்ளை என்னெஞ்சையீராநின்றதெனத் தன்றாய்செல்வுணர்ந்து வருந்தாநின்ற கிளியினது மொழிகேட்டிரங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

கொன்னுனைவேலம்பலவற்றொழாரிற்குன்றங்கொடியோ *
ளென்னணஞ்சென்றனளென்னணஞ்சேருமெனவயரா *
வென்னனைபோயினள்யாண்டையளென்னைப்பருந்தடுமென் *
றென்னனைபோக்கன்றிக்கிள்ளையென்னுள்ளத்தையீர்கின்றதே. (

மெய்த்தகைமாது வெஞ்சுரஞ்செல்ல த
தத்தையைநோக்கித் தாய்புலம்பிய து.

(இ-ள்) கொற்றொழிலமைந்த நுனையையுடைத்தாகிய சூலவேலையுடைய அம்பலவனை வணங்காதாரைப்போல, கொடியாள் மலைநெறியையெவ்வண்ணஞ்சென்றாள் ஆண்டெவ்வண்ணந்தங்குமென்றியான்கூற, தன்றாய் செல்வுணர்ந்து மயங்கி என்னுடைய அன்னைபோயினள் அவளெவ்விடத்தாள் இனியென்னைப்பருந்துகொள்ளுமென்றுசொல்லி, என்னுடையவன்னைபோக்கொழிய அவன் கிளியென்னெஞ்சையீராநின்றது.எ-று

என்னணஞ்சென்றனள் என்னணஞ்சேருமென்று நினைத்தயராவெனக் கிளிமேலேறவுரைப்பினுமமையும் என்னன்னைபோக்கன்று நரிகின்றதிக்கிள்ளையென மறுத்துரைப்பினுமமையும்.மெய்த்தகை-மெய்யாகியகற்பு, புனையாவழகுமாம். மெய்ப்பாடும் பயனும்-அவை. (உகக)

சுடரோடிரத்தல்.

சுடரோடிரத்தலென்பது- கிளிமொழிகேட்டிரங்காநின்றவள், பெற்றவென்னோடி தன்கிளியிருந்துவருந்த இதனையுந் துறந்து அறிவுமுதிர்ந்து, அழற்கடஞ்சென்றாண்முகத்தை நின்கதிர்களான்வாட்டாது தாமரைமலர்போல மலர்ந்துவாயாகவெனச் சுடரோடிரந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பெற்றேனொடுங்கிள்ளைவாடமுதுக்குறைபெற்றிமிக்கு *
நற்றேன்மொழியழற்காடந்தாண்முகநானணுகப் *
பெற்றேன்பிறவிபெறுமற்செய்தோன்றில்லைத்தேன்பிறங்கு *
மற்றேன்மலரின்மலர்த்திரர்தேன்சுடர்வானவனே. (உகஉ)

வெஞ்சுரத்தணிக்கெனச் செஞ்சுடரவற்கு
வேயமர்தோளி தாயர்பராய அ.

(இ-ள்.) சுடராகிய பரனவனே, பெற்றவென்னோடுந் தன்கிளியினை
ந்துவருந்க இதனையுந் தறந்து அறிவுமுதிர்ந்தவிடத்புமிக்கு தன்
லர்ந்தகமலம்போலு மொளியையுடையாள் அழகையுடைய காட்டின்க
ணாடந்கவள தூமதத்தை நின்வெங்கதிர்களான்வாட்டாது, வளவிய
வண்டையுடைய தாமரைமலர்போல மலர்ந்துவாடாது, நின்னை ய
னிர்ந்தேனி னென்.எ-று. ஒருவாற்றாற்றன்னையணுகப் பெற்றேனாகி
ய யான் பிரிவறிவையப்பெறுதலான்னை செய்தவனது நில்லையி
ன் மனமிருமந்தேன்மலரினக்கூட்டுக.

பெற்றேனொடுமெய்ப்பது என்னோ வெனாம் தணிக்கவென்னு
மிறுதியகரங்குறைந்துநின்றது. மெய்ப்பாடு பயனும்- அவை.

பருவநினைந்துகவறல்.

பருவநினைந்துகவறலென்பது- சுரோமரந்து வருந்தாநின்ற
வள், கற்பிக்குமுதுபெண்டுருமிற்றிக் கானவனுக்கு செய்யத்த
குஞ்சுற்றேவல் செய்யவல்லள் வொல்லோவென்று அவளதுபருவ
நினைந்துகவலாநிற்றல். அதற்குச் செய்யுள

வைம்மலர்வாட்படை யூற்குச்செய்யுங் கற்றேவன்மற்றெங் *
மைம்மலர்வாட்கண்ணிவல்லளொல்லோ வல்லளாயின் மலைவராய் *
மொய்ம்மலர்க்காந்தளைப்பாந்தளெனக்கொண்டிருண்ணெஞ்சுருகுங் *
கைம்மலராற்கண்புதைத்துப்பலகாலுமங்கார்மயிலே. (உ௩௩)

முற்றுமுலைக்கு
நற்றாய் கவன்றது

(இ-ள்.) நில்லையானுடைய இம்மலையிடத்து மொய்ம்மலர்க்கா
ந்தளதுபூவினைப் பெரும்பாம்பென்றுகருதித் துண்ணெனன்றுமய
றந்து கைம்மலர்களாற்கண்புதைத்துநடுங்கும் எம்முடைய கா
ர்மயிலாகிய என்னுடைய மையழகுபெற்ற வாள்போலுங்கண்
ணையுடையாள் கூர்மையையுடைய மலரணிந்த வாளாகியபடைக்
கலத்தையுடையவூரனுக்குத் தான்செய்யத்தகுங்குற்றேவல்களைக்
கற்பிக்குமுதுபெண்டுருமின்றித் தானேசெய்யவல்லளாமோ! ஆ
ன்றென்செய்கின்றாள். எ-று.

மற்றென்பது அசை. மொய்ம்மலர்க்காந்தள்-முதலாகிய தன்
பொருட்டேற்றவடையடுத்துநின்றது. பிரிவினாற் மகண்மேற்செ
ல்லுங்கழிபெருங்காதலளாதலின், எங்கார்மயிலென்றும், என்வாட்

கன்னியென்றும், பல்காற்றன்னோடுத்துக்கூறினாள். நில்லையான் மலைவாய்ப் பதைக்குமெனவியையும். நோக்கென்னுமலங்காரமாய்ப் பாம்பிற்கஞ்சுமயிலென இல்லுணமடுத்துவந்ததென்பாருமுளர். மெய்ப்பாடும் பயனும்-அவை. (உகுகு)

நாடத்துணிதல்.

நாடத்துணிதலென்பது - பருவநினைந்துகவலாநின்றதாய்க்கு, நீ கவன்றுமெனிய வேண்டா, யான் அவள்புக்கவிடம்புக்குத் தேடி வேனெனக்கூறி, செவிலி அவளை நாடத்துணியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வேயினதோளிமெலியல்விண்ணோர்தக்கன்வேள்வியின்வாய்ப் *
பாயினசீர்த்தியனம்பலத்தானைப்பழித்துமும்மைத் *
தீயினதாற்றலைசெங்கண்ணிழந்துதிசைதிசைதாம் *
போயினவெல்லியெல்லாம்புக்குநாடுவன்பொன்னினையே. ()

கோடாய் மடந்தை பை
நாடத் துணிந்த னு

(இ-ள்.) விண்ணவர் தக்கனது வேள்வியில்கட் பாரத்தபுகழையுடையனாகிய அம்பலத்தானை யிகழ்ந்துகூறி மூன்றன்கிறுகுதியாகிய தீயினதுவலியையுந் தலையையுங் கண்ணையுமிழந்து திசைதிசைதோறுந் தாம்போயினவெல்லியெல்லாம் புகுப் பொன்னினைத்தேடுவேன், வேயின்றன்மையவாகிய தோள்களை யுடையாய், நீ மெலியவேண்டா. எ-று.

கொக்கபொருட்குந் தொகுதிக்கு மொற்றுமையுண்மையின், ஆற்றன்முதலாயினவற்றையிழந்தலை விண்ணோர்மேலேற்றினார். திசைதிசைதென்பதூஉம்பாடம். மெய்ப்பாடு- அழுகையைச்சார்ந்தபெருமிதம். பயன்- நற்றாயையாற்றுவித்தல். "ஏடப் பேரூர்ச் சேரியுஞ்சுரத்துந்-தாமே செல்லுந் தாயரு முளரோ,, எனாராகலிற்செவிலிக்கடப்பெறும். அலங்காரம்-முயற்சியிலக்கு. ()

கொடிக்குறிபார்த்தல்.

கொடிக்குறிபார்த்தலென்பது - செவிலிநாடத்துணியாநிற்ப, அவ்விருவரையு மிப்பொழுதேவரும்வண்ணம் நீகரைந்தால், நினக்கு உணங்கலையஞ்சாதிருந்துண்ணலாம் அதுவன்றித் தெய்வத்தினருளவத்தநிணத்தையுடையபலியையும் நினக்கேவரைந்துவைப்பேன் அவ்வாறுகரையாவாயாகவென நற்றாய் கொடிக்குறி பாராநிற்றல். அதற்குச்செய்யுள்.

பணங்களஞ்சாறும்பருவாவார்த்தவன்றிக்லையன்ன
மணங்கொளஞ்சாயலுமன்னனுமின்னேவாக்கைநாந்தா
லுணங்கலஞ்சாதுண்ணலரமொண்ணினைப்பலியொக்குவன்மாக்
குணங்களஞ்சாற்பொலியுற்றலசேட்டைக்குலக்கொடியே. ()

நற்றாய் நயந்து
சொற்புட் பராய து.

(இ-ள்.) பெரிய குணங்களேந்தால் விளங்கும் நல்லசேட்டை யையுடைய சீரியகொடியே, படங்களேந்து ஆடுநிற்கும் பரிய வரவைச்சாத்தியவனது நிலையைப்போலும் நறுநாற்றம்பொ ருந்திய அழகியமென்மையையுடையாருமன்னனும் இப்பொ ழுதேவரும்வண்ணம்நீயழைத்தால்,பாமோப்பாமையின்உணங்க லையஞ்சாதிருந்து நினக்குண்ணலாம் தெய்வத்திற்குக்கொடுத்த நல்லநினத்தையுடையபலியையும் நினக்கேவணாந்துவைப்பேன். அவ்வாறு கரைவாயாக. எ-று.

ஒக்குவலென்பதற் குத்தருவேனென்றுரைப்பினுமமையும். குணங்களேந்தாவன- மறைந்தடணர்ச்சித்தாதலும், கலங்காமையும், பொழுதிறவாதிடம்புகுதலும், நெடுக்கச்சாண்டலும்,மடியின்மை யும். சேட்டை - உறுப்பைப்புடையெயர்த்தல். கொடி-காக்கை. நலசேட்டை குலக்கொடியேயென்றுபாடமோதி, சேட்டையா கியதெய்வத்தின் நல்லகொடியேயென்றுரைப்பாருமுளர். சொ ற்புட்பராயது - வருவதுசொல்லுதலையுடைய புள்ளை வேண்டிக் கொண்டது. (உகுரு)

சோதிடங்கேட்டல்.

சோதிடங்கேட்டலென்பது-கொடிநிமித்தம்பெற்று இக்காவ ன்மனையின்கண்ணே யாங்கள்மணஞ்செய்ய அவ்விருவரையும் இ ன்னும்பெறுமாறுண்டாயின், ஆராய்ந்துசொல்லுமினென அ திவாளரைக்கிட்டிச செவிலி சோதிடங்கேளாநிற்றல். அதற்குச் செய்யுள்.

மூன்னுங்கடுவிடமுண்டதென்றிலைமுன்னேனருளா *
லீன்னுங்கடியிக்கடிமனைக்கேமத்தியாமையா *
மன்னுங்கடிமலர்க்கூந்தலைத்தான்பெறுமாறுமுண்டே *
லுன்னுங்கடுதின்றியோதுங்கணுன்மறையுத்தமரே. (உகுரு)

சித்தந்தளர்ந்து தெடுங்கோடா
உய்த்துணர்வேரரா யுளமினைந்து

(இ-ள்) பரந்து செல்லுங் கடியவிடத்தையுண்ட தென்றிலைத் தண்ணறுங்கிய எல்லார்க்குமுண்ணுயவனதருளால் இக்காவலையுடைய மனையின்கண் மணத்தை யாஞ்செய்ய நிலைபெற்றகடிமலரை யுடைய கூந்தலையுடையாளை இன்னுந்தான் பெறுமாறுமுண்டாயின், நான்மறையையுடைய தலைவீர், நும்முள்ளத்தாராய்யின்கள், ஆராய்ந்து ஒற்றந்தேர்ச்சொல்லுமினகள். எ-று

அருளாற்பெறுமாறுமுண்டேலெனவியையும். தேவர்சென்றிரப்ப நஞ்சைநினைத்தலுங் மகம்மலர்க்கண் வந்திருந்ததாகலின், கருதப்பமும் செவ்விடமெனினுமமையும். யாங்கடியமரத் தான்கடிமலர்க்கூந்தலைப் பெறுமாறுமுண்டேலென்றுரைப்பினுமமையும். இப்பொருட்குந் தானென்றது தலைமகனை தீதின்றியுண்ணுங்கொனினுமமையும் உய்த்துணர்வோனை- வெளிப்படாதபொருளையேனுக்களாலுணர்வோனை. இவையிரண்டற்கும் மெய்ப்பாடு-மருட்கை. பயன்-எதிர்காலச்செய்கையுணர்தல். (உசு)

சுவடுகண்டறிதல்.

சுவடுகண்டறிதலென்பது-சோதிடம்பெற்றுச்செல்லாநின்றவள், இம்மூரம்பின்கட்கிடந்த இவை தீவினைவேனெடுத்துவளர்த்த மாணிழைசீறடி,உவை அக்கள்வனடியாமெனச் சுவடுகண்டறியாநிற்றல். ஏதற்குச்செய்யுள்.

தெள்வன்புனற்சென்னியோனப்பலஞ்சிந்தியாரினஞ்சேர் *
மூள்வன்பரன்மூரம்பத்தின் முன்செய்வினையேனெடுத்த *
வொள்வன்படைக்கண்ணிசீறடியிங்கிவையுங்குவையக் *
கள்வன்பகட்டுரவோனடியென்றுகருதுவனே. (உகஎ)

சுவடுபடு கடத்து ச்
செவிலிகண் டறிந்த து.

(இ-ள்.) தெள்ளியபெரியபுனலையுடைத்தாகிய சென்னியையுடையவனதம்பலத்தைக் கருதாதாரது இனஞ்சேரும் முள்ளையுடையவியபரலையுமுடைய இம்மூரம்பின்கட்கிடந்த இவை மூற்காலத்துச்செய்யப்பட்ட தீவினையையுடைய யானெடுத்துவளர்த்த ஒள்ளியவலியபடைபோலுங்கண்ணினையுடையாளுடைய சிறியவடிச்சுவடாம். இனி உவற்றை அக்கள்வனாகிய பகலிபோலும் வலியையுடையானுடைய அடிச்சுவடென்றுய்த்துணராநின்றேன்-எ-று

இங்கிவை உங்குவையென்பன ஒருசொல். (உகஎ)

சுவடுகண்டிரங்கல்

சுவடுகண்டிரங்கலென்பது-சுவடுகண்டறிந்து அவ்விடத்தேநின்று தவிசின்மேன்மிதிப்பினும் பரதத்துக்கொப்புட்கொள்ளாநின்ற இ-கான்மலர், இன்றொருவிடலைபின்னேபோதற்குத்தகுங்காலை எவ்வாறொத்தனவென அடிச்சுவடுகண்டிரங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

பாலொத்தநீற்றம்பலவன்கழல்பணியார்பிணிவாய்க் ✱
கோலத்தவிசின்மிதிக்கிற்பதைத்தடிகொப்புள்கொள்ளும் ✱
வேலொத்தவெம்பரற்கானத்தினின்றோர்விடலைபின்போங் ✱
காலொத்தனவினையேன்பெற்றமாணிழைகான்மலரே. (உகஅ)

கடத்திடைக்காரிகை யடிக்கலங்கண் ௫
மன்னருட்கோடா யின்னலெய்திய ௬.

(இ-ள்.) கோலத்தையுடைய தவிசின்மேன்மிதிப்பினும் பாலொத்தநீற்றையுடைய அம்பலவனது கழல்களைப்பணியாதாரது வருத்தம்போலும்வருத்தம்வாய்ப்பதறிக்கி அவ்வடிகள்பன்றிகொப்புளங்கொள்ளும், தீவினையேன்பெற்ற மாணிழையுடைய அத்தன்மையவாகிய காலாகியமலர்கள் இன்று வேலையொத்த வெய்யபரலையுடைய காட்டின்கண் ஒருவிடலைபின் போதற்குத் தகுங்காலையொத்தன, இதனையெவ்வாறு ஆற்றவல்லவாயின. எ-று.

தவிசு - நடக்குமுதலாயின. கான்மலரென அவற்றைமலராகக் கூறினமையாற் காலொத்தனவெனவுவமித்தாள். பிணியாயென்றும், பிணிபோலென்றும், காலொத்திராவென்றும், பாடமோதுவாருமுளர். காலென்றது-அடியை. (உகஅ)

வேட்டமாதரைக்கேட்டல்.

வேட்டமாதரைக்கேட்டலென்பது-சுவடுகண்டிரங்காநின்று, அதுவழியாகச் செல்லாநின்றவள், இவ்வாறு அறியாப்பருவத்தளாய்த் தனக்கிணையில்லாதசுரத்தின்கண் அயலானொருவனுடன் போந்தாள் அவளை நீகண்டாயோவென வேட்டமாதரைக்கேளாநிற்றல் அதற்குச்செய்யுள்.

பேதைப்பருவம்பின்சென்றதுமுன்நிலைனைப்பிரிந்தா ✱
ஓதைக்கலமரும்வல்லியொப்பான்முத்தன்றில்லையன்னா ✱
மோதிற்சுரந்தயலானொடுன்றேகினள்கண்டனையே ✱
போதிற்பொலியுந்தொழிற்புலிப்பற்றூற்பொற்றொடியே. ()

மென்மலர்கொய்யும் வேட்டமாதரை ப்
பின்வருசெவிலி பெற்றிவிளைய ௩.

(இ-ள்) பூவின்கட்பொலியுந்தொழிலினையும், புலிப்பல்லையுடையகழுத்தினையுமுடைய பொற்றொடியாய், பேதையாகியபருவங்கழிந்தது சுரம்போந்தபின், இவ்வாறறியாப்பருவத்தளாய் மூன்றிற்கணென்னைச்சிறிது நீங்கிற்றமியளாய், நடுங்குதலான் ஊனதையுற்றதழலும் வலியையொப்பாள், மூத்தனது தில்லையையொப்பாள், அவள் வெம்மைமுதலாயினவற்றாற்றலக்கென்னு மியல்பில்லாதசுரத்தின்கண் அயலானொருவனோடு இன்றுபோயினள், அவளை நீகண்டாயோ? அவளெவ்வண்ணம்போயினள்? எ-று.

தில்லையுன்றொன்பதூஉம்பாடம். பெற்றுவிளைய தென்பதூஉம்பாடம். (உ௩௩)

புறவொடுபுலத்தல்.

புறவொடுபுலத்தலென்பது - வேட்டமாதரைக்கேட்டு அறவழியாகச்செல்லாநின்றவள், எதிலனுமாய்த் தமியனுமாயவன்சொற்றுணையாக வெய்யசுரத்தே மாதர் சென்றால் தில்லையுடையபுறவே, இது நினக்குத்தகுதியன்றென்று கூறிற்றிலை நீ வாழ்வாயாகவெனப் புறவொடுபுலந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

புயலன்றலர்சடையேற்றவன் றில்லைப்பொருப்பரசி ✻
பயலன்றனைப்பணியாதவர்போன்மிகுபாவஞ்செய்தேற் ✻
கயலன்றமியனஞ்சொற்றுணைவெஞ்சுரமாதர்சென்று ✻
லியலன்றெனக்கிற்றிலைமற்றுவாழிவெழிற்புறவே. (உ௩௪)

காட்டுப் புறவொ ௫

வாட்ட முரைத்த ௩.

(இ-ள்.) நீரானன்றுவிரிந்த சடையின்கணேற்றவன் தில்லைக்கணுளனாகிய பொருப்பிற்கரசியது கூற்றையுடையான், அவன்றன்னைப பணியாதாரைப்போல மிக்கபாவத்தைச்செய்தேற்கு எதிலனுமாய்த் தமியனுமாயவனது அழகியசொல்லே துணையாகமாதர் வெய்யசுரத்தைச் சென்றால், எழிலையுடையபுறவே, இது தகுதியன்றென்றுகூறிற்றிலை, வாழ்வாயாக. எ-று.

இதுகூறிற்றாயின் அவள்செல்லாளென்பது கருத்து பொருப்பரையன் மகளாதலிற் பொருப்பரசியெனத் தந்தைகிழமை மகட்குக்கூறப்பட்டது. பாவஞ்செய்தேற்கியலன்றெனக்கிற்றிலையெனக்கூட்டுக. வெஞ்சுரமாதலகண்டாலென்பது பாடமாயின்,

ஆதலென்பதனை எல்லாவற்றோடுங்கூட்டுக. வெஞ்சுரம்போதல்கண்டாலென்பது உம்பாடம். (௨௮௪)

குரவொடுவருந்தல்.

குரவொடுவருந்தலென்பது - புறவொடுபுலந்து போகாநின்றவள், என்னுடையபரவை நின்னுடையமுன்னே இக்கொடுஞ்சுடத்தைக் கடப்பக்கண்டுநின்றும், இன்னவாறுபோலுமென்று எனக்குவாய்திறக்கின்றிலை, இது நினக்குநன்றோவெனக் குரவொடு வாடியுரையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பாயும்விடையோன்புலியூரணையவென்பாவைமுன்னே *
காயுங்கடத்திடையாடிகடப்பவுங்கண்டுநின்று *
வாயுந்திறவாய்குழையெழில்வீசவண்டோலுறுத்த *
நீயுநின்பாவையுநின்றுநிலாவிடுநீள்குரவே. (௨௮௫)

தேடிச்சென்ற செவிலித்தாய நீ
ஆடற்குரவொடு வாடியுரைத்தது.

(இ-ள்) குழை எழிலைச்செய்ய வண்டுகள் நின்பாவையையோலுறுத்த அப்பாவையுநீயும் நின்றுநிலாவும் பெருங்குரவே, பாய்ந்து செல்லும்விடையையுடையவனது புலியூரையெய்க்கும் என்னுடையபாவை நின்முன்னே கொதிக்குங்கடத்தின்கண் அசைந்து அதனைக்கடப்பவும் விலக்காதுகண்டுநின்று, அத்துணையேயன்றி இன்னவாறு நிகழ்ந்ததென்று எனக்குவாயுந் திறக்கின்றிலை, இது நினக்குத்தகுமோ! எ-று.

நிலாவினையென்பது பாடமாயின், வழிச்சுரஞ்செல்லக்கண்டும் வாய்திறந்து ஒன்றுங்கூறாது குழைஎழிலைவீச வண்டோலுறுத்தநின்று விளங்கினவென்று கூட்டியுரைக்க குழைஎழில் வீச வண்டோலுறுத்தவென்பன - அணியாகியகுழைமுள்ளங்கொண்டு என்பதனுஞ் செவிலியாரோலாட்டவென்பதனுந் தோன்ற நின்றன. இப்பாட்டைத்திற்கும் மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றாமைதீர்குதல். (௨௮௬)

விரதியரைவினவல்.

விரதியரைவினவலென்பது-குரவொடுவருந்திச்செல்லாநின்றவள், பத்தியர்போல ஒருபெத்தி தன்பின்னேவர ஒருபெருந்தகை முன்னேசெல்லக் கண்டீரோவென விரதியரைவினவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சுத்தியபொக்கணத்தென்பணிகட்டங்கள்சூழ்ந்தசடைவெண்
பொத்தியகோலத்தினீர்புலியூரம்பலவர்க்குற்ற
பத்தியர்போலப்பணைத்திறுமாந்தபயோதரத்தோர்
பித்தித்தற்பின்வாமுன்வருமோவொர்பெருந்தகையே. (உ௪உ)

வழிவருகின்ற மாவிரதிய
மொழிமின்களென்று முன்னிமொழிந்த து.

(இ-ள்.) சுத்தியையடைத்தாகிய பொக்கணத்தையும், என்பாகி யுவணியையும், கட்டங்களென்னும் படைக்கலத்தையும், சூழ்ந்த சடையினையும், மெய்ம்முழுதும்மூடியவெண்கோலத்தையுமுடையீர், புலியூர்க்கணுண்டாகிய அம்பலத்தையுடையவரிடங்கண் மிக்கபத்தியையுடையபாலைப்போலப் பெருத்திறுமாந்த முலைகளையுடையாளொருபேதை தனக்குப்பின்வர ஒருபெருந்தகை முன்னேவருமோ? உமையின். ௪-து.

சுத்தி - பிறர்க்குத்திருநீறுகொடுத்தற்கு இப்பிவடிவாகத் தலையோட்டானமைக்கப்படுவதொன்று. என்பணியென்புழி இயல்பும், கட்டங்களென்புழித் திரிபும், விகாரவகையாற்கொள்க. கடங்களென்பது-மழு இது கட்டங்களெனநிற்கிறது. வெண்கோலம்-நீறணிந்தகோலம். பத்தியர்க்குப் பணைத்தல்-உள்ளத்துநிகழும் இன்புறவால்மேனிக்கண்வருமொளியும், ஓங்காமையும். இறுமாத்தல்-தாமாதவுள்ளத்தராய்ச் செம்மாத்தல். முலைக்குப் பணைத்தல்- பெருத்தல். இறுமாத்தல்-சுரந்துதல். வெண்பத்திய கோலத்தினீரென்றபாடத்திற்கு வெண்ணீற்றுப்பத்திபடவிட்டமுண்டத்தையுடையகோலமென்றுணர்க. (உ௪உ)

வேதியரைவினவல்.

வேதியரைவினவலென்பது-விரதியரைவினவி, அதுவழியாகச்செல்வாரின்றவள், 'மான்போலுநோக்கினையும், மயில்போலுஞ்சாயலையுமுடையமான் ஓரேந்தலோடு நும்மெதிரே வரக்கண்டீரோவென வேதியரைவினவுவாளிற்றல். அதற்குச்செப்புள்.

வெதிரேய்சுரத்துமென்றோலேய்சுவல்வெள்ளைநூலிற்கொண்மூ
வதிரேய்மறையினிவ்வாறுசெல்வீர்தில்லைவம்பலத்துக் *
கதிரேய்சடையோன்கரமாரெனவொருமான்மயில்போ *
லெதிரேவருமேசுரமேவெறுப்பவொரேந்தலொடே. (உ௪௯)

மாதின்பின் வருஞ்செவி லி
வேதியரை விருப்பிவினவு து.

(இ-ள்) மூங்கிற்றண்டுபொருந்தியகையினையும், மெல்லியகலை தோலினையுத்தசுவலினையும், வெள்ளைநூலினையும், கொண்டமூவினை முழக்கம்போலுமறையொலியினையுமுடைய இந்நெறிச்செல்வீர், ஒருமான், தில்லையம்பலத்தின்கணுறைவாகிய மதிசேர்ந்தகடையையுடையவனது காத்தின்மான்போல மருண்டநோக்கத்தளாய், மயில்போலவசைந்த சாயலளாய், வருத்தஞ்சுரத்தானே கண்டுதன்புற ஓரேந்தலோடு நும்மெதிரேவந்தாளோ, உரைமின். எ-று.

தோலேய்ந்தசுவலின்கணுண்டாகிய வெள்ளைநூலினையுமெனினுமமையும். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு - அது. பயன் - தலைமகளைக்காண்டல். (உசரு)

புணர்ந்துடன்வருவோரைப்

பொருந்திவினவல்.

புணர்ந்துடன்வருவோரைப்பொருந்திவினவலென்பது - வேதியனாவினவி, அதுவழியாகச்செல்லாநின்றவள், அவளைக்கண்டு, என்னாற்றேடப்படுகின்றார் மீண்டார்களென்றுகருதி மகிழ்ந்தேன், அதுவிடக்க, இவ்வாறுநும்மோடொத்தகொவைமுக்கத்தினராய் மூன்றேயிருவரைப்போகக்கண்டீரோவெனப் பணர்ந்துடன்வருவோரைப்பொருந்திவினவாதிற்றல். அதற்கு மேற்கோள்.

மீண்டாரெனவுவந்தேன்கண்டுநு[illegible]மேகவே *
பூண்டாரிருவர்முன்போயினரோபுலியூரனைநீ *
மூண்டானருவகையாளியன்னார்க்கணிடேனபலே *
தூண்டாவிளக்கனையாயென்னையோவன்னைசொல்லியதே (உஎச

புணர்ந்துடன்வரும் புரவலனொருபா[illegible]ல்
அணங்கமர்கோதையை யாராய்ந்த[illegible] ஙு.

(இ-ள்) மீண்டாரென-போயினரே. என்பது நும்மைக்கண்டு என்னாற்றேடப்படுகின்றார் மீண்டாரென்றுகருதி மகிழ்ந்தேன், இவ்வாறுநும்மோடொத்தமேதகவையுடைத்தாகிய இக்கொவைமுக்கத்தையேபூண்டார் இருவர் முன்னேபோயினரோ? உரைமின். எ-று. புலியூர்-சொல்லியதே.என்பது. புலியூர்க்கண் ஒருபொருளாகமதிக்கு என்னைநின்றுண்டவனது கிட்டுதற்கரியமலையிற் அழகையொப்பாளை யாங்கண்டேன், தூண்டவேண்டாத விளக்கையொப்பாய், அவனதலை அன்னைசொல்லியதுயாது? அதனையவட்குச்சொல்லுவாயாக. எ-று

அருவரைக்கட்கண்டேனெனக் கூட்டினுமமையும். ஆவியன்னாளென்றதனால், நின்மகட்குவருவதோரிடையூறில்லையெனக் கூறினாளும். நுண்டாவிளக்கு- இலவொருளுவமை. மணிவிளக்கெனினுமமையும். அணங்கமர்கோதையை-தெய்வநாற்றமமர்ந்தகோதையையுடையாளை. ஆராய்ந்தது-வினையுடையுமெய்ப்பாடு-உருவகவயச்சார்ந்தவுவகை. பயன்-அது. (உ-ச)

வியந்துரைத்தல்.

வியந்துரைத்தலென்பது- புணர்ந்துடன் வருவோரைவிளாவி, அதுவழிபாகப்போகாநிற்றவள், தனமகணின்றநிலையையும், அவன்கையின்வேலினை வேங்கைபட்டுக்கிடந்த கிடையையுங்கண்டு, வியந்துகூறுதற்றால். அதற்குச்செய்யுள்.

பூங்கயிலாயப்பொருப்பன் திருப்புலியூரதென்னத் *
தீங்கையிலாச்சிறியாணின்றதிவ்விடஞ்சென்றெதிர்ந்த *
வேங்கையின்வாயிர் வியன்கைப்பறித்துக்கிடந்தவாறு *
வாங்கயிலாற்பணிகொண்டதுபின்டிறலாண்டகவிய. (உ-சு)

வேங்கைபட்டதும் பூங்கொடிநிலையும்
நாடாவருப் கோடாங்கூறிய அது.

(இ-ள்.) பொலிவினையுடையமலையாயகியபொருப்பையுடையவனது திருப்புலியூரதனைப்போலக் குற்றத்தையுடையவளல்லாத ஏன்கிறியாள் நின்றது இவ்விடத்து, சென்று தன்னோடெதிர்ந்தபுலியின் வாயின்கட் பெரிய கைப்பட்டு துவிழுந்துகிடந்தலறும்வலிண்ணந் திண்ணிய திறலையுடைய ஆண்டகவிலார்டணிகொண்டது அவ்விடத்து, ஏகுதலால், அவளது பாயினதெதிரியி ஏவ்வ-று

தீங்கையிலாவெ பெழுதி இன்மை- உடலைமைக்கமறு யாகிய வின்மை. மகளடிசுவடுமிடைந்தலழிச் சென்று நிற்றனளாகவிலி, அதனை இவ்விடமென்றும், வேங்கைபட்டவிடத்தையவ்விடமென்றுங்கூறினாள். அவ்வகை தன்காதலியையுணராமல் அதுவருமவழிச்செல்பேற்றுணதவிற்சென்றென்றாள். சென்றுபணிகொண்டதெனவிலையப. மெய்ப்பாடு- அது. பயன்- ஆற்றுமடிதீர்தல்.

இயைபெடுத்துரைத்தல்.

இயைபெடுத்துரைத்தலென்பது- வேங்கைபட்டதுகண்டெய்ந்து, அதுவழிபாகச்செல்லாநின்றவள், எதிர்வருவானை வருவையவ்வ ஏ கூறுதி பறவைகளுன்றதிலிடக்கண்டோம், அவ்வாறு முற்கூட்டமுன்னையுந்துசெல்ல நின்றமைகண்டு, எல்லாவல்லாமுடைய

வாகிய தன்காதலியோடு ஒருவடிவாய்விளையாடும் புயிபூரனென்
றேகருதி, யாங்கெல்லாமொத்துமிகவும் அவ்வழியிலுந் தொழு
தினைந்தாம், அந்நன்மைசொல்லலாவதொன்றன்றென எதிர்வரு
வார் அவரியைபபித்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மிகவொருதிறமுறாபுரம்வெள்ளைசெம்படுமின்ன *
வொன்றொடுமிடை புடையாளொடொன்றாம்புவிபூரனென்றே *
நன்றொவிதிலித்தொழுவற்றனமெனனதோநல்லமைதால *
ஒன்றுதிடைகளடைனபமனைநீ சொன்னசொல்கையரே (உ௪௭)

பேசியிழையோடு செம்மனபோத ர
ஆயிலமுபயகனெல் றுயிர்த்தேமென்றது.

(இ-ள்) அன்றாடு, நீகூறிபகோட்பாட்டையுடையாளாக் ஞன்ற
தீரிலைகளை நீ-ருஅவ்விருவரு மிலயந்துசேறலின், மின்றிரளு
ளடாகாதின்ற அவனதுகருதும் அவளதுநிலைப்பும், அவனது
வெளியாகிய அவளதுசெம்படுப்பு விளங்க, ஒருவடிவையொத்
தவ்விருவரையுடையளாகிய தன்காதலியோடொரு வ
டிவாயிலையடைபுயிபூரனன்றே கருதி, யாங்கெல்லாமொத்
துப் பொன்னாடு முலைகளிதழுநினைந்தேம், அந்நன்மையெத்த
னைமையதோநன்மைதால! அதுசொல்லலாவதொன்றன்று. எ-று

எனனதோர்நன்மையென்றவுணர்ன், ஆலிதறமாதலுங்கு றிப்பட்
டதும் தரனெனபது-அதைநிலை. கொள்ளைகடாரெனறு முரு
புவிபோரவலைபாடிலிருகுது. எனனதன்னையதா மெனபது உம்
பாடு பெய்ப்பாம் உலகை. பயன்-செயலிலை யெனறிவருவார்
ஒறுக்கிலிலை. (உ௪௭)

மீளவுரைத்தல்.

மீளவுரைத்தலென்பது- இயைபெய்துரைத்தலிற் றலைவி
ருவ ஓரிடமாகவின்றிப்போய்த் திருவிலையினெல்லையைச் சென்றணை
வர், பிரிந்தி செல்வதன்றுமீள்வதேகாரியமெனத் தோழிசெலவா
நிற்றலைவிலையுமீளகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மீளவுஞ்செல்வதன்றன்னாயிவெங்கடத்தந்தடமரக் *
மீளவுஞ்செய்தமிறவோடெரிந்கிளர்கெண்டையன்ன *
நீளவுஞ்செய்தகண்ணாளிந்தெறிஞ்சாரநீத்தியெம்மை *
யாளவுந்செய்தீவன்றிலையினெல்லையுணுதவரே. (உ௪௮)

கடிகடங்கடந்தநமை கைதாடருரைத் ௮
நடைகல்மிலமீன்டு நடமினென்ற ௮.

(இ-ள்) புடைபெயராநின்றகெண்டைபோலும் நீடலைச்செய்தகண்ணையுடையாள், வெய்யவிச்சுரத்தின்கண், அத்தன்மைத்தாகியகடமாவைப்பிளத்தலைச் செய்த கிழவோனோடும் இந்நெடியசுரத்தைநீந்தி, அவ்விருவரும் ஓரிடக்கணின்றிப்போய், எம்மையர்ளுதலைச்செய்வனவுதில்லையினெல்லையைச்சென்றணைவர், அதனால், அன்னாட்செயற்பாலது மீள்வதே, சேறலன்று எ-று

சுரங்கடத்தல் இருவர்க்குமொக்குமெனினும், நீள்வதுசெய்தகண்ணையுடையாளென்றமேற்கூறியாங், வெஞ்சுரத்திற்கவள் பஞ்சிச் மெல்லடிகளாவாகலின். அதனாகுவதொன்டழிதக்கலைமகள் தொழிலுமுண்மையின், நீந்தியென்றுமெச்சம், வினைமுதல்வினைகொண்டதாம், * திரித்துரைப்பாருமுளர். கிழவோனொடுமென்றதனால், அவன்பற்றுக்கோடாக நீந்துவளென்பது விளக்கினார். இனிஓடுவை-எண்ணெறிவாக்கியுரைப்பினுமமையும் உம்மை-அசை நிலை. (உ௱௪௭)

உலகியல்புரைத்தல்.

உலகியல்புரைத்தலென்பது -மீளக்கூறவும் மீளாதுகவலாநின்றசெவிலிக்குஞ்சந்தனமுமுத்துஞ் சங்குந் தாம்பிறந்தவிடங்கட்கு யாதும்பயன்படாது, தம்மைவிரும்பியணிவாரிடத்தே சென்று பயன்படாநிற்கும், அதுபோலமகளிருந் தாம்பிறந்தவிடத்துப்பயன்படார், நீகவலவேண்டாவென, உலகியல்புகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

அரும்பிவர்சந்துந்தொடுகடன்முத்தும்வெண்சங்குமெங்கும் *
விரும்பினர்பாற்சென்று மெய்க்கணியாம்வியன் கங்கையென்னு
பெரும்புனல்சூடும்பிரான்கிவன்சிற்றம்பலமனைய [ம்
கரும்பனமென்மொழியாருமந்தீமையர்காணுதற்கே (உ௱அ)

செவிலியது கவலைதீ ர
மன்னியவுலகியன் மூன்னியுரைத்த து.

(இ-ள்.) நறுநாற்றத்தாற்சுரும்புசென்று பாரக்குஞ்சந்தனமுந் தொட்கப்பட்டகடலின்முத்தும் வெண்சங்கும் எத்தேயத்துந்தாம்பிறந்தவிடங்கட்கு யாதும்பயன்படாது, தம்மைவிரும்பியணிவாரிடத்தே சென்று அவர்மெய்க்கு அணியாகாநிற்கும். அதன்றக

* "முதலில மூன்றும் வினைமுதன முடியின்...என்புழிப் பொதுவாகாது வி[illegible]தற்கே வினையாதல்வேண்டுமென்னும் வகையானறியற்பாலது வினைமுதல் வினை[illegible] [illegible]

நிகையென்றுநின்ற பெரும்புலவர்க்குநிம்மிராகி, வென், அரனது சிற்றம்பலத்தையொக்குங் கரும்புபோலும் மெல்லிய மொழியினையுடையமகளிரும், ஆராய்வார்க்கத்தன்மையர், நீ கவலவேண்டா. எ-று.

சங்கு-மணியாயும் வளையாயும் அணியாம். எங்குமணியாமெனவியையும் சிற்றம்பலத்துமன்னுங் கரும்பனமென்மொழிபாரென்பதுபாடமாயின், சிற்றம்பலத்தையுடைய நிலையிளைகாக்கரும்புபோலு மென்மொழியையுடையரென்றுமாம். ௨௪௮)

அழுங்குதாய்க்குரைத்தல்.

அழுங்குதாய்க்குரைத்தலென்பது-உலகியல்படகூறவும் மீளாதுநின்று, தானெடுத்துவளர்த்தமைசொல்லிக் கவலாநின்ற செவிலியை, முன்னிலைப்புறமொழியாக, இவர்தாம்இலவிக்கணெடுத்துவளர்த்தவர்போலும், அவர்போய்த் தம்மையிருவரையுங் கூட்டுவித்தகெய்வப்பதியாகிய நிலையிடத்துப் பழனங்களைச்சென்றணைவரெனத் தம்முட்கூறுவார்போன்று கூறி, மீடமிகவொண்டுபோகாநிற்றல். அதற்குச் செய்யுள்.

ஆண்டிலெடுத்தவராமிவர்காமவரல்குவர்போய்த் *
தீண்டிலெடுத்தவர்தீவினைதீர்ப்பவன்றிலையின்வரா *
தூண்டிலெடுத்தவராதெக்கொடெற்றப்பழம்விழுந்து *
பாண்டிலெடுத்தபலர்ஞமலைகூழும்பழனங்களே. (௨௪௯)

செழும்பணையணைந்த ஸமை
அழுங்குதாய்க்குரைத்த து.

(இ-ள்) இவர்தாம் அவ்விடத்து இவ்வின்கணெடுத்துவளர்த்தவர்போலும், யாவராயினுந் தம்மையணுகி அவர் நாகத்தழுந்தாமலெடுத்தவரது தீவினையைத்தீர்ப்பவனது நிலையின்கண், தூண்டிலைவிழுங்கியபலரால் தெங்கொடுமோத, அரன்பழம்விழுந்து இண்ணம்போலும்பூக்களையுயர்த்தியபலவாகிய தாமரையகழிழிக்கும்பழனங்களை அவர்சென்றுசேர்வர். இனிப்பாரிடரில்லை. எ-று.

திருவிலையின்வரப்பழனங்களெனவியையும் ஆண்டிலெடுத்தவராமிவரதாமென்று தமமுடகூறிப்பின்செவிலிக்குந் கூறினாராக வுமாகக இவ்வாறுபகரானது, செவிலிக்கட்ப முழுவதுந் தமமுட்கூறினாராகவுரைப்பினுமமையும் தூண்டிலாமெனமிகவப்படட

வாரானெனினுமமையும். இவைமூன்றற்கும் மெய்ப்பாடு -பெருமிகம் பயன்-செவிலிக்குலவியைபுகூறி அவளைமீள்வித்தல்,நில்லாவனைதொட்டு இதுகாறும்வரப் பாலைத்திணைகூறியவாறறிக உசன உடன்போக்கு முற்றிற்று.

வரைவுமுடுக்கம்.

இவ்வாறுடன்போக்கு நிகழாதாயின்,வரைந்து கோடனிகழும். அதுநிகழுமிடத்துத் தோழியான் வரைவுமுடுக்கப்படும் வரைபொருட்பிரிந்தவற்றும் நிகழுமென்ப. அவற்றுள்,

வரைவுமுடுக்கம்வருமாறு, சூத்திரம். வருத்தங்கூறலவன்மறுத்துணர்த்தல், வுள்ளதுகூறலேதங்கூறல், பகல்வரலென்றலொழுதிரந்துணர்த்தல், சிறைப்புறங்கூறல் மந்திமேல்வைத்தல், கண்டியிலாமை கண்டாருணர்த்தல், பகலுடம்பட்டாள்போன் றிரவாலென்றலிரவுடம்பட்டாள்போன்று பகலவரலென்றலிரவும்பகலும் வரவொழிகென்றல், காலங்கூறல் கூறுகிக்குற்றல், செலவுகூறல் பொலிவழிவுணர்த்தலென, நீண்டினவியு மியப்புங்கவலை,வாரணிமுலையாய் வரைவுமுடுக்கம்.

(இ-ள்.) வருத்தமிகுதிகூறி வரைவுகடாதல் - பெரும்பரன்மை கூறி மறுத்தல்- உள்ளதுகூறிவரைவுகடாதல்-ஏதங்கூறிப்பிரவுவிலக்கல்-பழிவரவுணர்த்துப்பகல்வரவுவிலக்கல்-தொழுதிரந்துகூறல்-தாயறிவுகூறல்-மந்திமேல்வைத்துவரைவுகடாதல்- காவன்மேல்வைத்துக்கண்டியிலாமைகூறல் - பகலுடம்பட்டாள்போன் றிரவாலவுவிலக்கல்-இரவுடம்பட்டாள்போன்று பகல்வரவுவிலக்கல்- இரவும்பகலும்வரவுவிலக்கல்- காலங்கூறிவரைவுகடாதல்-கூறுகிக்குற்றல்-செலவுநினைந்துணர்த்தல்- பொலிவழிவுணர்த்து வரைவுகடாதல் எனவிவைபதினாறும் வரைவுமுடுக்கமாம். எ-று. அவற்றுள்,

வருத்தமிகுதிகூறிவரைவுகடாதல்.

வருத்தமிகுதிகூறிவரைவுகடாதலென்பது-அலரறிவுறுத்தகாலை, அலரானுங்காவன்மிகுதியானு நீ லைனையெதிர்ப்படமாட்டாதமுதுவரந்தாநின்றவளிடத்து நினைனருளிருக்கவேறவரென்றோவெனத் தலைமகளது வருத்தமிகுதிகூறித் தலைமகனை வரைவுகடாவாரிற்றல். அதற்குச்செய்யுள்.

எழுங்குலைவாணமயிலின்கணிதின்றிளமந்தியந்தண் *
செழுங்குலைவாணமுதிழலிற் றுயிலிலம்பாமுணைமே *
லுழுங்கொலைவேற்றிருச்சிற்றம்பலவரையுன்னலர்போ *
லழுங்குலைவேலன்னகண்ணிக்கென்னோதின்னருள்வகையே. ()

இரவுக்குறியிடத் தேற்றிழைப்பாங் கி
வரைவுவேண்டிதல் வரவுணர்த்த து.

(இ-ள்.) எழுதாநின்ற குலைகளையுடைய வாழைத் திரளின்கணுண்டாகிய இளியகனிகளைத்தின்று இளையமந்தி வளவியகுலையையுடைய அவ்வாழைத்திரளினது நல்லகுளிர்ந்தநிழற்கண் வெருவுகவின்றித்துஞ்சுஞ் சிலம்பையுடையாய், பொரிடத்துழுங் கொலைவேலையுடைய திருச்சிற்றம்பலவரசரினையாதாரைப்போல வருந்தாநின்ற உலைத்தொழிலமைந்த வேல்போலுங்கண்ணையுடையாட்கு நினதருட்கூறியாதோ! இவளதாற்றாமைக்குமருந்தன்றாகுமென்றது.

நின்னருள்வகையென்னோவென்பதற்கு இவ்வாறாகுந்துயிவடிதற்கு இனிநீசெய்யக்கருதியவகை யாதோவென்னினுமமையும். அழுங்கொலைவேலென்பது பாடமாயின், எழுதாநின்றகொலைவேல் போலுங்கண்ணையுடையாட்கென்றுரைக்க. எழுங்குலை-இளங்குலை. செழுங்குலை-முதிர்ந்தகுலை எழுங்கலையு முதிர்ந்தகுலையு முண்டமையான் இடையறாதுபழுக்கும் வாழைத்திரளினது கணுண்டாகிய கனியைநுகர்ந்து, மந்தி வேறொன்றான் வெருவாது அவ்வாழைநிழலின்கீழின்புற்றுத் துயிலுமாறுபோல, ஆரவின்பம் கூடியிடத்து நுகராது நீவளர்ந்துகோடலான் இடையறாதுகூடிப்பிரிந்தபிரிவு, அங்னஞ்சொல்லாதுண்ணடங்காது நின்றாணினிழற்கீழ் இவளின்பந்துறவாழ்தல்வேண்டுமென உள்ளுறைவாணன். மெய்ப்பாடு - முதலும், பயன்-வரைவுகடாதல். (உ௬௫)

பெரும்பான்மைகூறிமறுத்தல்.

பெரும்பான்மைகூறிமறுத்தலென்பது - வரைவுகடாவியதோழிக்கு, யானவளதெய்வமானுடமென்றறிந்து வரைந்துகோடற்கு இக்குன்றிடத்துத் தோன்றாநின்றவிடம் தெய்வமகளிரிடமோ, அன்றிக் குறத்தியரிடமோ, கூறுவாயாகவெனத் தலைமகன் றலைமகளைப்பெரும்பான்மைகூறி மறுத்துரையாநிற்றல். அதற்குச் செய்யுள்.

பரம்பயன்றன்னடியேனுக்குப்பார்விசும்பூடுருவி *
வரம்பயன்மாலறியாததிலைவானவன்வானகஞ்சேர் *

ராம்பையர்தம்மிடமோவன்றிவேழத்தினென்புநட்பு *
குரம்பையர்தம்மிடமோவிடந்தோன்றுமிக்குன்றிடத்தே. ()

குலம்புரி கொம்பர்க்கு ஃ
நிலம்பன் செப்பிய து.

(இ-ள்.) இக்குன்றிடத்துத்தோன்றுமிடம் நில்லையின்வானவன் [illegible] வானரத்தைச்சேர்ந்த தெய்வமகளிர்தமதிடமோ? அன்றி யர் [illegible] யினென்பவேலியாகநட்ட குரம்பைகளையுடைய [illegible] ரிடமோ? நீ கூறுவாயாக எ-று. எல்லாப்பொருட்டும் அப்பாலா யவன், ஆயினுந் தன்னடியேற்குப் பெறும்பயனுயுள்ளான், பா ராயம்விசும்பையமூடிருவிநிற்றலாற் றன்னெல்லையை அயனுமா னுமறியாத நில்லையின்வானவனெனக்கூட்டுக.

என்றது- அவளை யெட்டவுஞ் சுட்டவும்படாத தெய்வமென்றி ருத்தலான், அவள்வாழுமிடத்தை அரம்பையரிடமென்றே கரு துவல், அன்றாயினுமாயென வரைவுடம்படாது கூறியவாறு. மெ ய்ப்பாடு-மருட்சி. பயன்-இரவுக்குறியிடமுணர்த்துதல். (உ௫௪)

உள்ளதுகூறிவரைவுகடாதல்.

உள்ளதுகூறிவரைவுகடாதலென்பது- பெரும்பான்மைகூறி [illegible] றுத்தலைமகனுக்கு,இவ்விடம் எற்றையமுற்றூட்டு, எமக்குற் றூர் குறவரோ, எம்மைப்பெற்றாளோ [illegible] கொடிச்சியேயாரும் [illegible] னங்காப்பாள் சிலர், நீவரைவுமவளுடாமையின் எம்மைப்புனத் துவரைக்கவேண்டுவதில்லையெனப் [illegible] வரைவுதோன்றத் தோ ழி தங்களுண்மைகூறுநிற்றல். அதற்குச் செய்யுள்.

சிறுர்கவண்வாய்த்தமணியிற்சிதைவெ [illegible] *
திறுல்கழிவுற்றெஞ்சிறுகுடிஇற்றூ [illegible] *
பறுவரையுற்றூர்குறவர்பெற்றாளுங்கொடிச்சியேயாரும் *
பெறுவருளம்பலவன்மலைக்காத்தும்பெரு [illegible] (உ௫உ)

இன்மையுரைத்த மன்னனுக் ஞ
மாழைநோக்கி தோழியுரைத்த து.

(இ-ள்.) சிறுர்கையிற்கவண்தப்பாமல் அதுவிட்டமணியாதி சி தைத்தபெருந்தேன், இறுமென்னுமோலசையையுடைத்தாய்,சிறு வினின்றுங்கழிதலையுற்று எமதுசிறுகுடிவைத்தள்ளுமிவ்விடம் எற் றையதுமுற்றூட்டு, எமக்குற்றூர் குறவர், எம்மைப்பெற்றாளோ கொடிச்சியேயாரும் தன்னன்பரல்லது உம்பர்பெறுதலருமை [illegible]

டைய அம்பலவனதுமலைக்கட்பெரும்புனத்தைக்காத்தும், அதனால், நீயிர் வரைவு வேண்டாமையினெம்மைப்புனைந்துரைக்கவேண்டுவதில்லை எ-று.

"கோலவுப் கொகையு மாவயின் வளையார் " என்பதனான், இதுதொடர்நிலைச்செய்யுளாதலிற் குரம்பையர் தம்மிடமோவென்றுவினவப்பட்டவிடம் எஞ்சிறுகுடிதுந்துமிடமெனவும் ஒருபுனத்தைச்சுட்டி இதெந்தையுறுவரை யெனவுங்கூறினளாக வுரைப்பினு மமையும். சிறுமொறிந்தமணிபாற் பெருந்தேன் சிறைதந்து அவ்விறலைவிடுக்கழிந்து, சிறுகுடிலிற்பரந்தாற்போல, அயலார்கூறும் அலரான் றுமதுமறைந்தவொழுக்கம் றுமையினடங்காது பலருமதியவெளிப்படாநின்றதென உள்ளுறைதான்கூறி, மெய்ப்பாடு-மருட்சி. பயன்-குறியிடமுணர்த்துதல். (௨௫௨)

ஏதங்கூறியிரவரவுவிலக்கல்.

ஏதங்கூறியிரவரவுவிலக்கலென்பது- உண்மையுரைத்துவரைவு கடாயதோழி, நீவரைவொடுவாராயாயிற் சிங்கந்திரண்டு தனக்கியானையாகியபுணவுகளைத்தேடுமிருளின்கண், நினதுகைவேல் துணையாக நீவந்தருளாநின்றவிஃதே எங்களுக்குத் துன்பமாகத் தோன்றாநின்றது இனியிவ் விருளிடைவாராதொழிவாயென ஏதங்கூறித் தலைமகனையிரவரவுவிலக்காறிற்றல். அதற்குச்செய்யுள்.

கடந்தொறும்வாரணவல்லியினுடிப்பல்சீயங்கங்கு *
லிடந்தொறும்பார்க்குமியவொருநீயெழில்வேலின்வந்தாற் *
படந்தொறுந்தீரவன்னம்பலம்பணியாரினெம்மைத் *
தொடர்ந்தொறுந்துன்பென்பதேயன்பதின்னருடோன்றுவதே.

இரவருதுயர மேந்தலுக்கெண்ணி ப்
பருவரலெய்திப் பாங்கியகர்ந்த து.

(இ-ள்.) பலவாகியசியம் வாரணமாகியவல்சிகாரணமாகத்தேடிக் கங்குற்பொழுதின்கட் காடுகடோறுங்காட்டினிடங்கடோறுஞ் சென்று, பார்க்கு நெறியின்கட் டனியையாகிய நீ எழிலையுடைய வேல் துணையாக வந்தால், அன்பனே, எம்மிடத்துன்பமாகியதின்னருள் எம்மைவிடாதே தொடர்ந்தொறுக்குந் துன்பமென்னுமுணர்வே எமக்குத்தோன்றுவது. எ-று. படந்தொறுமுண்டாகியதீயையுடைய அரவையணிந்தவனதம்பலத்தைப் பணியாதாரைப் போலவருந்த எம்மையொறுக்குமெனக்கூட்டுக.

என்றது,எமக்கு நீ செய்யுந்தலைவனையை யாங்கள் துன்பமாக வேயுணராநின்றோம் எ-று. நாடுதல்- மனத்தாலாராய்தல். பார்த்தல்- கண்ணுணோக்குதல். வேலினென்னுமைந்தாவது வேலுவின்கண்வந்தது. ஒருக்குமென்பது-ஒருமெனவிடைக்குறைந்துநின்றது. எம்மைநீவிடாதுதொடருந்தொறுமெனினுமமையும் இதற்குத்தொடருமென்பது இடைக்குறைந்துநின்றது. நின்னருளென்னுமெழுவாய்-துன்பமென்னும்பயனிலைகொண்டது. மெய்ப்பாடு-அச்சம். பயன்-இரவுக்குறியதேதங்காட்டிவரைவுகடாதல்.()

பகலிவரவுரைத்துப்பகல்வரவுவிலக்கல்.

பகலிவரவுரைத்துப்பகல்வரவுவிலக்கலென்பது-இவ்விருளிடைவாராதொழிகென்றது பகல்வரச்சொல்லுவாருமெனவுட்கொண்டு,பகற்குறிச்சென்றுநிற்ப,தோழியெதிர்ப்படுப்பகலவந்து எமக்குச்செய்யாநின்றமெய்யாகியவருள் புறத்தாநிற்று வெளிப்பட்டுப்பழியாகப்புகுதாநின்றது, இனிப்பகல்வாவொழிவாயாகவெனப் பழிவருதல்கூறிப் பகல்வரவுவிலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்.

களிறுற்றசெல்லல்களைவயிற்பெண்மரங்கைஞெமிர்த்துப் *
பிளிறுற்றவானப்பெருவரைநாடபெடைதடையோ *
டொளிறுற்றமேனியன்சிற்றம்பலநெஞ்சுறுதவர்போல் *
வெளிறுற்றவான்பழிபாம்பகலீசெய்யுமெய்யருளே. (உ௫௪)

ஆங்னனமொழுகு மடல்வேலண்ணல்ப்
பாங்கியைய பகலவரலென்ற து.

(இ-ள்.) அசும்பின்கட்பட்டுக் களிறுற்றவருக்கதைப்பிடி தீர்க்கின்றவிடத்து மரத்தைக்கையாலுறுத்துப் பிளிறுதலையுற்றவானத்தைத்தோயும் பெரியவரையையுடைய நாடனே, அன்னப்பெடையினது நடைபோலுந்தடையையுடையாளொடுகூடி விளங்குதலையுற்ற மேனியையுடையவனது சிற்றம்பலத்தை நெஞ்சாலுறுதாரைப்போலயாமிடர்ப்பட வெளிப்படுதலையுற்ற பெரியபழியாகாநின்றது நீ பகல்வந்து எமக்குச்செய்யும் மெய்யாகியவருள். எ-று.

மெய்யருளென்றது-மெய்யாகவருளுகின்றுயேனுமென்றவாறு. வ்யியல்லாவழிச்சிறலான் அசும்பிற்பட்டகளிற்றினை வாங்குதற்குப் பிடிமுயலகின்றாற்போல், இவளையெய்துதற்குபாயமலாதவிவ்வொழுக்கத்தினைவிரும்புநின்னை இதனினின்றும் மாற்றுத

ற்று யான்முயலாநின்றேனென உள்ளுறைகாண்க. மெய்ப்பாடு-அது. பயன்- பகற்குறிவிலக்கிவரைவுகடாதல். (உருச)

தொழுதிரந்துகூறல்.

தொழுதிரந்துகூறலென்பது-பகல்வரவுவிலக்கினதோழி, இவளிரவுவரவுங்கூடுமெனவுட்கொண்டு, நின்னையெதிர்ப்பட வேண்டி ஆழுதுவருந்தாநின்ற இவள்காரணமாக, அரிகளும் யாளிக்கும் வெருவி யானைகள் திரண்டு புடைபெயராத மிக்கவிருளிடைக்கண் வாராதொழிவாயாகவென்று, நின்கழல்களைக்கைபாற்றொழுது நின்னையிரந்தேனென வரைவுதோன்றத் தலைமகனைத் தொழுதிரந்துகூறுதிற்றல். அதற்குச் செய்யுள்.

கழிகட்டலைமலைவோன்புலியூர்க்கருகாகவர்போற் *
ஞழிகட்கவிறுவெரீஇயரியாளிகுழீஇவழங்காக் *
கழிகட்டிரவின்வரல்கழல்கைதொழுதேயிரந்தேன் *
பொழிகட்புயலின்மயிலிற்றுவளுமிவள்பொருட்டே. (உருஙு)

இரவரவி னேதமஞ்சி ச்
சுரிதருகுழற் றோழிசொல்லிய து.

(இ-ள்.) பொழியாநின்றகண்ணீற்புனலையுடையதோர்மயில் போலத் துவளாநின்றவிவள்காரணமாக, அரியையும் யாளியையும் வெருவிக் குழிந்தகண்ணையுடையவாகிய யானைகள், ஓரிடத்தே திரண்டுநின்று, அவ்விடத்துநின்றும் புடைபெயராத சிறந்தவச்சத்தைச்செய்யுமிரவின்கண் வாராதொழிவாயாக, நின்கழல்களைக் கைபாற்றொழுது, நின்னையிரந்தேனினது. எ-று. சுழிந்தகண்ணையுடையதலைமாலையைக் கருவிலோனது புலியூரைக் கருதாதானைப் போல வெருவியெனக்கூட்டுக.

ஞழிவழங்காவென்றுபாடமோதி, அரியையும் யாளியையுங் குழியையும்வெருவிவழங்காவென்றுரைப்பாருமுளர். கழி-அச்சத்தைச்செய்யுமியல்பாற் சிறத்தல். கழிகட்டிரவினென்பதற்குக்கழிசிறப்பில்கண்வந்து அரையிரவின்கணென்பது படநின்றதெனினுமமையும். பொழிகட்புயலின்மயிலிற்றுவளுமென்றதனால், இவ்வாறிவளாற்றுளெனினும் நீ வரற்பாலையலையென்றுகூறி வரைவுகடாவினாளாம். வழியிடைவருமேதங்குறித்து இவ்வாறுகின்றவிவள்பொருட்டென்றுரைப்பினுமமையும். கருதரர்மனம்போலென்பது பாடமாயின், மனம்போலுங் கழிகட்டிரவெனவியையும். மெய்ப்பாடு-அது. பயன்-இரவுக்குறிவிலக்கிவரைவுகடாதல். ()

தாயறிவுகூறல்.

தாயறிவுகூறலென்பது - தொழுதிரந்துகூறவும், வேட்கைமிக வாற் பின்னுங்குறியிடைச்சென்றுநிற்ப, அக்குறிப்பறிந்து, நங்காணலிடத்து அரையிரவின்கண் ஒருதேர்வந்ததுண்டாகக் கூடுமெனவுட்கொண்டு, அன்னை சிறிதேகண்ணுஞ்சிவந்து என்னையும்பார்த்தாள், இருந்தவாற்றான் இவ்வொழுக்கத்தையறிந்தாள்போலுமெனத்தோழி தலைமகளுக்குக்கூறுவாள்போன்று சிறைப்புறமாகத் தலைமகனுக்கு வரைவுதோன்றத் தாயறிவுகூறுநிற்றல். அதற்குச் செய்யுள்.

விண்ணுஞ்செலவறியாவெறியார்கழல்விழ்சடைத்தீ *
வண்ணன்சிவன்றில்லைமல்லெழிற்கானலரையிரவி *
னண்ணன்மணிநெடுந்தேர்வந்ததுண்டாமெனச்சிறிது *
கண்ணுஞ்சிவந்தன்னையென்னையுநோக்கினள்காரிமயிலே (உ௫௩)

சிறைப்புறத்துச் செம்மல்கேட் ப
வெறிக்குழற்பாங்கி மெல்லியற்குரைத்த து.

(இ-ள்.) கார்காலத்துமயிலையொப்பாய், நிலையில்வளவியவெழிலையுடையகானலிடத்து அரையிரவின்கண் மணிகளையுடையதலையாயதொருநெடுந்தேர் வந்ததுண்டாகக்கூடுமெனவுட்கொண்டு, அன்னை சிறிதேகண்ணுஞ்சிவந்து, என்னையும்பார்த்தனள், இருந்தவாற்றான், இவ்வொழுக்கத்தினையறிந்தாள்போலும். எ-று. விண்ணுளாராலும் எல்லாப்பொருளையுங்கடந்தப்பாற்சென்ற செலவையறியப்படாத நறுநாற்றமார்ந்தகழலினையுந் தாழ்ந்தசடையினையுமுடையதிவண்ணன், சிவன், அவனதுநில்லையெனக்கூட்டுக.

எல்லாப்பொருளையுங்கடந்து நின்றனவாயினும், அன்பர்க்கணியவாய் அவரிட்டதுமலராகி வெறிகமழுமென்பது போதர வெறியார்கழலென்றார். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-படைத்துமொழியால்வரைவுகடாதல். (உ௫௩)

மந்திமேல்வைத்துவரைவுகடாதல்.

மந்திமேல்வைத்துவரைவுகடாதலென்பது - சிறைப்புறமாகத் தாயறிவுகூறிச் சென்றெதிர்ப்பட்டு, ஒருகடுவன் நல்மந்தித்குமரங்கனியைத் தேனின்கட்டோய்த்துக்கொடுத்து, நகர்வித்துத் தம்மூளின்புறவுதுகண்டு, இது நங்காதலர்க்கு நம்மாட்டிரையிற்றெனநீவரையாமலையைநினைந்தாற்றாளாயினளென மந்திமேல்வைத்துத் தலைமகனுவருத்தங்கூறிவரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வான்றோய்பொழிலெழின்மாங்கனிமந்தியின்வாய்க்கடுவன் *
றேன்றோய்த்தருத்திமகிழ்வகண்டாடிருநீண்முடிமேன் *
மீன்றோய்புனற்பெண்ணைவைத்துடையாளையுமேனிவைத்தான் *
வான்றோய்மதிற்றில்லைமாநகர்போலும்வரிவளையே. (உ௫௭)

வரிவளையை வளாவுகடா வி
யரிவைத்தாழி யுளைபகர்ந்த ௩.

(இ-ள்.) நீண்டதிருமுடிக்கண் மீனைப்பொருந்திய புனலாகிய பெண்ணைவைத்து எல்லாவற்றையு முடையவளையுந் திருமேனிக் கண்வைத்தவனது வானைத்தோயுமதிலையுடைய தில்லையாகிய பெரியநகரையொக்கும் வரிவளை, வானைத்தோயும் பொழிலின்கணுள்ளதாகிய நல்லமாங்கனியைக் கடுவன் தேனின்கட்டோய்த்து மந்தியின்வாய்க்கொடுத்து மகிழ்வித்துத் தம்முளின்புறுமவற்றைக் கண்டாள் எ-று.

என்றதனால், துணைபுறங்காக்குங்கடுவனைக்கண்டு, விலங்குகளுமிவ்வாறு செய்யாநின்றன, இதுநங்காதலர்க்குநம்மாட்டரிதாயிற்றென்ன நீவளையாமையைநினைந்தாற்றாளாயினளென்றாளாம். அருத்தியென்பதற்கு-நெடுஞ்சுரநீந்தியென்றதற்குளாத்தலுக்கு வான்றோய்பொழிலென்பதுஉபபாடம். வரிவளையைவளாவு- வரிவளையைவளாதல். மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்தபெருமிதம். பயன்- வளாவுகடாதல். (உ௫௭)

காவன்மேல்வைத்துக்

கண்டுயிலாமைகூறல்.

காவன்மேல்வைத்துக்கண்டுயிலாமைகூறலென்பது-மந்திமேல்வைத்துவளாவுகடாவப்பட்டதலைமகன், இது நங்காதலியிடத்து நமக்கரிதாயிற்றெனத் தானுமாற்றாதுய், இரவுக்குறிசென்றுநிற்ப, அந்நிலைமைக்கண் இவ்விடத்துள்ளார், இவள் காவற்பறைகேட்டுந்தோறுங் கண்டுயிலாமைக்குக்காரணமென்னோவெனத் தம்முட்கூறுநிற்றல். இதுவுஞ்சிறைப்புறமாகவளாவுகடாதலைப்பயக்கும் அதற்குச்செய்யுள்.

நறைக்கண்மலிகொன்றையோனின்றுநாடகமாடுநில்லைச் *
சிறைக்கண்மலிபுனற்சீர்தகர்காக்குஞ்செவ்வேலிளைஞர் *
பறைக்கண்பயிற்றிப்பயிற்றோறும்பட்டாமுலைப்பட்டநெஞ்சுடையாள் *
கறைக்கண்மலிகனிர்வேற்கண்படாதுகலங்கினவே. (உ௫௮)

தலைவி காவலி[illegible]ன்
மிகுகழி காத[illegible]ல்.

(இ-ள்) நறுநாற்றத்தையுடைய தேன்மலிந்தகொன்றையையுடையவன் நின்றுகூத்தாடுந்தில்லையாகிய சிறையிடத்து அதுபொருமன் மிகும்புலவையுடைய சீரியதகவா இராப்பொழுதிற்கட்காக்குஞ்செவ்வேலையுடைய இளைஞரதுபறைக்கண் படுந்தோறும்படுந்தோறும், படக்கடவவல்லாத முல்லையையுடைய பைந்தொடியாளுடைய கறை தன்கண்மிக்க கதிர்வேல்போலுங்கண்கள் ஒருகாலும்படாவாய் வருந்தின ஏறு.

நாடகமென்றது-ஈண்டுக்கூத்தென்னுந் துணையாய்நின்றது. கலங்கினவென்பதற்குத் துயிலாகமையான் நிறம்பெயர்ந்தனவென்றும் அழுதுகலங்கினவென்றுமுரைப்பாருமுளர் காவல்மிகுதியும் ஐவளகாற்றுமையுங்கூறி வரைவுகடாயவாறு இஃதின்னார்கூற்றென்னாது துறைகூறியகருத்து. மெய்ப்பாடு- அழுகை. பயன்- வரைவுகடாதல். (உ௫அ)

பகலுடம்பட்டாள்போன்

நிரவரவுவிலக்கல்.

பகலுடம்பட்டாள்போன்றிரவரவுவிலக்கலென்பது-சிறைப்புறமாகக்கண்டுயிலாமைகேட்டதலைமகன், ஆதாவுமிகவலெதிர்ப்படலுற்றுநிற்பத் தோழியெதிர்ப்பட்டு, நீவந்தொழுகாநின்ற இப்புலராவிரவும் பொழியாமழையும் புண்ணிலகணுமழையும்வேல் மலராம்படி யெங்களைவருத்தாநின்றன, இதற்கொரு மருந்தில்லையோ நும்வரையிடத்தெனப் பகலுடம்பட்டாள்போன்றிரவரவு விலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

கலராயினர்நினைபாத்தில்லையம்பலத்தான்கழற்கன் *
பிலராயினர்வினைபோலிருடேங்கிமுழங்கிமின்னிப் *
புலராவிரவும்பொழியாமழையும்புண்ணின்னுழையவேல் *
மலராவருமருந்தும்மில்லையோநும்வரையிடத்தே. (உ௫௪)

விரைதரு தா[illegible]ரோ
யிரவர லென்ற[illegible]து.

(இ-ள்.) நீமக்களாயுள்ளார்கருதாத தில்லையம்பலத்தானுடைய திருவடிகட்கு அன்புடையரல்லாதாரது தீவினைபோல இருள்செறிந்துபுலராதவிரவும், மின்னிமுழங்கிப்பொழியவுமாம்பொழியாதமழையும், எமக்குப்புண்ணின்கணுழையுமவேல் மல

ராம்வண்ணங்கொடியவாய் வாராதின்றன, இதற்கொருமருந்துமி ல்லையோ நும்வரையிடத்து! எ-று.

மருந்தென்றமையான் வரையிடத்தென்றாள் ஒருநிலத்துத்தலை மகளுதலின், நும்வரையாகிய இவ்விடத்திற்கோர்மருந்திலையோவென ஓருலகவழக்காகவுரைப்பினுமமையும். வருந்துதலேயன்றித் தணிக்கலுமுண்டோவென்பதுபடநின்றமையின், மருந்துமென்னுமும்மை- எச்சவும்மை. இரவின்கண்வந்தொழுகாநிற்பவும், இரவுறுதுயரந்தீர்க்கு மருந்தில்லையோவென்றுகூறினமையான், வரைவல்லது இவ்வாறொழுகுதலை அதற்குமருந்தன்றென்று கூறினாளாம். மெய்ப்பாடு-அழுகை. பயன்-இரவுக்குறிவிலக்குதல்.

இரவுடம்பட்டாள்போன்று

பகல்வரவுவிலக்கல்.

இரவுடம்பட்டாள்போன்றுபகல்வரவுவிலக்கலென்பது - இவள் மருந்தில்லையோவென்றது யான் இரவுக்குறிச்செல்லின் மழைக்காலிருளாலெதிர்ப்படலருமையான் வேட்கையற்றுப் பகற்குறியுடம்பட்டாளெனவுட்கொண்டு, பகற்குறிச்செல்லாநிற்ப, நீ தாழியெதிர்ப்பட்டு, பகல்வந்தருளாநின்றது அவளுக்குவருகுறிமுறைம்படியாக மிக்கவலராகாநின்றது, அதனைப் பகற்குறிவரற்பாலையன்லையென, இரவுக்குறியுடம்பட்டாள்போன்று பகற்குறிவிலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

இறவரையும்பர்க்கடவுட்பராய்நின்றெழிலியுன்விக் *
குறவரையார்க்குங்குளிர்வளர்நாடகொழுப்பவள *
நிறவரைமேனியன்சிற்றம்பலநெஞ்சுறுகவர்போ *
லுறவரைமேகலையாட்கலராம்பகலுன்னருளே. (உகூ)

இகலடு வேலோ ய்
பகல்வர லென்ற து.

(இ ள்.) தொடர்ந்துபெய்யாநிறுதலான் எழிலிபெய்தலைநினைந்து மலைமேலுறையுந்தெய்வங்களைப்பராவிக்குறவர்நின்றாப்பரவஞ்செய்யுங்குளிர்ந்தவளர்மேலுண்டாகிய நாட்டையுடையாய், கொழுவியபவளமாகிய நிறத்தையுடைய வரைபோலுந் திருமேனியையுடையவனது சிறறம்பலத்தை நினையாதவரைப்போலவருந்த, அவர்க்கணிந்தமேகலையையுடையாட்குப் பகலுண்டாமுலகருள் மிக்கவலராகாநின்றது, அதனுனீவாரல எ-று.

குறவரையென்பழி ஐகாரம்-அசைநிலை. அசைநிலையென்றது

ருமலையென்றுரைப்பாருமுளர். வன்னையுடையதாடெனினுமமையும். குறவர் பரவும்பருவத்துத்தெய்வத்தைப்பரவாது, பின்மழைமறத்தலானிடர்ப்பட்டி அதனைமுயல்கின்றாற்போல, நீயும்வாயுங்காலத்துவரையாது, இவளைப்பெய்துறத்கரிதாகியவிடத்துத் துன்புற்றுவரையாமுயல்வையென உள்ளுறைகாண்க. "உள்ளுறைதெய்வ மொழிந்தவை நிலனெனக்-கொள்ளு மென்ப குறிபறிந்தோரே,, என்பவாகலிற் றெய்வத்தைநீக்கியுவமைகொள்க. மெய்ப்பாடு-அது பயன்-பகற்குறிவிலக்குதல். (உகஅ)

இரவும்பகலும்வரவுவிலக்கல்.

இரவும்பகலும்வரவுவிலக்கலென்பது-இரவுடம்பட்டாள்போன்று பகல்வரவுவிலக்கலானதோழி,நீபகல்வரின் அலர்மிகுதியானெங்களுக்குமிகபழிவந்தெய்தும் இராவரின் எவ்வாற்றானுநின்னையெதிர்ப்படுதலருமையாற் சிறிதும்பயனிலை அதனாலை நீ யிருபொழுதும்வரற்பாலையல்லையென இரவும்பகலும் வரவுவிலக்கா நிற்றல் அதற்குச்செய்யுள்.

சுழியாவருபெருநீர்சென்னிவைத்தென்னைத்தன்றொழும்பிற் *
கழியாவருள்வைத்தசிற்றம்பலவன்காரத்தருமான் *
விழியாவரும்புரிமென்குழலாடிநத்தையமெய்யே *
பழியாம்பகல்வரினீயிரவேதும்பயனில்லையே. (உகக)

இரவும் பகலு ம்
வரவொழி கென்றது.

(இ-ள்.) ஐயனே,நீபகல்வரிற் சுருண்டமெல்லியகூழலையுடையாடிநத்து மெய்யாகவே அலருண்டாம். இராவரின் எதிர்ப்படுதலருமையாற் சிறிதும்பயனில்லை,அதனான் நீயிருபொழுதும்வாரல். எ-று. சுழியாநின்றுவரும் பெரியநீரைச்சென்னியின்கண்வைத்துத் தனக்குத்தொண்டுபடுதற்கண் என்னை நீங்காத தன்னருளான்வைத்த சிற்றம்பலவனது காத்தின்கண்வைக்கப்பட்டமான்போலவிழித்துவரும் புரிமென்குழலானெனக்கூட்டுக.

பரந்துவரும்பெரும்புனலை வேகந்தணித்துத் தன்சென்னியின்கண்வைத்தாற்போல நில்லாதுபாக்கு நெஞ்சையுடையேனைத் தன்னருட்கணடக்கினானென்பது கருத்து.தன்றொழும்பினின்றும் யானீங்காமைக்குக் காரணமாகிய அருட்கணென்னைவைத்தவனெனினுமமையும். மெய்ப்பாடு-அது. பயன்-இரவுக்குறியும்பகற்குறியும்விலக்கி வரவுகடாதல். (உகஉ)

காலங்கூறிவரைவுகடாதல்.

காலங்கூறிவரைவுகடாதலென்பது-இருபொழுதும்வரைவுவிலக்கினைநோழி, மதி நிரம்பாநின்றது,வேங்கை பூவாநின்றன, இனிநினக்குவரைவொடிவருதற்குக் காலமிதுவெனக் காலங்கூறிவரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மையார்கதலிவனத்துவருக்கைப்பழம்விழுதே *
வெப்பாதயின்றிளமந்திகள்சோருமிருஞ்சிலம்பா *
மெய்யாவரியதெனம்பலத்தான்மதிபூர்கொள்வெற்பின் *
மொய்யார்வளரிளவேங்கைபொன்மலையின்முன்னினவே உகஉ

மூந்தியபொருளைச் சிந்தையில்வைத் து
வரைதருகிளவியிற் றெரியவுரைத்த து.

(இ-ள்.) இருளார்ந்தவாழைக்காட்டின்கண் வருக்கைப்பலாவின்பழம்விழுதலா லுண்டாகியதேனை இளையமந்திகளறியாதேபுண்டு பின்களியாற்சோரும் பெரியசிலம்பையுடையாய்,மதி நிரம்பாநின்றது, அம்பலத்தானுடைய இவ்வெற்பின்கட்செறிவார்ந்த வளராநின்றவிளையவேங்கைகள் பூத்துப் பொன்மலைபோலத் தோன்றின,இனி மெய்யாகவுனக்கரியதியாது! எ-று.

கதலிவனத்துண்டாகியதேனென்றதனாற் கதலிக்கனியொடுகூடுதல்பெற்றாம். ஊர்கோடல்- குறைவின்றி மண்டலமாகவொளிபரிதல். அல்லதூஉம் பரிவேடித்தலெனினுமமையும். திண்மலைக்கண் விலங்குகளுயிர்த்தன்மைத்தாகிய தேனைக்குறியாதுண்டி இன்புறுநின்றனவாகலிற் குறித்தவற்றினினக்கரியதியாது இதுவன்றோபருவமுமென வரைவுபயப்பக்கூறியவாறாயிற்று. மந்திகடேருமென்பது பாடமாயின், தேனையறியாதுண்டி அதன்களைமிகுதியாற் பின்னதனைத்தேர்ந்துணருமென்றுரைக்க வேட்டபொருள் உள்ளத்துமுற்பட்டுத்தோன்றுதலின்,வரைவை மூந்தியபொருளென்றார். வரைதருகிளவி - வரையுங்கிளவி. மெய்ப்பாடி-பெருமிதம். பயன்-வரைவுகடாதல். (உகஉ)

கூறுவிக்குற்றல்.

கூறுவிக்குற்றலென்பது - காலங்கூறிவரைவுகடாவவும் வரைவுடம்படாமையின் அவடன்னைக்கொண்டே கூறுவிப்பாளாக,அலராண்வருநாணினையுங் காணுமையான்வருமாற்றாமையையும் பற்றிக் கிடந்த நம்மல்லல நம்மாற் றலையளிக்கப்படுவார் இவ்வாறுவரு

ந்துறறகாதெனத் தாமாகவறிகின்றிலராயின் நாஞ்சொல்லுந்தன்
மைகளென்னோவெனப் புலந்து, நீயாகிலுஞ்சென்றுகூறென்ப
து குறிப்பாற்றோன்றத் தலைமகன் வரைவுடம்படாமையைத் தோ
ழி தலைமகட்குக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

தேமாம்பொழிற்றில்லைச்சிற்றம்பலத்துவிண்ணோர்வணங்க *
நாமாதரிக்கநடம்பயிலவோணநண்ணுதவரின் *
வாமான்கலைசெல்லநின்றார்கிடந்தநம்மல்லல்கண்டாற் *
றுமாவறிகிலராயினென்னுஞ்சொல்லுந்தன்மைகளே. (உ௬௩)

ஒத்ததொவ்வா துரைத்தலோ ழி
கொத்தவிழ்கோதையாற் கூறுவிக்குற்ற து.

(இ-ள்.) தேமாம்பொழிலையுடையதில்லைச் சிற்றம்பலத்தின்க
ண் விண்ணோர்வணங்கவும் நாம்விரும்பவுங் கூத்தைச்செய்வானை
ச் சோதானைப்போல வருந்த, அழகுமாட்சிமைப்பட்ட மேக
லைகழலும்வண்ணங்கண்டு தலையளிசெய்யாதுநிற்கவர் பெருகிக்
கிடந்தநம்மல்லலைக்கண்டால், நம்மாற் றலையளிக்கப்படுவார் இவ்
வாறுவருந்துதற்காதென்று தாமாகவறிகின்றிலராயின், நாஞ்சொ
ல்லுமியல்புகளென்! எ-று.

வாமம் - வாமனவிடைக்குறைந்துநின்றது. அலரான்வருநா
ணினையுங் காணுமையான்வருமாற்றாமையையும் பற்றிக் கிடந்தந
ம்மல்லலென்றாள். ஒத்ததொவ்வாதென்பதனை ஒத்துமொவ்வாம
லெனத்திரிக்க. தலைகாவது - இராவருதலுடம்படாள்போன்று
பகல்வாரலென்றலுந், பகல்வருதலுடம்பட்டாள்போன்று இரா
வாரலென்றலுந், பின் இருபொழுதையுமறுத்தலும். (உ௬௩)

செலவுநினைந்துரைத்தல்.

செலவுநினைந்துரைத்தலென்பது-வரைவுடம்படாமையிற் றோ
ழிதலைமகனோடிபுலந்துகூறக்கேட்டு, அக்குறிப்பறிந்து, இக்கல்ல
தரின்கணீர்வந்தவாறென்னோவெனக் கவினவுவாரைப்பெற்றேமா
யின் இத்தன்மையையுடைத்தாகிய மிக்கவிருளின்கண் யாமவரு
ழைச்சேறலரிதன்று, செல்றேமாயினும் அவ்வாறுசொலுவாரி
ல்லையெனத் தலைமகள் செலவுநினைந்துகூறுநிற்றல். அதற்குச்செ
ய்யுள்

வல்லியினெண்ணுவளர்புத்தகழுமல்குமிருளிவரப் *
செல்வரிதன்றுமலர்சிற்றம்பலவரைச்சேறலர்போற் *
கொல்கரியீயங்குறுகாவதைகைபிடிதாரிடைச்செல் *
லல்லதென்வந்தவாறென்பவர்ப்பெற்றார்மயிலே. (உ௬௪)

பாக்கிறெருங்கப் பணிமொழிமொழிந்
தேங்கமழ்நிலம்பற்றுச் சிறைப்புறக்கிள

(இ-ள்.) கார்காலத்துமயிலைபொப்பாய், சிற்றம்பலவனைச் சேராதாரைப்போல வருந்தச் சீயங் கொக்கரிபடசென்றணையாகவுண்ணம் பிரிந்தானிரண்டற்குமிடையேசென்று புருங்கல்லதிரின் கண் நீர்வந்தவரறெங்ஙனேயென்று சொல்லுவாரைப் பெற்றேமாயிற் குரும்பியாபெவுணவுகாரணமாகக் கரடி உபரிந்தபற்றை பகழாதிற்ப மிகாதின்றவிருவின்கண் அவரிருந்தவழிச்சேறலரிதன்று,சென்றேமாயினும் அவ்வாறுசொல்லுவாரில்லை. எ-று.

செல்லரிதென்பது- செல்வுழிக்கணென்பதுபோல மெய்யீந்துடம்படுமெய்.* செல்லவென்பதுகடைக்குறைந்துநின்றதெனினுமமையும். மன்- ஒழியிசைக்கண்வந்தது. கல்லதர்-கற்கண்ணதர்.கல்லதரினென்பது பாடமாயின்,வந்தவரறெல்லென ஒருசொல்வருவித்துரைக்க. பணிமொழி மொழிந்தென்பதனை மொழியவெனத்திரித்து,சிறைப்புறக்கிளவியாயிற்றெனவொருசொலவருவித்துரைக்க சிறைப்புறக்கிளவியாயிற்றெனவே,சிறைப்புறமாதல் குறித்தாளல்லளென்பதுபெற்றாம் இவையிரண்டற்கும் மெய்ப்பாடு- அழுகையச்சார்ந்தவிளிவரல்.பயன்-அது. (உஎஎ)

பொலிவழிவுரைத்துவலைவுகடாதல்

பொலிவழிவுரைத்துவலைவுகடாதலென்பது-தலைமகள் தன்னை யெதிர்ப்படலுற்றுவருந்தாதின்றமை சிறைப்புறமாகக்கேட்டதலைமகன் குறியிடைவந்துநிற்ப,தோழியெதிர்ப்பட்டு,எல்லையாது காவலை நீவி நின்வயத்தளாய்நின்று பொலிவழிந்து வருந்தாதின்றவளை நீவரைந்துகொள்ளாது இவ்வாறிகழ்ந்து மறித்தற்குக் காரணமென்னோவெனத் தலைமகளதுபொலிவழிவுகூறி வரைவுக

---

* "உயிரீற்றின்முன் உயிர்முதல்வரின் உயிரோடுயிர்க்கு மயக்கமின்மையிற் புணர்ச்சியின்றி விட்டிசைத்து நிற்குமாதலின், உடம்படாதலவ்விரண்டு முடம்படுதற்பொருட்டு இடையேவருமெய்யை உடம்படுமெய்யென்பவாகலின், வருமுயிரேறியொற்றுமைப்பட்டுப் புணர்த்தற்குரிய மெய்யீற்றின் வழித்தோன்றுமெய்யை உடம்படுமெய்யென்பது பொருத்தாது.,, தன்னூல்விருத்தி ராகஉ-ஞ்.

"விண்வத்துக்கொட்கும். எம். செல்வுழிச்செல்க. எம். சார்வுழிச்சார்ந்தாகுதலையன். எம். மெய்யீற்றுமுன் உயிர்வருங்கால் இங்ஙனமுடம்படு மெய்யன்றெனக்கூறும் வகரந்தோன்றின.,, ரசுநம-ஞ்திரம்.

"விண்வத்துக்கொட்கும்ணன்றதமர - என்புழி வகரம் உடம்படாதவிற்றை உடம்படுத்த வந்ததல்லாமையின், இன்னோரன்னவை உடம்படுமெய்யெனப் பெயர்பெறுமாறில்லையென்பது,,, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.

டாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வாரிக்களித்தின்மருப்புகுமுத்தம்வளைமகளிரி *
வேரிக்களித்தும்விழுமலைநாடனிரிதிரையி *
ணரிக்களிக்கவிரதன்மாச்சடைமுடிநம்பரிதில்லை *
பேரிக்களிக்கருமஞ்ஞையிற்றீர்மையெல்லைப்பெய்துவதே. (உ௯௫)

வரைவுவிரும்பு மன்னுயிர்ப்பாங் கி
விளைதருகுழலி மெலிவுரைத்த து.

(இ-ள்.) களிற்றின்மருப்புக்களினின்றுமுக்க முத்துக்களை வளைபின்வாழுமகளிர் வேரிக்குவிலையாக முகந்துகொடுக்குஞ் சிறந்த மலைக்கணுண்டாகிய நாட்டையுடையாய், விரியுந்திரையையுடையயாறுகிய பெண்ணிற்குக்கொடுத்தற்குப் பொருந்திய நல்லபெரிய்சடைமுடியையுடைய நம்பரது தில்லையினுளாகிய வளர்யுடைய இக்களிக்கருமஞ்ஞையைபொப்பாள் தன்றன்மையையிழந்து இத்தன்மையையெய்துவதென்! நீயமர். எ று.

மலையையுடையநாடெனினுமமையும். விரிதிரையினென்பது அவ்வழிச்சாரியை. விரிதிரையையுடைய நாரியெனினு மமையும் நாரிக்களித்தமென்பது பாடமாயின், நாரிக்களித்தலால் அவளருளுச்சடையென்றுரைக்க. களிக்கருமஞ்ஞை - களியையுடைய கரிய மஞ்ஞை அணைதற்கரியகளிற்றின்மருப்பினின்றுமுக்க முத்தத்தினருமையைக்கருதாது தமக்கின்டஞ்செய்யும் வேரிக்குக் கொடுத்தாற்போல், என்னையாது காவலைநீவி, நின்வயத்தனாகியவி வளதருமைகருதாது நினக்கின்பஞ்செய்யுங் களவொழுக்கங்காரணமாக இகழ்ந்து மதித்தாயென உள்ளுறைகாண்க. மெய்ப்பாடும் பயனும்-அவை. (உ௯௫)

வரைவுமுடுக்க முற்றிற்று.

வரைபொருட்பிரிதல்.

வரைபொருட்பிரிதல்வருமாறு-சூத்திரம்.முலைவிலைகூறல்வரைவுடம்படுத்தல், வரைபொருட்கேகலை புரையவட்கென்றவிகூறென்றல் சொல்லாதேகல், பிரிந்தமைகூற னெஞ்சொடுகூற, னெஞ்சொடுவருந்தல் வருத்தங்கண்டுரைத்தல், வற்புறுத்தல்லொடு வன்புறையழிதல், வாய்மைகூறன் மன்னவன்மெய்யுரை, தேறுதுடிலம் பல் காலமறைத்துரைத்த, தூதுவரவுரைத்த தூதுகண்டழுங்கல்,

மெலிவுகண்டு செவிலிபுரைத்தல், மேவியசெவிலி கட்டுவைப்பி க்கலுங்கலக்குற்றநிற்றல் கட்டுவித்திகூறல், வேலனையழைத்த லின் னலிப்தல், விலக்கநினைத்த விலைமையுரைத்தல், அறத்தொடுநிற்றலை யறத்தீர்த்தல், வலன்வெறிவிலக்கல் செவிலிக்குத்தொழிபறத்தொடு நிற்ற னற்றாய்க்குச்செவிலி, யுறத்தொடுநிற்ற தோழிவரவுரைத்தல், மணமுரசுகேட்டுமகிழ்ந்துரைத்த, லையுற்றுக்கலக்க லவனிரிகாட் ட, லாறைத்துடனேகூறியமூன்றும், விரைமலர்க்குழலாய் வரை பொருட்பிரிதல்.

